www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1 - 15 ஜூன் '90
5 — 14
விலை ரூ.2.00

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு



www.padippakam.com

திருச்சி பொன்மலை
ரயில்வே பணிமனை:




# வட்டிக் கொடுமை வளர்கிறது! தற்கொலைகள் தொடர்கிறது!

வட்டிச் சுரண்டல் கொடுமையின் கரங்கள் தொழிலாளர்களை நெறித்து வருகின்றன. தொழிலாளர்கள் வட்டிக்காரர்களின் கொடுமைக்கும், மானபங்கப்படுத்தலுக்கும் பயந்து வேலைக்கு வருவதில்லை; தாங்களாகவே பணி ஓய்வு பெற்றுக் கொண்டு விடுகிறார்கள்; தற்கொலை செய்து கொண்டு உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள்.

16.5.90- அன்று மதியம் ஒருமணி அளவில் ராஜேந்திரன் (TNO. 6292/ DSL) தனது வீட்டில் (ப்ளாட் எண் 28/4) தூக்கு போட்டுத் தற்கொலை செய்து கொண்டார். பொன்மலை பணிமனை ஸ்டோரில் சீனியர் கலாசியாக வேலை செய்யும் அலெக்ஸ் என்கிற ஏ.அலெக்சாண்டரிடம் (TNO: 8731) அதிக அளவில் கடன்பட்டு கடனைத் திரும்பச் செலுத்த முடியாத நிலையில் ராஜேந்திரன் இரண்டு மாதங்களாக வேலைக்கே வரவில்லை. 16.5.90 அன்று வேலைக்கு வந்த ராஜேந்திரனை அலெக்சாண்டர் மற்றும் அவனது கைக்கூலிகள் சேர்ந்து கொண்டு பணிமனைக்குள்ளேயே வட்டிப்பணம் கேட்டிருக்கிறார்கள். ராஜேந்திரன் தனது நிலைமையை எடுத்துச் சொல்லியும் கேட்காமல் அவர்கள் அவமானகரமாகப் பேசி அடித்திருக்கிறார்கள். ராஜேந்திரன் மனமொடிந்து போயிருக்கிறார். கடனும் திருப்ப முடியாது. மானத்தோடு இனியும் தன்னால் வாழமுடியாது என்ற நிலையில் அவர் தற்கொலை செய்து கொண்டுவிட்டார்.

முன்பு முருகேசன் (TNO: 6705) என்பவர் ரயில்முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். அப்போது தனது பாக்கெட்டில் தற்கொலைக்கு அலெக்ஸாண்டர் தான் காரணம் என்று எழுதி வைத்திருக்கிறார். உடனே கடிதத்தை முருகேசனின் உறவினர்கள் மற்றும் போலீஸ் உதவியுடன் மறைத்து விட்டான் அலெக்சாண்டர்.

இப்போது ராஜேந்திரன் தற்கொலைக்குப் பிறகும் அவரது பாக்கெட்டிலும் கடிதம் இருந்ததை தகவல் கிடைத்ததுமே அலெக்ஸின் ஆட்கள் கைப்பற்றி விட்டனர். ராஜேந்திரனின் மனைவி மற்றும் தாயாரை மிரட்டி உண்மை வெளியே வரவிடாமல் செய்து விட்டனர்.

விபரம் அறிந்த ரயில்வே ஓர்க்கர்ஸ் யூனியன் (RWU) பிரச்சினையில் தலையிடுவது தெரிந்து போலீசும் தன் பங்குக்கு அலெக்சாண்டரை விசாரணை செய்வது போல நாடகமாடி முடித்துவிட்டது.

அலெக்சாண்டரின் கொட்டம் உள்ளே மட்டுமல்ல, வெளியே அவன் வாழும் திருச்சி பாலக்கரை துரைசாமிபுரத்திலும் கோலாகலமாக நடக்கிறது. விண்மீன் இளைஞர் நற்பணி மன்றம் வைத்துக் கொண்டு தெருவில் வசிக்கும் ஏழை மக்களிடம் வட்டிக்கு விடுவதும், திரும்பக் கட்டமுடியாதவர்களை மிரட்டி அவர்கள் வசிக்கும் இடங்களைப் பறித்துக் கொள்வது போன்ற அராஜக, சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகிறான் அலெக்ஸ். இவனுக்குப் பக்கபலமாக இருப்பவர் இவரது மாமனார் குழந்தை நடராஜன், உள்ளூர் தி.மு.க. பிரமுகர். இவர் மட்டுமா? கிறித்தவப் பிரதிநிதி இருதயம் அந்தோணி மற்றும் அடைக்கலம் ஆட்டோமொபைல்ஸ் உரிமையாளர் நெப்போலியன் ஆகியோரும் அலெக்ஸோடு கூட்டுச் சேர்ந்து சமூக விரோத குற்றங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

வெளியே ஒரு கும்பல்; உள்ளே நிர்வாகமும், அலெக்ஸ் மற்றும் பல கைக்கூலிகள் உறுப்பினராக இருக்கும் சதர்ன் ரயில்வே மஸ்தூர் யூனியன் போன்ற போலித் தொழிற்சங்கங்களும். இந்தக் கூட்டுக் கும்பல்தான் தொழிலாளர்களை அடக்கிச் சுரண்டி வருகிறது. சிலரை ஒரு சில நாள் ஏமாற்றலாம்; பலரை பலநாள் ஏமாற்றி வரலாம்; எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது. இவர்கள் மூடி மறைத்தாலும் RWU உண்மைகளை வெளியே கொண்டுவராமல் ஓயாது!— **ரயில்வே ஓர்க்கர்ஸ் யூனியன், (RWU), பொன்மலை.**

# பஞ்சாலை தொழிலாளர்களின் போராட்டம்

- *480 நாள் வேலை செய்த தொழிலாளர்களை நிரந்தரமாக்கு!*
- *பிடித்தம் செய்த சம்பளத்தை திருப்பிக் கொடு!*
- *அனைவருக்கும் ஒரேவிதமான பஞ்சப்படி வழங்கு!*

முதலான கோரிக்கைகளை வலியுறுத்தி போராடி வருகிறார்கள் ஊற்றங்கரை, அறந்தாங்கி, தேனி, கமுதி, ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்கள் கடந்த 20.4.90 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

தொழிற்சங்கங்களுடன், தான் செய்து கொண்ட துரோக ஒப்பந்தத்தை நியாயப்படுத்தி, தொழிலாளர்களை ஏற்றுக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கிறது நிர்வாகம். இந்த ஒப்பந்தத்தில் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் கையெழுத்திடவில்லை. எனவே, இச்சங்கத்தை நம்பி தொழிலாளர்கள் போராட்டம் தொடங்கிய பொழுது, தலைமையோ, தொழிலாளர்களை வேலைக்குச் செல்லுமாறும், வேலைக்குச் செல்பவர்களுக்கு கமிஷனர் ஸ்ரீபால் மூலம் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும் அறிவித்தது. தொழிலாளர்கள் யாரும் கேட்கவில்லை. தலைமையின் அறிவிப்பை தூக்கியெறிந்துவிட்டு தன்னெழுச்சியாகப் போராட்டத்தில் குதித்தனர்.

22.4.90 அன்று ஊற்றங்கரை ஆலைவாயில் கூட்டத்தில் AITUC சார்பில் பாலன் என்பவரையும், புதிய ஜனநாயக வாசகர் வட்டம் சார்பில் தோழர் சி.என் சுப்பிரமணியையும் தவிர பிற தொழிற்சங்கத் தலைவர்களை தொழிலாளர்கள் பேச அனுமதிக்கவில்லை. 25.4.90 அன்று ஐந்து மில் தொழிலாளர்கள் கூட்டுக்குழு சார்பாக ஆர்ப்பாட்ட ஊர்வலமும், ஆலைவாயில் கூட்டமும் நடந்தன. இதில் புதிய ஜனநாயக வாசகர் வட்டத் தோழர்கள் கலந்து கொண்டு ஆதரவளித்தனர். ஊற்றங்கரை புதிய ஜனநாயக வாசகர் வட்டம் சார்பில் 23, 24, 25 ஆகிய தேதிகளில் போராட்டத்திற்கு ஆதரவாக குரல்கொடுத்து தெருமுனை பிரச்சாரம் - தட்டி - துண்டு பிரசுரம் போன்ற வடிவங்களில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

எங்கே தலைமை பறிபோய் விடுமோ என்கிற அச்சத்தில் கடைசி நேரத்தில் போராட்டத்தில் கலந்து கொள்வதாகவும், தலைமை கொடுப்பதாகவும் அறிவித்தது சி.ஐ.டி.யு. தலைமை. இதை 28.4.90 அன்று உண்ணாவிரதப் பந்தலில் பேசிய சி.ஐ.டி.யு. சங்கத் தலைவர் நாகலிங்கம் "வேலை நிறுத்தப் போராட்டம் தொழிலாளர்களால் தான் முடிவெடுக்கப்பட்டது; தலைவர்களால் - எங்களால் முடிவெடுக்கப்பட்டதல்ல" எனக்கூறி ஒப்புக் கொண்டார்.

● ○ ●

ஆலை முதலாளிகள் அனைவரும் 'கைமா' என்கிற ஒரே சங்கத்தின் கீழ் திரண்டு தொழிலாளர்களை சுரண்டி ஒடுக்கி வருகின்றனர். தொழிலாளர்களோ, சாதி - மதம் - இனம் - கட்சி என பிளவுபட்டு பல தொழிற்சங்கங்களில் சிதறிக் கிடக்கிறார்கள். இந்நிலை மாறவேண்டும். தொழிலாளர்கள், ஒற்றுமைப்பட்டு ஒரே அணியாக - பலம் வாய்ந்த சக்தியாக மாற வேண்டும். புரட்சிகர தலைமையின் கீழ் போராட்டத்தைத் தொடர வேண்டும்.

**தகவல்,**
**புதிய ஜனநாயக வாசகர் வட்டம்,**
**ஊற்றங்கரை.**



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

14

1 - 15 ஜூன் '90

உள்நாடு
தனிஇதழ் : ரூ.2.
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுசந்தா : US$ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# காஷ்மீர் கொலைகளும் நிர்வாக மாற்றமும்

காஷ்மீர் விவகாரத்தின் சமீபத்திய நிகழ்ச்சிகள் இந்திய அரசின் கொலைவெறி - காட்டுமிராண்டித்தனத்தையும், அதேசமயம் இந்திய அரசியல் தலைமையின் பலவீனங்கள் ஓட்டாண்டித்தனங்களையும் நிர்வாணப்படுத்திக் காட்டிவிட்டன. காஷ்மீர் பள்ளத்தாக்கின் முஸ்லீம் மத தலைமை மதகுரு - மிர்வைஸ் மௌல்வி மெகம்மது ஃபாரூக் யாரோ சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டார். மூன்று லட்சம் மக்கள் கதறியழுதபடி மௌல்வியின் சவ ஊர்வலத்தில் திரண்டு போயினர். கண்டதும் சுடும் ஊரடங்கு உத்தரவையும் துப்பாக்கியையும் ஏந்தி இந்திய கொலை வெறிப்படை சவ ஊர்வலத்தின் மீது மிருகத்தனமாகச் சுட்டது. பெண்கள், சிறுவர் - சிறுமிகள் உட்பட நூற்றுக்கணக்கான பேர் கொல்லப்பட்டு, ஆயிரத்துக்கும் மேலானவர்கள் படுகாயமுற்றனர். மௌல்வியின் சவப்பெட்டியே துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டது.

''மௌல்வி ஃபரூக், 'காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைக்கு வாக்கெடுப்பு' என்ற கொள்கையுடையவர்; இருந்தபோதும் இந்திய அரசுடன் சமரச பேச்சு வார்த்தைக்கு முன்வந்தார்; அதை முறியடிப்பதற்காக பாகிஸ்தானிய நாசவேலைக்காரர்களால் படுகொலை செய்யப்பட்டார்; மௌல்வியின் சவ ஊர்வலத்தில் புகுந்து கொண்டு, நமது பாதுகாப்புப் படையின் மீது அதிநவீன துப்பாக்கிகள் கொண்டு பயங்கரவாதிகள் சுட்டு ஆத்திரமூட்டினர்; தற்காப்புக்கு நமது இராணுவம் திருப்பிச் சுட்டது. இந்தச் சண்டையில் குறுக்கே சிக்கிய சிலர் மாண்டு போயினர்'' - என்று இந்திய அரசு புளுகியது. பாகிஸ்தானிய ஆதரவு பயங்கரவாதிகளைப் போலவே இந்திய அரசு உருவாக்கியுள்ள இரகசிய - கூலிப்படை கொலைக் கும்பலும் மௌல்வியைக் கொன்றிருக்கக்கூடும் என நம்புவதற்கும் இடமுண்டு. சவஊர்வலத்துக்குள்ளிருந்து அதிநவீன ஏ.கே. 47 துப்பாக்கிகளால் பயங்கரவாதிகள் சுட்டதாகக் கூறினாலும், ஒரு இந்திய இராணுவத்தினருக்கும் காயம் கூட ஏற்படவில்லை - எனவே நிராயுதபாணியான சவ ஊர்வலத்தின் மீது திட்டமிட்டு கொலைத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்திய அரசின் காந்தியக் கபடவேஷம் உலகம் முழுவதும் அம்பலப்பட்டுப் போயுள்ளது. இதைப் பயன்படுத்திக் கொண்டு இந்திய அரசுக்குப் பகிரங்கக் கண்டனம், நிர்பந்தங்களைத் தரும்படி அரபு மற்றும் மேற்குநாடுகளின் ஆதரவைத் திரட்டுவதில் பாகிஸ்தான் வெற்றி பெற்று விட்டது. சமீபத்திய படுகொலைகள் காரணமாக ஜனதாதள - தேசிய முன்னணி அரசு அதன் 'இடது', வலது கூட்டாளிகளின் புதிய நிர்பந்தங்களுக்கு இலக்காகி காஷ்மீர் விவகாரத்தைக் கையாளும் நிர்வாகத் தலைமையில் சில மாற்றங்களைச் செய்துள்ளது.

காஷ்மீரில் ஏற்கனவே இருந்த நிர்வாகத் தலைமையும் ஜனதா தளக் கூட்டாளிகளின் மாறுபட்ட நிர்பந்தங்களால் உருவான ''நரசிம்ம'' அவதாரம்தான்! காஷ்மீர் போராட்டத்தை பாசிச முறையில் ஒடுக்கவேண்டும் என்பதற்காக இந்து மதவெறியனும் அவசரநிலைகால ஆட்சியின் கொடுங்கோலனுமான ஜக்மோகனை கவர்னராக்கியது பாரதீயஜனதா - ஆர்.எஸ்.எஸ். நிர்பந்தம். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த போலிக் கம்யூனிஸ்டுகளின் கொள்கையோ, பல்லுக்கட்டைக் காட்டி ஏய்ப்பதும், சவுக்கால் விளாசுவதும் என்கிற அணுகுமுறைதான். எனவே, இவர்களின் நிர்பந்தப்படி ஒரு சர்வகட்சி ஆலோசனைக் குழுவும் ஜார்ஜ் பெர்னாண்டஸ் தலைமையில் காஷ்மீர விவகாரத்துக்கான தனி அமைச்சகமும் உருவாகி இவர்களிடையே நாய்ச்சண்டைகள் நீடித்த போதும் நடைமுறையில் ஜக்மோகனின் காட்டாட்சியே இருந்தது. வி.பி.சிங் தலைமையிலான அரசாங்கத்தின் பிரதிநிதியாகத்தான் ஜக்மோகன் அரசு பயங்கரவாதத்தை அமுலாக்கினார். ஆனால் பழிமுழுவதையும் ஜக்மோகன் மீது மட்டுமே சுமத்தி அவரை நீக்கும்படி நிர்பந்தித்தனர் போலிக் கம்யூனிஸ்டுகள். ஜக்மோகனை நீக்கிவிட்டு இந்திரா - ராஜீவ் கும்பலின் முன்னாள் விசுவாசியும், உளவுப் படையான 'ரா'வின் முன்னாள் இயக்குநரும், ஒரு போலீசுக் கொடுங்கோலனுமான கிரிஷ் சந்திர சக்சேனாவைக் கவர்னராக்கி உள்ளனர். இதைக் கடுமையாக எதிர்க்கும் பாரதீய ஜனதாவின் நிர்பந்தத்துக்குப் பணிந்து ஜார்ஜ் பெர்னான்டஸ் தலைமையிலான 'காஷ்மீர் சமரச' அமைப்பைக் கலைத்ததோடு ஜக்மோகனுக்கு எம்.பி. பதவி கொடுத்து அவரது கொலை பாதகங்களுக்குப் பரிசளித்துள்ளனர்.

காஷ்மீர் பிரச்சினையின் அடிப்படைக் கொள்கையில் இந்திய அரசு மற்றும் அரசியல் தலைவர்களிடையே வேறுபாடுகள் எதுவும் இல்லை; அணுகுமுறையில் மட்டுமே மாறுபடுகிறார்கள். இவர்களுடைய தந்திரங்கள் எதற்குமே காஷ்மீரிகள் பலியாக மறுக்கின்றனர். காஷ்மீரிகளின் பொருளாதாரமும் வாழ்வுமே சின்னாபின்னமாகிக் கிடக்கிறது. பள்ளி - கல்லூரிகள், வங்கிகள் - வர்த்தகங்கள், முக்கியத் தொழிலான சுற்றுலா ஆகிய அனைத்துமே முடங்கிவிட்டன. இருந்தபோதும் மதக்கலவரங்களே கிடையாது; பாக். ஆதரவு கும்பலின் வன்முறைக்குப் பயந்து அகதிகளாக வந்து விட்ட இந்துக்களின் சொத்துக்களி ஒரு துரும்பைக்கூட யாரும் தொடவில்லை. அரசு பயங்கரவாதத்துக்கு எதிரான சுயநிர்ணய உரிமை போராட்டத்தில் மக்களின் உறுதி குலையவுமில்லை.

ஆகவே, அரசு பயங்கரவாதத்தை மேலும் தீவிரமாக்கியோ, மதவெறி, தேசிய வெறியூட்டி பாக்.கின் மீது போர் தொடுத்தோ, காஷ்மீரி மக்களின் துரோகிகளுக்கு விலை பேசி பொம்மை அரசை நிறுவியோ, காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க இந்திய அரசு முயலுவது வெற்றி பெறாது; அதே போல நாசவேலைக்காரர்களை ஏவி காஷ்மீரைத் துண்டாடி தன்னுடன் இணைத்துக் கொள்ள பாகிஸ்தான் செய்யும் முயற்சியும் பலிக்காது. இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளுமே தாம் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பகுதிகளில் இருந்து வெளியேறி விடவேண்டும்; காஷ்மீர் மக்கள் தமது எதிர்காலத் தகுதியைத் தீர்மானித்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அமுலாக்க வேண்டும். இதுதான் ஜனநாயக பூர்வமான, நேர்மையான ஒரே தீர்வாகும். ●

படிப்பகம்

www.padippakam.com

# அரியானா - மேகம் தேர்தல் அராஜகம்:

# தீவட்டிக் கொள்ளையனும் முகமூடிக் கொள்ளையனும்!

**அரசியலில் தூய்மையை நிலைநாட்டப் போவதாக வாக்குறுதி தந்து ஆட்சியைப் பிடித்த ஜனதா தளத்தின் யோக்கியதை என்ன? சவுதாலா ஒரு கிரிமினல் பேர்வழி என்பதை மட்டுமல்ல; வி.பி.சிங்கின் புனித வேடத்தையும் திரைகிழித்து விட்டன மேகம் சம்பவங்கள்.**



லாட்டரிச்சீட்டைப் போல அது நிச்சயமாக இருந்தது; நிச்சயமற்றும் இருந்தது. கொலை விழும் என்பது நிச்சயம். கொல்லப்படப் போவது யார் என்பது மட்டும் நிச்சயமற்றிருந்தது. மே-26, தேர்தல் நாள் நெருங்க நெருங்க மேகம் தொகுதியில் 'அரசியல்' பிரச்சாரத்தைக் காட்டிலும் திரைமறைவு சதிகள் சூடுபிடிக்கத் தொடங்கின.

நான்கு பேருக்கு ஒரு போலீசு, 2000 மத்திய ரிசர்வ் போலீசு பாதுகாப்புடன் பிப்ரவரி மாதம் இதே மேகம் தொகுதியில் 20க்கும் மேற்பட்ட படுகொலைகளை நடத்திய சவுதாலா கும்பல் தற்போது மறுதேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரும் தனக்கேயுரிய பாணியில் முழுத்தயாரிப்புடன் தேர்தலைச் சந்தித்தது.

மே 17ம் தேதி காலை மேகம் தொகுதியைச் சேர்ந்த முந்திரா குர்க் கிராமத்தில் அமிர்சிங் என்ற சுயேட்சை வேட்பாளர் பிணமாகக் கிடந்தார். "இப்படி ஏதாவது நடக்கும் என்று நான் அஞ்சினேன். அதனால்தான் இரண்டு தொகுதிகளிலிருந்து மனு தாக்கல் செய்தேன்" என்று பத்திரிக்கையாளர்களுக்கு விளக்கமளித்தார் சவுதாலா. "தான் தோல்வியடையக்கூடும் என்று சவுதாலாவுக்கு சிறிதளவு ஐயம் இருப்பினும் 29 வேட்பாளர்களில் ஒருவர் கொல்லப்படுவார் என்பது இந்த மாநிலத்திற்கு தெரிந்த விஷயம்தான்" என்று பதிலடி கொடுத்தார் சவுதாலாவை எதிர்த்துப் போட்டியிடும் ஆனந்த் சிங் டாங்கியின் தேர்தல் ஏஜெண்டு.

கொலை செய்யப்பட்ட தனது 'தோழருக்காக' இரண்டு நிமிடம் மவுனம் அனுஷ்டித்தார் சவுதாலா; "பழிக்குப் பழி, ரத்தத்திற்கு ரத்தம்" என்று இந்தி சினிமா கதாநாயகன் போல தேர்தல் பிரச்சார மேடையில் முழக்கமிட்டார். 'நீங்கள் யாரை சந்தேகப்படுகிறீர்கள்' என்று பத்திரிக்கையாளர்கள் கேட்டவுடனே, "வேறு யாரை, டாங்கியைத் தான்" என்று சவுதாலாவை முந்திக் கொண்டு பதிலளித்தார் ரோடக் மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளர் தோமார். தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டதாக அறிவித்தது தேர்தல் கமிஷன்.

**பிப்ரவரியில் வாக்காளர் கொலை!**

சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படாமல் தேவிலாலின் புத்திரன் என்ற ஒரே தகுதியினால் முதல்வர் நாற்காலியைக் கைப்பற்றிய சவுதாலா முதல்வர் நாற்காலியில் நீடிக்க வேண்டுமென்றால் ஜூன் 2ம் தேதிக்குள் எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற அரசியல் சட்ட நிர்ப்பந்தத்தை நிறைவேற்ற, மேகம் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டார். துணைப் பிரதமரான தால் காலியான தேவிலாலின் தொகுதிதான் மேகம். சாதிபலம், பணபலம், அதிகாரபலம் ஆகியவற்றின் துணையுடன் மிக எளிதாக வெற்றி பெறவேண்டிய மேகம் தொகுதியில் சவுதாலாவுக்கு வில்லனாக வந்தார் ஆனந்த் சிங் டாங்கி.

ஆனந்த்சிங் டாங்கி ஜனதாதள உறுப்பினர். சென்ற தேர்தலில் தேவிலாலின் தலைமைத் தேர்தல் ஏஜெண்டாக இருந்தவர். அதாவது, ஓட்டுக்களை விலைக்கு வாங்குவது முதல் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுவது வரை அனைத்துக் கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர். தேவிலாலின் ஜாட் சாதியைச் சேர்ந்தவர். மேகம் தொகுதியின் பிரதான போட்டியாளர்கள் சவுதாலாவும் டாங்கியும்தான்.

டாங்கிக்கு பாரதீய ஜனதாக்கட்சியின் மறைமுக ஆதரவு இருந்தது. அதுமட்டுமல்ல; முதலமைச்சர் பதவி மீது கண் வைத்திருக்கும் தேவிலாலின் இன்னொரு மகனான ரஞ்சித்சிங்கின் பினாமி இவர். மேகம் தொகுதியில் வேட்பாளரின் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் சௌபீஸி பஞ்சாயத் என்னும் சாதித் தலைக்கட்டு அடிப்படையிலான பல்வேறு கிராமங்களின் ஆதரவும் இருந்தது. இரண்டு தொழில் முறைக் கிரிமினல்களுக்கு இடையே நடைபெற்ற இந்தப் போட்டியில் சவுதாலாவின் கையில் இருந்த வலிமை வாய்ந்த ஆயுதம் அரசு அதிகாரம்; அரசு எந்திரம்.

அரசு எந்திரத்தின் துணையுடன்தான் சவுதாலா பிப்ரவரி மாதம் நடைபெற்ற மேகம் இடைத்தேர்தலில் வெறியாட்டம் போட முடிந்தது. தனது தோல்வியை முன்னறிந்தவுடன் சவுதாலா கும்பல் கொலை வெறியாட்டத்தில் இறங்கியது. வாக்குச் சாவடிகள் கைப்பற்றப்பட்டு வாக்காளர்கள் அடித்து நொறுக்கப்பட்டனர்; பத்திரிக்கையாளர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். சவுதாலாவின் மகன் அபய்சிங் 6 பேரைச் சுட்டுக் கொன்றான்; மொத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் 20 பேர்.

கிரிமினல் அரசியலின் எல்லையைத் தொட்டுவிட்ட இந்த பிப்ரவரி தேர்தலை எதிர்த்து ஹரியானா ஜனதாதளத்தின் எதிர் கோஷ்டியைச் சேர்ந்த தேவிலாலின் மகன் ரஞ்சித்சிங் உட்பட நான்கு மந்திரிகள் பதவி விலகினர். பத்திரிக்கைகள் காறி உமிழ்ந்தன. அரசியலில் நல்லொழுக்கத்தை மீட்க வந்த 'உத்தமசீலர்' வி.பி.சிங் மேகம் தொகுதியில் இடைத்தேர்தல் நடத்த தேவிலாலை சம்மதிக்க வைப்பதற்காக - ஒரு மிரட்டல் நடவடிக்கையாக - தனது கட்சித்தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். "வாக்காளர்களின் உண்மையான தீர்ப்பைக் கணிக்க இயலாத அளவுக்கு வன்முறை தலைவிரித்தாடியதால் பிப்ரவரி 27ம் தேதி நடைபெற்ற இடைத்தேர்தல் செல்லாது" என்று மார்ச் 6ம் தேதி தேர்தல் கமிஷன் அறிவித்தது.

வன்முறையையும் கொலையையும் நேரடியாகப் படம் பிடித்திருந்த நியூஸ் டிராக் வீடியோ படம் குறித்து அரியானா அரசு உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார் உள்துறை அமைச்சர் மப்டி முகமது சயீத். கொலைகாரர்களிடமே கொலை குறித்து விசாரணை நடத்தக் கோரினால் அதன் விளைவு என்னவாக இருக்கும்? உள்துறை அமைச்சரின் கடிதம் உறக்கத்தில் ஆழ்த்தப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

**மே மாதத்தில் வேட்பாளர் கொலை!**

மே 26-ம் தேதி மேகம் தொகுதியில் மறுதேர்தல் நடத்தப் போவதாக தேர்தல் கமிஷன் அறிவித்தது. அரியானா மாநில அரசின் அதிகார துஷ்பிரயோகம் எதையும் தவிர்க்கும் விதத்தில் வாக்குச்சாவடி அதிகாரிகள் மத்திய அரசிலிருந்து அனுப்பப்படுவார்கள் என்றும், மாநில போலீசுக்குப் பதிலாக மத்திய ரிசர்வ் போலீசு அனுப்பப்படும் என்றும் தேர்தல் கமிஷன் அறிவிப்பு கூறியது.

மீண்டும் மேகம் தொகுதியில் நின்று வெற்றி பெற்றுக் காட்டுவதாகவும், தோல்வியடைந்தால் முதல்வர் பதவியை ராஜினாமா செய்வதாகவும் சவால் விட்டார் சவுதாலா. ஆனால் சிறிதும் வெட்கமின்றி தர்பாகலான் என்ற இன்னொரு தொகுதியிலிருந்தும் வேட்புமனு தாக்கல் செய்தார். மேகம் தொகுதியில் தனது எதிரிகள் வன்முறையில் ஈடுபடக்கூடும் என்று தான் சந்தேகிப்பதாகவும் அதனால்தான் இன்னொரு தொகுதியிலும் நிற்பதாகவும் நொண்டிச் சாக்கு சொன்னார்.

இருந்தபோதிலும் இவ்விரண்டு தொகுதிகளிலும் அரசுப்பணம் வாரியிறைக்கப்பட்டது. புதிய சாலைகள், குடிநீர் வசதி, தானியச் சந்தைகள், பள்ளிகள், மருத்துவமனைகள், கல்லூரிகள் - எல்லாம் ஒரே நேரத்தில் சினிமா செட்டிங்குகள் போல எழுப்பப்படுகின்றன. தேர்தல் அறிவித்தபின் இவ்வாறு செய்வது சட்டப்படி குற்றமல்லவா என்று யாரும் கேள்வி எழுப்பமுடியாது. ஏனென்றால் தேர்தல் கமிஷன் தேர்தல் அறிவிப்பதற்கு ஒன்றிரண்டு நாட்கள் முன்னமே இதற்கான உத்தரவுகள் எல்லாம் பிறப்பிக்கப்பட்டு விட்டதால் இவை சட்டப்படி குற்றமாகா. கிராமங்களின் அனைத்துத் தேவைகளும் நிறைவு செய்யப்பட்டது மட்டுமல்ல; மேல் செலவுக்கு ஒவ்வொரு கிராமத்துக்கும் இரண்டு லட்சம் ரூபாய் தனியே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, குறைந்தபட்சம் ஒரு வாக்காளருக்கு ஆயிரம் ரூபாய் அரசுப் பணம் லஞ்சமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தனது நேர்மையையும், பெருந்தன்மையையும் உலகுக்கு உணர்த்த, "வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடங்களில் நான் என்னுடைய ஏஜெண்டுகளை அனுப்பப் போவதில்லை. என்ன தீர்ப்பு வருகிறதோ அதற்குத் தலைவணங்குகிறேன்" என்று மிகுந்த பணிவுடன் அறிவித்தார் சவுதாலா. "ஒரு ஏஜெண்டுக்குப் பதில் 12 பேர் இருக்கும் போது சவுதாலா அறிவிப்பில் ஆச்சரியமென்ன?" என்கிறார் போட்டி வேட்பாளர் டாங்கி. ஆம்! மேகம் தொகுதியில் மட்டும் பொம்மை (டம்மி) வேட்பாளராக 12 சுயேச்சைகளை நிறுத்தியிருக்கிறார் சவுதாலா.

இத்தனை முஸ்தீபுகளுக்குப் பிறகும் தோல்வி தவிர்க்க இயலாது என்ற நிலையில் தான் அனைவராலும் அச்சத்துடன் எதிர்பார்க்கப்பட்ட கொலை நடந்திருக்கிறது. தேர்தலை நிறுத்துவதற்கான இறுதி ஆயுதமாக யாரேனும் ஒரு சுயேட்சை கொல்லப்படுவார் என்பதை அனைத்து சுயேச்சை வேட்பாளர்களுமே எதிர்பார்த்திருக்கின்றனர். அது யார் என்ற புதிர்தான் மே 17ம் தேதி விடுபட்டிருக்கிறது.



டாங்கி - நேற்று கூட்டாளி, இன்று எதிராளி.

ஜனதாதள உறுப்பினரும், தேவிலால் - சவுதாலா பரம்பரையின் விசுவாசியுமான அமிர்சிங் என்ற சுயேச்சை வேட்பாளர் கொல்லப்பட்டிருக்கிறார். இந்தக் கொலையை டாங்கி தான் செய்திருக்க வேண்டும் என்பதற்கு சவுதாலா கூறும் முக்கியக் காரணம் என்ன தெரியுமா? "அமிர்சிங் நான் நிறுத்திய டம்மி வேட்பாளர்". - என்பதுதான். இதைவிட வெளிப்படையாகச் சொல்ல முடியுமா - ஓட்டுச்சீட்டு அரசியலின் சீரழிவை?

**போலீசின் விசுவாசம்!**

கொலை நடந்த சில மணி நேரங்களில் போலீஸ் படை டாங்கியின் மதீனா கிராமத்திற்கு விரைந்தது. டாங்கியைக் கைது செய்யத்தான் போலீசு வருகிறது என்பதை அறிந்த மதீனா கிராம மக்கள் போலீசை வழிமறித்தனர். சிறிதும் தயக்கமின்றி உடனே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. வீட்டுக்குள்ளே அமர்ந்திருந்த ஒரு 16 வயதுப் பெண்ணும், 65 வயதுக் கிழவியும் கொல்லப்பட்டனர். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் போலீசை நோக்கி கற்களை வீசத் தொடங்கினர். "யாரைப் பார்க்க வந்தீர்கள்? என்ன வேண்டும்?" என்று கேட்ட டாங்கியின் வேலைக்காரரை வீட்டுவாயிலில் நேருக்கு நேர் நெஞ்சை நோக்கிச் சுட்டுக் கொன்றார் போலீஸ் எஸ்.பி. தோமார்.



அமிர்சிங் - விசுவாசத்தின் சம்பளம் மரணம்!

துப்பாக்கிக் குண்டு சத்தம் கேட்டு மாடியிலிருந்து எட்டிப்பார்த்த டாங்கியை நோக்கி டி.ஐ.ஜி. நக்வி சுடத் தொடங்கினார். உயிர் பிழைத்தால் போதும் என்று கூரைமீது ஏறி கொல்லைப்புறம் வழியாகக் குதித்து தப்பி ஓடினார் டாங்கி. மக்களின் எதிர்ப்பு வலுக்கவே டாங்கியைக் கைது செய்ய இயலாமல் போலீசு பின்வாங்கியது. கொலை வெறியாட்டத்தின் சாட்சியமான மூன்று பிணங்களையும் பிரேதப் பரிசோதனைக்குக் கொண்டு செல்வதாகக் கூறி எடுத்துச் சென்றுவிட்டது போலீசு. மதீனா கிராமத்து மக்கள் மிரட்டித் துரத்தப்பட்டு விட்டனர். எஞ்சியிருப்பது துப்பாக்கித் தோட்டாக்களால் சல்லடைக் கண்ணாய் துளைக்கப்பட்ட டாங்கியின் வீடு!

சுயேட்சை வேட்பாளர் அமிர்சிங்கைக் கொலை செய்திருக்கக்கூடும் என்று தான் சந்தேகிக்கும் டாங்கியைக் கைது செய்ய போலீசு செய்த கொலைகள் மூன்று. டாங்கியின் ஆதரவாளர்கள் என்று போலீசு யாரையெல்லாம் சந்தேகித்ததோ அவர்கள் மீதெல்லாம் பொய்வழக்கு - சித்திரவதை.

டாங்கியைப் பழிவாங்கவும் வேட்டையாடவும் முன்நின்ற போலீசு எஸ்.பி. தோமார், தேவிலால் குடும்பத்தின் விசுவாசமான அடியாள். ஏற்கனவே சவுதாலாவின் மருமகள் (மகன் அபய்சிங்கின் மனைவி) கொலை செய்யப்பட்ட போது அதை மூடி மறைத்து தன் விசுவாசத்தை உறுதி செய்த தோமார்தான் ரோடக் எஸ்.பி. விசாரணையை தோமார் நடத்த வேண்டும் என்பதற்காகவே கொலை செய்யப்பட்ட அமிர்சிங்கின் பிணம் ரோடக் மாவட்ட எல்லைக்குள் விட்டெறியப் பட்டிருக்கிறது.

**தேர்தல் கமிஷனும் உடந்தை**

தேவிலால் பரம்பரையின் அதிகார துஷ்பிரயோகம் அரியானா மாநில எல்லைக்குள் முடிவடைந்துவிடவில்லை. பிப்ரவரி தேர்தலில் 'சிங்கம்' சின்னத்தில் போட்டியிட்ட டாங்கிக்கு இந்த முறை அச்சின்னம் மறுக்கப்பட்டது. ஒற்றைப் புறா சின்னம் அளிக்கப்பட்டது. இன்னொரு வேட்பாளருக்கு இரட்டைப் புறா சின்னம் தரப்பட்டிருந்ததால் குழப்பம் ஏற்படும் என்று டாங்கி ஆட்சேபித்தார். மீண்டும் 'குடை'ச் சின்னம் மாற்றித் தரப்பட்டது. குடைச் சின்னம் பொறித்த விளம்பரச் சுவரொட்டிகளெல்லாம் அச்சிடப்பட்டு பிரச்சாரம் தொடங்கிய பின் அதற்கும் கோர்ட் தடை வாங்கினார் சவுதாலா. குடைக்குப் பதில் ரோஜாப்பூ சின்னம் டாங்கிக்கு ஒதுக்கப்பட்டது.

இத்தனைக்கும் பிறகு தனது தோல்வி தவிர்க்க இயலாது என்ற நிலையிலேயே அமிர்சிங் கொலை நடந்திருக்கிறது. கொலை செய்யப்படுவதற்கு சில மணி நேரங்கள் முன்புவரை அமிர்சிங் சவுதாலா

படிப்பகம்

www.padippakam.com

வின் மகனுடன் அமர்ந்து விருந்து சாப்பிட்டதைப் பற்றியோ. அதன்பின் வீட்டிற்குச் செல்லும்போது சவுதாலாவின் ஆட்கள் அமிர்சிங்கிற்குத் துணையாகச் சென்றதைப் பற்றியோ எதுவும் பேசாமல் அமிர்சிங்கிற்கும் டாங்கிக்கும் முன்விரோதம் இருந்தது என்பதை மட்டுமே பிரதானமாக்கி டாங்கியை உள்ளே தள்ள முயற்சிக்கிறது அரியானா போலீசு. அவ்வாறே முன்விரோதம் இருப்பது உண்மையாயிருப்பினும் தான் வெற்றி பெறுவது உறுதியான தருணத்தில் அரசியல் அநாமதேயமான அமிர்சிங்கைக கொல்வதன் மூலம் டாங்கிக்கு பயன் ஏதும் கிடையாது. மாறாக பாதிப்புதான்.

இறுதியாக மேகம் தொகுதியின் 30 கிராமங்களிலிருந்து வந்த 3000 பிரதிநிதிகள் அடங்கிய பஞ்சாயத்து, டாங்கி குற்றவாளி அல்ல என்று தீர்ப்பளித்திருக்கிறது. சவுதாலா தேவிலால் கும்பலின் ஆத்திரத்தையும் வெறியையும் இது மேலும் விசிறிவிடும். இன்னும் நயவஞ்சகமான கிரிமினல் நடவடிக்கைகளில் இக்கும்பல் இறங்கும்.

பிப்ரவரி முதல் மே வரை அரியானாவின் தேவிலால் பரம்பரை நடத்திய அப்பட்டமான கிரிமினல் அரசியல் குறித்து யாருக்கும் அதிர்ச்சியோ ஆச்சரியமோ இல்லை. ஆனால் கடந்த 3 மாதங்களில் தூய்மை அரசியலின் நாயகனான வி.பி.சிங்கும் அவரது ஜனதா தளக்கட்சியும் இது குறித்து எடுத்த (!) நடவடிக்கைகளும் திரைமறைவில் நடந்த சதிவேலைகளும், பேரங்களும்தான் கவனத்திற்குரியவை.

### திரைமறைவு நாடகங்கள்!

பிப்ரவரி தேர்தல் செல்லாது என்று அறிவிக்கக் கோரி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையும், ஜனதாதளத்தின் ஒரு கோஷ்டியும் விவகாரத்தைக் கிளப்பியவுடனே அஜித்சிங்கை அரசியல் விவகாரக் கமிட்டியின் பொறுப்பிலிருந்து நீக்குவதாக அறிவித்தார் தேவிலால்; அடுத்து தான் ராஜினாமா செய்வதாக மிரட்டினார்: உட்கட்சி விவகாரத்தை பத்திரிக்கைக்கு இழுக்க உன்னால் தான் முடியுமா? நானும் செய்வேன் என்று சந்தி சிரிக்கடித்தார். நாற்காலி பறிபோய்விடுமோ என்ற பீதியில் உறைந்துபோன வி.பி.சிங், ஆரிப் முகமதுகானை ஷரியத் விவகாரத்தில் பலி கொடுத்த ராஜீவைப் போல அஜித்சிங்கை அம்போவென்று நட்டாற்றில் விட்டார்.

சரண்சிங்கை வைத்து ஜனதா ஆட்சியைக் கவிழ்த்த இந்திராவின் கட்சி ஜனதாதளத்துக்கு குழிபறிக்க தேவிலாலைப் பயன்படுத்த திட்டமிட்டது. பிப்ரவரி வன்முறை பற்றி ராஜீவ் ஒரு வார்த்தை கூட பேசாமலிருந்தது. ராஜீவின் ராஜதந்திரமானது. காங்கிரசை வைத்து வி.பி.சிங்கை மிரட்டிப் பணிய வைப்பது தேவிலாலின் ராஜதந்திரமானது; அஜித்சிங்கைப் பலி கொடுத்து தன் தலையைக் காப்பாற்றிக் கொள்ள முனைந்தது வி.பி.சிங்கின் ராஜதந்திரமானது.

பிப்ரவரியின் 'ராஜதந்திர' சுழலிலிருந்து வி.பி.சிங் கோஷ்டி தப்பிக்கும் முன்னர் மே மாதம் அடுத்த புயல் மேகம் தொகுதியில் மையம் கொண்டுவிட்டது. ''இன்றைய பிரதான எதிரி காங்கிரஸ் அல்ல; பிர்லா, கோயங்கா போன்ற முதலாளிகள் தான்'' என்று தேவிலால் காங்கிரசுக்கு பகிரங்கத் தூது விட்டுக் கொண்டிருக்கும் போதே ராஜீவ் தன் தந்திரத்தை மாற்றினார். மேகம் தொகுதிக்கு நேரில் சென்று சவுதாலாவை எதிர்த்து முழங்கினார். அரியானா சட்டசபையை உடனே கலைக்க வேண்டும் என்று சண்டமாருதம் செய்தார். அச்சத்திலும் கிலியிலும் உறைந்து போயிருந்த ஜனதாதள உறுப்பினர்களை பாராளுமன்றத்தில் முன்னேறித் தாக்கியது காங்கிரஸ்.

''ஆட்சியைக் கலைப்பதும் கூட ஒருவழிதான்'' என்று போகிற போக்கில் பேசிய வி.பி.சிங் பாராளுமன்றத்தில் மேகம் குறித்து விவாதம் வந்தபோது நாசுக்காக நழுவிக் கொண்டார். வெட்கமின்றி விவாதத்தைத் திசை திருப்பினார். முடிவை வி.பி.சிங் அறிவிப்பார் என்று மற்றவர்கள் காத்திருந்தனர். மற்றவர்கள் முடிவு செய்யட்டும் என்று வி.பி.சிங் காத்திருந்தார்.

பிப்ரவரி நெருக்கடியிலிருந்து வி.பி.சிங்கைக் காப்பாற்ற தேவிலாலுக்குத் தூது போன மார்க்சிஸ்டுகளோ இப்போது தடுமாறினார்கள். கொலையாளி யாராக இருந்தாலும் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வீரவசனம் பேசினார்கள். அரியானா ஜனதாதள ஆட்சிக்கு ஆதரவு கொடுத்துவரும் பாரதீய ஜனதா மேகம் வன்முறை எதிர்ப்பில் காங்கிரசுடன் சேர்ந்து கொண்டது. சவுதாலாவின் ராஜினாமாவைக் கோரியது. அதே நேரத்தில் சவுதாலாவுக்கு எதிராக மாபெரும் சதி நடப்பதாகவும் எச்சரித்தது. ஆந்திராவில் நக்சலைட்டுகளைக் கட்டுப்படுத்த முடியாத காங்கிரஸ் அரசை டிஸ்மிஸ் செய்வதாக இருந்தால் அரியானா அரசையும் டிஸ்மிஸ் செய்யலாம் என்று மிரட்டினார் தேவிலால்.

### நீதிதேவன் மவுனம்!

இத்தனைக்கும் இடையில் தூய்மை அரசியலின் தலைவர் வி.பி.சிங் மவுனம் காத்தார். அரசியலில் தூய்மையையும் ஒழுக்கத்தையும் நிலைநாட்டுவது இருக்கட்டும்; தங்கள் தலைவிதி என்ன என்பதைக்கூட தாங்களே தீர்மானிக்க முடியாதவர்களாக புழுதி அடங்கட்டும் என்று கன்னத்தில் கைவைத்தபடி அமர்ந்திருந்தார்கள் தூய்மை அரசியலின் நாயகர்கள். வி.பி.சிங்கை உருவாக்கி, வளர்த்து அரியணையேற்றிய கோயங்காவின் எக்ஸ்பிரஸ் ஏடும், அருண் ஷோரியும் புனிதர்களின் மவுனத்தைக் கேலி செய்தன. சவுதாலாவை வெளியேற்றுமாறு அறைகூவல் விட்டன. தனது நாற்காலியின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டபின் சவுதாலா ராஜினாமா செய்ய வேண்டும் என்ற 'ஆணை'யை பிறப்பித்தது வி.பி.சிங் அரசு - ஜனதாதளத் தலைமை.

மிரட்டல்கள், கொலைகள், குதிரை பேரங்கள், சதிகள், உருக்கமான வேண்டுகோள்கள் - எல்லாம் முடிந்து இறுதியில் 'நீதி' வெற்றி பெற்று விட்டது. ''நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்'' என்று எக்ஸ்பிரஸ் தலையங்கம் தீட்டிவிட்டது. முன்பு ராஜீவின் அசைவுகளையெல்லாம் பதிவு செய்து, அதற்கு வியாக்கியானம் எழுதிய பத்திரிக்கைகள் இப்போது வி.பி.சிங்கின் சந்தர்ப்ப வாதத்தை அவரது ராஜதந்திரமாகவும், பதவி வெறியை ஆட்சியின் மீதுள்ள அக்கறையாகவும், அச்சத்தினால் ஒளிவதை பாய்வதற்குப் பதுங்குவதாகவும் சித்தரிக்கின்றன.

கிரிமினல் அரசியலின் தலைவன் சவுதாலா தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்யும் போது, கட்சியின் கட்டுப்பாடு மிக்க தொண்டன் என்ற முறையில் தலைமையின் ஆணைக்குக் கீழ்ப்படிவதாகக் குறிப்பிட்டார். சவுதாலாவின் இந்த அறிவிப்பு உங்களுக்கு நகைக்கத் தக்கதாகத் தோன்றலாம். ஆனால் இதற்கு வி.பி.சிங் சொன்ன பதில் என்ன தெரியுமா? நன்றி! கிரிமினலுக்கு ஒழுக்க சீலரின் நன்றி! திருடனுக்கு நாணயஸ்தர் செலுத்தும் நன்றி! ஓராயிரம் வார்த்தைகளால் தன்னைத் தூக்கி நிறுத்திய பத்திரிக்கை புகழ்பாடிகளின் முகத்தில் ஒரே வார்த்தையில் கரி பூசி விட்டார் வி.பி.சிங்!

தர்பா கலான் தொகுதியில் சவுதாலா வெற்றி பெற்றுவிட்டார்! வி.பி.சிங்கின் புனித முகமூடியை மீண்டும் தோய்த்தெடுக்க திராவகம் தயாராகிவிட்டது.

உ பாலன்.



மேகம் வன்முறை - போலீசு துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இளம்பெண்.



படிப்பகம்

www.padippakam.com

1987 முதல் ஓராண்டு காலத்துக்கு ரஷியாவில் ராஜீவ் கும்பல் நடத்திய இந்தியக் கலை விழாவுக்கான செலவு மட்டும் ரூ.14.5 கோடி. அதே போல், பிரான்சிலும் ஜப்பானிலும் நடைபெற்ற கலை விழாவுக்கான செலவு ரூ.6.1 கோடி. இதுதவிர இந்தியாவில் நடந்த ரஷிய கலை விழாவுக்கான செலவு ரூ.20 கோடி. மொத்தத்தில், இரண்டரை வருடத்திற்குள் கலைவிழா என்ற பெயரில் நமது வரிப்பணம் ரூ.41 கோடி பாழடிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் பாதியளவு ஒதுக்கியிருந்தால் கூட ஒரிசாவின் கலகாந்தி வட்டார மக்கள் பட்டினிச் சாவிலிருந்து தப்பி உயிர் பிழைத்திருப்பார்கள். ஆனாலும் தனது களிவெறியாட்ட கூத்துக்கு இந்திய மக்களின் ரத்தத்தைக் குடித்து ஏப்பம் விட்ட பாசிச ராஜீவ் கும்பலை தண்டிக்க வக்கற்றுக் கிடக்கிறது தேசிய முன்னணி அரசு.

• ○ •

ஆட்சியாளர்களும் மாண்புமிகு மக்கள் பிரதிநிதிகளும் நீண்ட காலமாக குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரத்தை தீவிரமாகச் செய்து வருகிறார்கள். அதை ஒவ்வொருவரும் கடைபிடிக்கிறார்களா என்று பாராளுமன்ற செயலகம் அண்மையில் சோதித்த போது திடுக்கிடும் அதிசயங்கள் வெளி வந்தன. ஒரு எம்.பி.க்கு 11 குழந்தைகள் உள்ளன. 5 எம்.பி.க்களுக்கு தலா 9 குழந்தைகள் உள்ளன. இதேபோல 11 எம்.பி.க்களுக்கு தலா 8 குழந்தைகளும், 19 எம்.பிக்களுக்கு தலா 7 குழந்தைகளும் உள்ளன. கடைசியில், அரசின் இன்றைய பிரச்சாரத்தின்படி ஒரு குழந்தைக்கு மட்டும் தந்தையாக உள்ள எம்.பிக்கள் 31 பேர் தான்! பாராளுமன்றம் பன்றித் தொழுவம் என்று மார்க்சிய ஆசான்கள் கூறியதற்கு மிகப்பொருத்தமாக இந்திய எம்.பிக்கள் இலக்கண சுத்தமாகத் திகழ்கிறார்கள் போலும்!

• ○ •

காலனியாதிக்க சுரண்டல் கொள்ளையில் மூளை வடிகாலும் ஒன்று. அதாவது ஏழை நாடுகளில் மக்களின் வரிப்பணத்தில் உயர் கல்வி கற்ற மருத்துவர்கள், விஞ்ஞானிகள், தொழில்நுட்பவாதிகளை ஏகாதிபத்தியங்கள் தமது நாட்டுக்கு வாரிச் செல்வதாகும். இந்தியாவிலிருந்து மூளைவடிகால் முறையில் கடந்த 30 ஆண்டுகளில் ஏறத்தாழ நாலரை லட்சம் தொழில்நுட்பவாதிகளை ஏகாதிபத்தியங்கள் குடியமர்த்திக் கொண்டுள்ளன. இதனால் இந்தியாவுக்கு இதுவரை 20,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இங்கே கிராமப்புறங்களில் மருத்துவர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். நமது வரிப்பணத்தில் உயர்கல்வி கற்ற மருத்துவர்களும் விஞ்ஞானிகளும் நாட்டுப் பற்று இன்றி வெளிநாடுகளுக்கு ஓடுகின்றனர். இதை தடுத்து நிறுத்தவோ, ஏகாதிபத்தியங்களிடம் நட்ட ஈடு கோரவோ இந்திய ஆட்சியாளர்கள் திராணியின்றிக் கிடக்கின்றனர்.

• ○ •



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

செய்தித்தாள் அச்சிடும் காகிதத்தின் விலை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தை விட இப்போது மேலும் 50% விலை உயர்ந்துள்ளது. இன்றைய விலை டன் ஒன்றுக்கு ஏறக்குறைய ரூ.15,700 ஆகும். இது வெளிநாட்டு செய்தித்தாள் காகிதத்தைவிட 35% விலை அதிகமாகும். பாசிச ராஜீவ் அரசு அநியாயமாக திணித்த பத்திரிக்கை காகித விலையேற்றம் உட்பட அனைத்து கெடுபிடிகளையும் நீக்கப் போவதாக தேர்தலின் போது வாக்களித்தது, தேசிய முன்னணி அரசு. ஆனால் ஆட்சிக்கு வந்து ஒரு மண்ணும் செய்யவில்லை. மாறாக, சிறு பத்திரிக்கைகளின் குரல் வளையை நெறிக்கும் வகையில், கடந்த மாதத்தில் டன் ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ.800 முதல் ரூ.1000 வரை மேலும் விலையேற்றம் செய்துள்ளது. தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் ஓட்டுப் பொறுக்குவதற்குத்தானே ஒழிய, செயல்படுத்துவதற்கானதல்ல என்பதை புதிய ஆட்சியாளர்களும் நிரூபித்துக் காட்டி விட்டார்கள். பாசிச ராஜீவின் பொருத்தமான வாரிசுகள் தான்!

• ○ •

பெண்களின் மீதான பாலியல் வன்முறை, பலாத்காரம், தாக்குதல், கடத்தல், ரகசிய விபச்சாரம் ஆகியன தலைநகர் டெல்லியில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் பெருகிவிட்டது. குறிப்பாக 1985-ல் 43 ஆக இருந்த வரதட்சிணைப் படுகொலைகள் 1988-ல் 71 ஆகப் பெருகி விட்டது. 1989 ஜனவரி முதல் இவ்வாண்டு பிப்ரவரி வரையில் வரதட்சிணைக்காக 132 பெண்கள் சித்திரவதை செய்து கொல்லப்பட்டுள்ளனர். இந்த வகையில் உலகிலேயே முதலிடம் வகிப்பது இந்தியாதான்! தலைநகரிலேயே இந்த கதி என்றால் நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க முறை நிலவும் இந்தியாவின் இதர பகுதிகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இந்த லட்சணத்தில் கமிஷன் - கமிட்டி அமைப்பதையே தொழிலாகக் கொண்டுள்ள தேசிய முன்னணி அரசு மகளிருக்கான கமிஷன் அமைத்து பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்க்கப் போகிறதாம். வெட்கக்கேடு!

• ○ •

☆ கேரளாவில் தற்காலிகமாக வேலைக்கு நியமிக்கப்பட்ட 816 பஸ் கண்டக்டர்களை, 1987 ஜூலையில் ''மார்க்சிஸ்ட்'' அரசு வேலையிலிருந்து நீக்கியது. முன்னாள் காங்கிரசு முதல்வர் கருணாகரன் ஆட்சியின்போது, சர்வீஸ் கமிஷன் தகுதியின் அடிப்படையில் அல்லாமல், முறைகேடாக அவர்களை நியமனம் செய்ததாகக் கூறி இந்த வேலைநீக்கத்தை நியாயப்படுத்தினார் 'மார்க்சிஸ்ட்' முதல்வர் நாயனார். வேலையிழந்து பரிதவிக்கும் கண்டக்டர்கள் கடந்த ஈராண்டுகளாகத் தொடர்ந்து முறையிட்டும், தொடர் உண்ணாவிரதம் நடத்தியும் கூட 'மார்க்சிஸ்டு' மந்திரிகள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. வேலையிழந்த தொழிலாளர்களில் இதுவரை 4 பேர் தற்கொலை செய்து கொண்டனர். 9 குடும்பங்கள் பட்டினியால் மாண்டு போயுள்ளன. 3 தொழிலாளிகள் பைத்தியமாகி விட்டனர். வேலையிழந்ததால், புதிதாக திருமணம் செய்து கொண்ட கண்டக்டர்கள் பலரது மனைவிகள் அவர்களை விட்டே பிரிந்தோடி விட்டனர். முறையற்ற வழிகளில் ஊழியர்களை நியமித்த முன்னாள் ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தவோ, தண்டிக்கவோ 'மார்க்சிஸ்டு'கள் முன்வரவில்லை. மாறாக, ஊழியர்களைத்தான் தண்டித்துள்ளனர். புரிந்து கொள்ளுங்கள்! தொழிலாளி வர்க்கத்துக்காகவே அவதாரம் எடுத்துள்ளதாக ஏய்த்துத் திரியும் போலிக் கம்யூனிஸ்ட்டு ஆட்சியின் லட்சணம் இதுதான்!




படிப்பகம்

www.padippakam.com



# மூதேவி ஸ்ரீதேவி ஆன கதை!

இரண்டரை ஆண்டுகாலம் தமிழகத்தில் கவர்னராயிருந்த பி.சி.அலெக்சாண்டர் சென்ற மாதம் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். அவருக்கு பிரியாவிடை கொடுத்து வழியனுப்பினார், 'இனமான' தலைவர் கருணாநிதி!

"சரித்திர அலெக்சாண்டர் நாடுகளை கவர்ந்தார். இந்த அலெக்சாண்டர் நம்முடைய இதயங்களை கவர்ந்தார்" என்று உருகிபோனார். அலெக்சாண்டர் வகித்த அரசு பதவிகளை பெருமையுடன் பட்டியல் போட்டார்.

"இவருடைய அரிய ஆலோசனைகளை பெற்று அன்னை இந்திரா எப்படி ஆட்சி நடத்தினார். எப்படி நிர்வாகம் நடத்தினார் என்பதெல்லாம் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சில நேரங்களில் பார்த்தும் இருக்கிறேன்... அவரோடு இணைந்து தமிழகத்தின் முதலமைச்சர் பொறுப்பை நானும் மற்ற அமைச்சர்களும் பணியாற்றும் வாய்ப்பை பெற்ற நிலையில்... மூத்த சகோதரனாக இருந்து வழி காட்டினார்... அபிப்பிராயங்கள் மாறலாம். வழிமுறைகள் மாறலாம். ஆனால் குறிக்கோளில் நாங்கள் மோதிக் கொள்ளவே இல்லை" என்று நினைவுகூர்ந்து குளிர்ந்து போனார்.

நன்றி கூறி பேசிய அலெக்சாண்டர் உணர்ச்சி வசப்பட்டு போனார். "எனக்கும் முதல்வருக்கும் அணுவளவேனும் கருத்து வேறுபாடு இருந்ததே கிடையாது" என்று நட்பின் ஆழத்தைச் சொல்லி பெருமைப்படுத்தினார்.

காங்கிரசு அரசின் கவர்னர்களுக்கு காங்கிரசு முதன் மந்திரிகளுடன் கூட இப்படி ஒரு நல்லுறவு நிலவியிருக்குமா என்பது சந்தேகமே! மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்ட பூர்வ அரசை மத்தியிலிருந்து திணிக்கப்படும் கவர்னர் தான்தோன்றித்தனமாக கலைப்பதா? மக்களின் அடிப்படை உரிமையை - தேர்ந்தெடுக்கும் உரிமையை - கேலிக்கூத்தாக்கும் கவர்னர் பதவியையே ஒழிக்க வேண்டும் என்று கூக்குரலிட்ட கும்பலின் சொந்தக்காரர்தான் இந்த கருணாநிதி.

மக்களின் பிரதிநிதிகளுக்கு கவர்னர்கள் கடிவாளம் போடுவதா என்று மேடையில் குதிக்கும் இந்த இனமான கூட்டம் இருட்டறையில் கவர்னருக்கு கூழைக்கும்பிடு அல்லவா போட்டிருக்கிறது! அலெக்சாண்டரை தற்போது சரித்திர புருஷராக சித்தரிக்கும் இவர்கள், ஆட்சிக் கட்டிலைப் பிடிப்பதற்கு 30 நாட்களுக்கு முன்புகூட என்ன சொன்னார்கள் தெரியுமா?

"ராஜீவ் காந்தியும், அவருடைய டெலிவிஷன்களும் தமிழ்நாட்டில் ஆளுநர் அலெக்சாண்டர் ஊழலற்ற ஆட்சியை தந்து கொண்டிருக்கிறார் என பிதற்றித் திரிகின்றனர்....

பத்து மாதத்தில் ஆளுநர் தமிழ்நாட்டின் நிர்வாகத்தை சீரமைத்து விட்டார் என விளம்பரப்படுத்தி வரும் ராஜீவ்காந்தி பல்லவன் போக்குவரத்து கழகத்தில் நடைபெறும் மோசடிக்கு என்ன பதில் சொல்கிறார்" என்று கூரைமீது ஏறி கூவியது. (17.12.88 முரசொலி)

ஒரே எண்ணுள்ள பல பல்லவன் பயண சீட்டுகளை ஆதாரபூர்வமாக வெளியிட்டு பல லட்ச ரூபாய் ஊழலுக்கு கவர்னர் துணைபோகிறார் என்று குற்றம் சாட்டியது.

"ராஜீவ்காந்தியின் பேரணிக்கும் பொதுக்கூட்டத்திற்கும் காங்கிரசு கட்சியினரை பல்லவன் இலவசமாக ஏற்றிச் செல்கிறது... அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையிலும் ஊழல்கள் புரையோடி கிடக்கின்றன.... இதற்கு பெயர்தான் ஊழலற்ற ஆட்சியா....? பாமர மக்களை ஏமாற்றி அவர்களுக்குத் தெரியாமல் ஒவ்வொரு நாளும் லட்சக்கணக்கான ரூபாய் மோசடித்தனமாக சம்பாதிப்பதுதான் சிறந்த நிர்வாகத்திற்கு எடுத்துக் காட்டா?" என்று கொதித்தார் கருணாநிதி (டை)

"காங்கிரசின் ஏஜெண்டாகச் செயல்பட்டு வரும் ஆளுநர் சுரங்கப்பாதை ஒன்றுக்கு அடிக்கல் நாட்டினார். இது தேர்தலுக்கான நாடகமே என்று தெரிய வந்துள்ளது.... மாதக் கணக்கில் தூங்கிக் கொண்டிருந்த ஆளுநர் அரசு திடீரென விழித்துக் கொண்டது (டை 18.12.88)"

"ஆளுநர் அரசின் மெத்தனம் - வெள்ளம் பாதித்த பகுதிகளில் நிவாரணப் பணியே இல்லை"(டை 10.12.88)" "ஆளுநர் நிர்வாகத்தின் அவலக் காட்சிகள்! - பிரதமர் ராஜீவ் காந்தி ஒவ்வொருமுறை தமிழ்நாடு விஜயம் செய்யும் போதும் ஆகும் செலவு ரூ.10 கோடி. இதுவரை அவர் நடத்திய அஸ்வமேத யாகத்தால் (தொடர் பயணத்தால்) ரூ.60 கோடி அரசு பணம் பாழ்....

இந்த உண்மையை எடுத்துச் சொன்னால் தமிழ்நாட்டில் உள்ள ஒரு நியமன காரியதரிசிக்கு (கவர்னருக்கு) கோபம் பொத்துக் கொண்டு, சொரணை மிகுந்து சூடு அதிகமாகிவிட்டது.... இதுவரை அலெக்ஸ் ஆட்சியின் சாதனை என்ன?.... ஒரு முதலமைச்சரை போன்ற, ஆட்சித் தலைவரைப் போன்ற எண்ணமும் இறுமாப்பும் தானே....? தமிழ்நாட்டு நிர்வாக லட்சணம் என்ன நிலை பெற்றிருக்கிறது.

வெற்று ஆடம்பர அறிக்கைகள், விழா மேடைப் பிரசங்கங்கள், வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்கள் என்று மலிவான கதாநாயகத் தன்மை மட்டும்தான் தெரிகிறதே தவிர அலெக்ஸ் ஆட்சி மக்கள் நலன் பேணவில்லை" (டை 4.12.88)

"சென்னை பல்கலைக்கழக சிமெண்ட் ஊழல்... ஊழல் பேர்வழிகளைக் காப்பாற்ற ஆளுநர் அதீத அக்கரை (டை 21.12.88)"

தேர்தலுக்கு முன் '88 ஆம் ஆண்டு இறுதியில் சில முரசொலி பத்திரிக்கைகளை மட்டும் புரட்டிப் பார்த்ததில் கவர்னர் ஆட்சியின் யோக்கியதைகள் இப்படி வந்து விழுந்தன.

சுருக்கமாக சொன்னால், தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு ஆள் பிடிக்கும், ஊழலில் நிதி சேர்க்கும், ஓட்டுக்கு மக்களை மயக்கும் வேலையைத்தான் அலெக்சாண்டர் செய்திருக்கிறார். இதற்காக அரசு எந்திரத்தின் அனைத்துப் பிரிவையும் கேடாக பயன்படுத்தியிருக்கிறார், அலெக்சாண்டர்.

உழைக்கும் மக்களை ஒருபுறம் ஒடுக்கிக் கொண்டே மறுபுறம் அவர்களை கலாச்சார சீரழிவில் தள்ளுவதை அரசின் கொள்கையாக்கினார். "ஆளுநர் ஆட்சியில் 8 மாதத்தில் 130 வேலை நிறுத்தங்கள்! இந்தியாவிலேயே இரண்டாவது இடம் (டை 28.12.88)". "அதிகார பறிப்பு - அதிகார குறைப்பு - அனுமதி மறுப்பு - ஆளுநர்



படிப்பகம்

www.padippakam.com

அரசின் ஜனநாயக விரோதத்தை கண்டித்து கழகத்தினர் (தி.மு.க.) ஆர்ப்பாட்டம் (டெ 5.12.88)'', ''பல்வேறு வழிகளில் அரசு ஊழியர்களின் உழைப்பைச் சுரண்டும் ஆளுநர் அரசு - பல அமைப்புகள் கண்டனம் (டெ 16.12.88)''

உழைப்பாளிகளின் சிந்தனையை சூதாட்டத்தில் திருப்பிவிட்டு அவர்களின் அடிமடியில் இருப்பதையும் கைவைத்தது அரசு. ''அலெக்ஸ் ஆட்சியில் தாய்குலத்தை தாலியறுக்க வருகிறது மீண்டும் குதிரை ரேஸ் - அலெக்ஸ் தலைமையிலான காங்கிரசு அரசு பச்சைக்கொடி காட்டிவிட்டது. தமிழ்நாடு முழுவதும் பழையபடி ரேஸ் ஆரம்பமாகிவிட்டது. சென்னையில் நவம்பர் 15 முதல் ஏழைக் குடும்பங்களின் தாலியை அறுக்கும் சீசன் தொடங்கிவிட்டது.... ''நீங்கள் ஏழை மக்களை கொள்ளையடியுங்கள்! எங்களுக்கு பங்கு கொடுத்தால் சரி'' என்ற அணுகுமுறையில் மூப்ஸ் (மூப்பனார்) சிப்ஸ் (சிதம்பரம்) அலெக்ஸ் (கவர்னர்) கும்பல் காங்கிரசுக்காக பேரம் பேசி மீண்டும் குதிரை வடிவில் பல குடும்பங்களுக்கு எமனை அனுப்பி வைத்திருக்கிறார்கள். (முரசொலி 6.11.88)''

தமிழக மக்களின் வரிப்பணத்தில், ராஜ் பவனில் மன்னர் வாழ்க்கை வாழ்ந்து கொண்டு நம் மக்களுக்கே கேடு விளைவித்த பாசிச ராஜீவின் கைக்கூலி! தன்னுடைய கொடுங்கரத்தை தமிழீழம் வரையில் நீட்டிய பாசிச கும்பலின் விசுவாசி! புலிகளை ராஜீவின் துரோக ஒப்பந்தத்துக்குள் முடக்க அவர்களை தமிழகத்திலிருந்து விரட்டிய குள்ள நரி! அவர்களைப் பற்றி தமிழக மக்களிடம், அரசு பிரச்சார சாதனங்கள் மூலம் பல்வேறு பீதி கிளப்பிய ராஜீவின் கோயபல்ஸ்!

தமிழகத்திற்கு கவர்னராக நியமிக்கப்படுவதற்கு முன்பே பிரபலமான மக்கள் விரோதி! கடைந்தெடுத்த தேசத் துரோகி! பாசிச இந்திராவின் முதன்மை செயலாளராக இருந்து பஞ்சாப் பொற்கோயிலில் அரசு அரங்கேற்றிய படுகொலையின் - நீல நட்சத்திர நடவடிக்கை - மூளையாக செயல்பட்டவர்.

நாட்டின் பாதுகாப்பு ராணுவ ரகசியங்களை கடத்திவந்த ஏகாதிபத்திய உளவாளி கூமர்நாராயணன்'வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு பதவியை துறந்து தப்பித்துக் கொண்டவர். இவரைத்தான், இந்த அலெக்சாண்டரைத்தான் ''நம்முடைய இதயங்களை கவர்ந்தவர்'', ''என்னுடைய மூத்த சகோதரர்'' என்று புளகாங்கிதம் அடைகிறார், கருணாநிதி.

கருணாநிதியின் அரசியல் பிறப்பே பிழைப்பு வாதம்தான்! அவருடைய இனமானம் என்பது மத்திய அரசிடம் அதன் அதிகாரிகளிடம் கூழைக்கும்பிடு போடுவதுதான்! கருணாநிதியின் அடிமைப் புத்திக்கு இன்னொரு எடுத்துக்காட்டுதான் இது. அப்போது மக்களிடம் ஓட்டு வாங்க, காங்கிரசு - கவர்னர் எதிர்ப்பு வீரம்! இப்போது அதிகார வர்க்கத்தின் தயவுக்கு அலெக்சாண்டருக்கு புகழாரம். பாராட்டு! இதுதான் கருணாநிதியின் 'சாணக்கியத்தனம்'!

பச்சையப்பன்

# மே தினத்தில் கோர்பியின் ஓட்டம்



இத்தனை நாளும் சோசலிச வேஷங் கட்டி ஆடிய கம்யூனிசத் துரோகிகள், இவ்வாண்டு மே தினத்தன்று அனைத்தையும் கழற்றி எறிந்துவிட்டு தங்கள் முகவிலாசத்தைத் தெளிவாகவே நிரூபித்துக் காட்டிவிட்டார்கள். சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆர்ப்பாட்ட தினமான மே நாளின் பாரம்பரிய மரபுகளை அவர்கள் சுக்குநூறாக உடைத்தெறிந்து விட்டார்கள். திரிபுவாதத்தின் குருபீடமான ரஷியாவில், மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் நடந்த அணிவகுப்பில் மருந்துக்குக்கூட கம்யூனிச ஆசான்களின் படங்கள் இல்லை. சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமை - கடமைகள் பற்றி எந்த முழக்கமும் ஒலிக்கவில்லை. மாறாக, கூடுதல் சுதந்திரம் கொடு! சோசலிசம் ஒழிக! கம்யூனிச மாஃபியாக்கள் ஒழிக! முதலான முழக்கங்களோடு, 'சீர்திருத்தச் செம்மல்' கோர்பிக்கு எதிராகவும், ''கோர்பியிடமிருந்து பெரஸ்த்ரோய்க்காவைக் காப்போம்'' என்றும் முதலாளித்துவ ஜனநாயகத்தைக் கோருவோர் பெருமளவில் திரண்டு கோஷமிட்டனர். அணிவகுப்பு மரியாதை ஏற்க வந்த கோர்பியும் இதர தலைவர்களும் அரைமணி நேரம் கூட மேடையில் நிற்கவில்லை. இனியும் நின்றால் மரியாதை போய்விடும் என்று பயந்தார்களோ, என்னவோ! அவசரமாக இறங்கி ஓடத் தொடங்கினார்கள். ஊர்வலத்தினர் அதைப் பார்த்து ''வெட்கம்! வெட்கம்!!'' என்று கூச்சலிட்டு எள்ளிநகையாடினர். இதேபோல, சீனாவில் முதலாளித்துவப் புரட்சியாளர் சன்யாட்சென் படத்தைத் தவிர வேறெந்த படமும் மே தின ஊர்வலத்தில் இல்லை. சென்ற ஆண்டை விடக் குறைவான மக்களே ஊர்வலத்தில் பங்கேற்றனர். அது சரி; மூக்கு வெளுத்து கழுதையாக இனங்காட்டிக் கொண்ட பிறகும், இந்நாடுகளை சோசலிச நாடுகள் தான் என்று பசப்பும் இங்குள்ள போலிக் கம்யூனிஸ்ட்டுகளுக்கு இனியும் எதற்கு செங்கொடி?



## போலிகளின் கூடாரம் கலைகிறது!

வங்கத்தை ஆளும் போலிக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இப்போது உறுப்பினர் பஞ்சம் வந்துவிட்டது. ஏறத்தாழ ஒன்றரை லட்சம் உறுப்பினர்களைக் கொண்டது, மே.வங்க 'மார்க்சிஸ்ட்' கட்சிக்கிளை. இவர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் இவ்வாண்டு தமது உறுப்பினர் தகுதியைப் புதுப்பிக்கவே இல்லை. மார்ச் 31ஐ கடைசி நாளாக கட்சி செயலகம் அறிவித்திருந்த போதிலும், பல பத்தாயிரக்கணக்கான உறுப்பினர்கள் தமது தகுதியை புதுப்பித்துக் கொள்ள முன்வரவில்லை. பீதியடைந்த மாநில கட்சித் தலைவர் சைலென்தாஸ் குப்தா, மே 31 வரை அவகாசம் கொடுத்து, உறுப்பினர்களிடம் கெஞ்சிப் பார்த்தார். ஆனாலும் எதிர்பார்த்த அளவுக்கு யாரும் புதுப்பிக்க முன்வரவில்லை. குறிப்பாக மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 17% பேரை உள்ளடக்கிய 24 பர்கானா மாவட்டத்தைச் சேர்ந்த 'தோழர்கள்' கட்சிக்கே முழுக்கு போட்டுவிட்டு வெளியேறிவிட்டனர்.

திரிபுவாதக் கட்சியிலிருந்து முதலாளித்துவக் கட்சியாக 'மார்க்சிஸ்டுகள்' முன்னேறிவிட்டபிறகு, புரட்சியில் நம்பிக்கையுள்ள அணிகள் அவர்களிடமிருந்து விலகிப் போவது நியாயம்தானே!



படிப்பகம்

www.padippakam.com

# நர்மதா திட்டம்: ஆதரிப்பதா? எதிர்ப்பதா?

**உலகவங்கி உதவியுடன் தொடங்கப்பட்டுள்ள நர்மதா அணைக்கட்டு (பக்ரேஷ்வர்) திட்டத்தால் ஏற்படும் பாதிப்புகள் காரணமாக அத்திட்டத்தை எதிர்த்து சுற்றுச்சூழல்வாதிகளும் தன்னார்வக் குழுவினரும் போராடி வருகின்றனர். மக்கள் நலனைக் காட்டி எதிர்போராட்டம் நடத்தி அவர்களை அடக்குகிறது அரசு. உழைக்கும் மக்கள் இத்தகைய பெரும் திட்டங்களை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா?**

குடிகாரன் பேச்சு விடிந்தாலே போச்சு என்பது பழமொழி. ஓட்டுப் பொறுக்கிகளின் வாக்குறுதிகள் தேர்தல் முடிந்ததும் போச்சு என்பது இன்றைய புதுமொழியாகி விட்டது. ராஜீவின் ஊழல் கொள்ளையோடு அதன் மக்கள் விரோத திட்டங்களையும் எதிர்த்து வந்த தேசிய முன்னணியினர், ஆட்சிக்கு வந்த பிறகு இன்று அதே திட்டங்களை ஆதரித்து அமுல்படுத்த துடிக்கிறார்கள். குறிப்பாக நர்மதா அணைத் திட்டமும் பாலியபால் ஏவுகணைத் திட்டமும் இதில் முக்கியமானவை.

ஒரிசாவிலுள்ள பாலியபால் - பாலாசோர் வட்டாரத்தில் அணு ஆயுத ஏவுகணைத் தளத்தை நிறுவ எத்தனித்த பாசிச ராஜீவ் கும்பலின் போர் வெறியை எதிர்த்து அப்பகுதிவாழ் மக்கள் கடந்த நான்காண்டுகளாக விடாப்பிடியாகப் போராடி வருகின்றனர். ஏழைகளின் வாழ்வைப் பறிக்கும் இந்த ஏவுகணைத் திட்டத்தை எதிர்த்து, மக்கள் போராட்டத்திற்கு தலைமையேற்று வழிநடத்தியது, ஒரிசா மாநில ஜனதா தளக் கட்சி. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இத்திட்டத்தையே ரத்து செய்வோம் என்று வாக்குறுதி அளித்து தேர்தலில் ஓட்டுப் பொறுக்கியது. ஆட்சிக்கு வந்தபிறகு ''நாட்டின் பாதுகாப்பு நலன் கருதி இத்திட்டத்தைச் செயல்படுத்தியே தீருவோம்'' என்று இப்போது ஜனதா தள முதல்வர் பிஜு பட்நாயக் கொக்கரிக்கிறார்.

இதே போல மத்தியப் பிரதேசத்தில் தொடங்கி அரபிக் கடலில் சென்று கலக்கும் நர்மதா நதியில் அணைகள் கட்டும் திட்டத்தால் ஒரு லட்சம் பழங்குடி மக்களின் வாழ்வு பறிக்கப்படுவதை எதிர்த்து பழங்குடி மக்களும், சுற்றுச் சூழல்வாதிகளும், தன்னார்வக் குழுக்களும் தொடர்ந்து போராடி வருகின்றனர். ஆட்சிக்கு வருமுன் ஜனதாதளக் கட்சியும் பாரதீய ஜனதாவும் இப்போராட்டத்துக்கு தார்மீக ஆதரவளித்தன. தனது தேர்தல் அறிக்கையில், இத்திட்டத்தைப் பரிசீலித்து அவசியமானால் கைவிடுவதாகவும் பாரதீய ஜனதா வாக்களித்தது. ஆனால் இன்று ஆட்சிக்கு வந்தபின் ம.பி, குஜராத் மாநிலங்களின் ஜனதாதள - பார்தீய ஜனதா கூட்டணி அரசுகள் இத்திட்டத்தை வெறியோடு ஆதரித்து போராடும் மக்கள் மீது அடக்குமுறையை ஏவுகின்றன.

பாலியபால் ஏவுகணைத் திட்டத்திற்கு ஆட்சியாளர்களைத் தவிர ஆதரிப்பார் யாருமில்லை. ஆனால் நர்மதா திட்டத்துக்கு ஆதரவும் அதேசமயம் எதிர்ப்பும் என போராட்டம் தீவிரமடைந்துள்ளது. ஒருபுறம், பிரபல காந்தீயவாத சமூக சேவகர் பாபா ஆம்தே தலைமையில் பாதிக்கப்படும் மக்கள் இத்திட்டத்தை எதிர்த்துப் போராடுகின்றனர். மறுபுறம், குஜராத், ம.பி. மாநிலங்களின் அரசும், ஓட்டுக்கட்சிகளும், மக்களும் ஒரே அணியில் நின்று திட்டத்தை ஆதரித்து எதிர் போராட்டங்களை நடத்துகின்றனர்.

1280 கி.மீ. நீளமுள்ள நர்மதா நதியில் அணைகளைக் கட்டி பாசனத்தைப் பெருக்க 3 தலைமுறைக்கு முன்பு திட்டம் தீட்டப்பட்டது. நர்மதா நதியில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைத் தடுக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட திட்டம் இது. போதிய நிதி ஆதாரமின்றி முடங்கிக் கிடந்த இத்திட்டத்திற்கு உலக வங்கி ரூ.1300 கோடி கடனுதவி செய்ய முன்வந்துள்ளது.

இது ஒரு லட்சம் மக்களின் வாழ்வைப் பறிக்கும் திட்டம். இத்திட்டத்தால் மொத்தம் 248 கிராமங்கள் அழிக்கப்படும். 37,000 ஹெக்டேர் நிலம் இத்திட்டத்திற்கென அரசால் பிடுங்கிக் கொள்ளப்படும். இதில் ம.பி.யிலுள்ள நீர்பிடி பகுதியில் மட்டும் 193 கிராமங்கள் அழியும். மகாராஷ்டிரத்திலுள்ள டலோடா காட்டுப் பகுதியில் 25000 ஹெக்டேர் நிலப்பிரப்பிலுள்ள வளமான காடுகள் அழியும். இக்காட்டில் உள்ள நன்கு வளர்ந்த - அரிதான 5 லட்சம் மரங்கள் வெட்டப்படும். இதன் விளைவாக சுற்றும் சூழல் கடுமையாக பாதிக்கப்பட்டு நிலநடுக்க அபாயமும் ஏற்படும். எனவே இத்திட்டத்தை அனுமதிக்கக்கூடாது'' பாபா ஆம்தே தலைமையில் ''நர்மதா பச்சோ அண்டோலான்'' இயக்கத்தினர் போராடி வருகின்றனர்.

''பாதிப்புகளைக் கணக்கில் கொண்டு மாற்று ஏற்பாடுகளை செய்துள்ளோம். கிராமங்களிலிருந்து வெளியேற்றப்படும் ஒவ்வொருவருக்கும் 2 ஏக்கர் நிலம் தரப்படும். கட்ச் வளைகுடா பகுதியில் உள்ள 30 லட்சம் மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும் மகத்தான திட்டம் இது. இத்திட்டத்தை எதிர்ப்பது மக்களுக்கே எதிரானது'' என்று குஜராத் முதல்வர் சிமன்பாய் பட்டேல் எதிர்ப்பாளர்களைச் சாடுகிறார். ''கட்ச் வளைகுடா பகுதி மக்களுக்கு குழாய் மூலம் தண்ணீரைக் கொண்டு செல்ல முடியும். ஆனால் காடுகளையும் கிராமங்களையும் அழிப்பது நாட்டையும் மக்களையும் பேரழிவுக்குத் தள்ளுவதாகும்'' என்று அவரை அம்பலப்படுத்துகிறார் பாபா ஆம்தே.

வேடிக்கை என்னவென்றால், பாபா ஆம்தேவின் இயக்கத்தில் பங்கேற்கும் தன்னார்வக் குழுக்களுக்கு ஏகாதிபத்தியங்கள் தான் 'நன்கொடை' தருகிறது. நர்மதா திட்டத்துக்கும் உலகவங்கிதான் நிதியுதவி செய்கிறது. இதுதவிர நர்மதா திட்டத்தின் மூலம் ஒருபக்கம் காடுகளை அழித்துக் கொண்டே மறுபக்கம் காடுவளர்ப்பு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு திட்டங்களுக்கும் இதே ஏகாதிபத்தியங்கள்தான் நிதியுதவி செய்கிறது.

ஆம்தே தலைமையிலான இயக்கம் ஏகாதிபத்திய தன்னார்வக் குழுக்களால் வழிநடத்தப்பட்டாலும், நர்மதா அணைத் திட்டத்தால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி அவர்கள் கூறும் நியாயமான வாதங்களை மறுத்துவிட முடியாது. ஏற்கனவே பல்வேறு பெரும் அணைக்கட்டு திட்டங்களால் ஏறத்தாழ 5 லட்சம் மக்கள் அவர்கள் வாழ்ந்த மண்ணிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்படும் மக்களுக்கு வேலை வாய்ப்பு, குடியிருப்பு, நிவாரண உதவிகள் அனைத்தும் கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது. இத்தகைய பெரும் திட்டங்கள் கால இலக்கிற்குள் நிறைவேறாமல் தாமதப்படுவதால், திட்டச் செலவு அதிகரித்து நிதிப் பற்றாக்குறை ஏற்படுவதும், அதனால் திட்டத்தையே தள்ளிப் போடுவதும், மீண்டும் ஏகாதிபத்தியங்களிடம் கடன் வாங்கித் திவாலாவதும் தான் நடக்கிறது. என்று ஆதாரங்களுடன் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

அவர்கள் சுட்டிக் காட்டுபவை உண்மையே என்றாலும் பாபா ஆம்தே கோருவது போல திட்டத்தையே கைவிடுமாறும், இத்தகைய பெருந்திட்டங்களே கூடாது என்றும் நாம் போராடலாமா? அல்லது ஆட்சியாளர்கள் வாதிடுவது போல 4 மாநில மக்களின் நலன் கருதி திட்டத்தை ஆதரிக்கலாமா என்ற கேள்வி எழுகிறது.

திட்டத்தால் ஏற்படும் பாதிப்புகளைச் சுட்டிக் காட்டும் பாபா ஆம்தே, அதற்கான விஞ்ஞான பூர்வமான மாற்றுத் தீர்வு எதையும் முன்வைக்கவில்லை. சிறிய அணைகளைக் கட்ட வேண்டும்; பெரிய அணைகளைக் கட்டாமல் குழாயமூலம் நீரைக் கொண்டு செல்ல வேண்டும் என்ற கற்பனாவாத காந்தீயத் தீர்வுகளையே முன்வைக்கிறார். இது, சமுதாயத்தின் தேவையை ஒட்டி பெரும் அணைக்கட்டு - நீர்ப்பாசனத் திட்

நர்மதா திட்டத்தை ஆதரித்து எதிர் போராட்டம் நடத்தும் குஜராத் முதல்வர் சிமன் பாய் பட்டேல்






படிப்பகம்

www.padippakam.com

டங்களின் இன்றியமையாத தேவையை மறுக்கும் போக்காகும். மின்திட்டங்களே வேண்டாமென்று சாண எரிவாயு திட்டத்தில் விளக்கு எரிக்கச் சொல்வதைப் போன்றதுதான் இது.

அதிலும், இத்திட்டத்தை எதிர்க்கும் தன்னார்வக் குழுவினர் போராட்டத்தில் உறுதியானவர்கள் அல்ல. நேற்று வரை இவர்கள் மனித உரிமைக்கான இயக்கங்களைத் தீவிரமாக நடத்தினர். இன்று அதை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அணுஉலை எதிர்ப்பு முதலானவைதான் இன்றைய தலையாய பிரச்சினை என்று கிளம்பியுள்ளனர். பம்பாயில் குடிசைகள் இடிக்கப்படும்போது அம்மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்த இந்தி நடிகை ஷபனா ஆஸ்மி, இன்று பாபா ஆம்தேவுடன் பவனி வந்து சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குக் குரல் கொடுக்கிறார். இங்கே தமிழகத்திலுள்ள தன்னார்வக் குழுக்கள் கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்பு பிரச்சாரத்தில் தீவிரமாக இறங்கியுள்ளனர். வர்க்கப் போராட்டத்தைவிட சுற்றுச்சூழல் பாதிப்புதான் இன்றைய தலையாய பிரச்சினை என்பதாகக் காட்டி, உழைக்கும் மக்களின் கவனத்தைத் திசை திருப்பும் திருப்பணியைத்தான் இவர்கள் செய்து வருகிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால், உலகச் சுற்றுச் சூழலுக்கு பேரழிவை ஏற்படுத்துபவை ஏகாதிபத்தியங்கள்தான். அமெரிக்க ஏகாதிபத்தியம் சொந்த நாட்டிலேயே அமேசான் காடுகளை அழித்தும், ரசாயன நச்சுக் கழிவுகளை உலகெங்கும் ரகசியமாகக் கொட்டியும், அணுக்கதிர்வீச்சு அபாயத்தையும் தோற்றுவித்துள்ளது. இதே போல ரஷிய ஏகாதிபத்தியமும் செர்னோபில 'விபத்து' போன்று பல பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக போடப்படும் ஒப்பந்தங்களை மீறுவதும் ஏகாதிபத்தியங்கள்தான். ஆதிக்க வெறிபிடித்து சொந்த நாட்டில் சுற்றுச் சூழலை நஞ்சாக்கும் ஏகாதிபத்தியங்கள், மூன்றாம் உலக நாடுகளில் காடு வளர்ப்பு திட்டங்களுக்கு நிதியுதவி செய்து அதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்க முயலுகின்றன. அதாவது ஏகாதிபத்தியங்கள் விருந்துண்ண ஏழைநாடுகள் பத்தியம் இருக்கவேண்டும் என்பதுதான் அவர்களின் கொள்கை.

அதே நேரத்தில், இதே ஏகாதிபத்தியங்கள்தான் உரம், பூச்சி மருந்து முதலானவற்றுக்கான தமது சந்தைக்காக, ஏழை நாடுகளில் நவீன விவசாய முறைகளைப் படிப்படியாக புகுத்துகின்றன. இதற்காக பெரும் அணைகள் கட்டி நீர்ப்பாசனத்தைப் பெருக்கி அதன் மூலம் தமக்குத் தேவையான கச்சாப் பொருள் - உணவு தானியங்களை உற்பத்தி செய்ய ஊக்குவித்து அவற்றைத் தமது நாட்டுக்கு வாரிச் செல்கின்றன. இத்தகைய திட்டங்களுக்காக இங்கே காடுகளை அழிப்பதும் ஏகாதிபத்தியங்கள்தான்! மொத்தத்தில் ஏகாதிபத்தியங்களின் நலன்களுக்காகவே இங்கே மக்கள் நலன, சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற பெயரில் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

மக்கள் நலனுக்கானது என்ற முகாந்திரத்தில் திட்டத்தை நடைமுறைப்படுத்தியே தீருவோம் என்று ஆட்சியாளர்கள் கொக்கரிப்பதற்கு காரணம் இல்லாமல் இல்லை. ஏனென்றால், இதனால் ஆதாயமடையப் போவது ஓட்டுப் பொறுக்கிகளும், அவர்களின் பினாமிகளான காண்டிராக்டர்களும், பணக்கார விவசாயிகளும்தான்! எனவேதான் குஜராத் முதல்வர் சிமன்பாய் பட்டேலும் அம்மாநில எம்.பி.களும் மந்திரிகளும் கட்ச் வளைகுடா பகுதியிலுள்ள மக்களை உசுப்பிவிட்டு நர்மதா திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பேரணி - ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். மறுபுறம், குஜராத்திலிருந்து அனைத்து ஓட்டுக்கட்சிப் பிரமுகர்களும் டெல்லிக்கும் சென்று வி.பி.சிங்கிடம் திட்டத்தைக் கைவிடக்கூடாது என்று மிரட்டினர். பாபா ஆம்தேவின் போராட்டத்தைச் சிதறடிக்கும் நோக்குடன் குஜராத் ஜனதாதள கட்சி ''நர்மதா பிரிகேட்'' என்ற பெயரில் ஒரு குண்டர் படையை நிறுவி அச்சுறுத்தி வருகிறது.



பாதிக்கப்படும் பழங்குடி மக்களைத் திரட்டி நர்மதா திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தும் பாபா ஆம்தே (படுக்கையில்).

இதுவும் போதாதென்று இத்திட்டத்தால் ஆதாயமடையவுள்ள பணக்கார விவசாயிகள் சார்பில் 2000 பேர் டெல்லிக்குச் சென்று, இத்திட்டம் நிறைவேற்றப்படாவிட்டால் தாங்கள் ரத்தம் சிந்தவும் தயார் என்பதற்கு அடையாளமாக ரத்ததானம் செய்ய முடிவு செய்துள்ளனர். குஜராத்தில் ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் ஒன்ற சேர்ந்து இத்திட்டத்திற்கு ஆதரவாக 5 லட்சம் மக்களைத் திரட்டி வரும் ஜூன் 15 அன்று அகமதாபாத்தில் ஆர்ப்பாட்ட பேரணி நடத்த திட்டமிட்டுள்ளனர்.

மாநில அரசு தரப்பில் ஒதுக்க வேண்டிய நிதிக்குப் பற்றாக்குறை உள்ளதால் குஜராத் முதல்வர் வெளிநாடுகளில் வாழும் குஜராத்தியர்களிடம் சென்று இத்திட்டத்திற்கான கடன் பத்திரங்களை வாங்கி ஆதரிக்குமாறு கெஞ்சுகிறார். பாபா ஆம்தே சுட்டிக் காட்டுவது போல இன்னும் 10 ஆண்டுகள் ஆனாலும் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட குஜராத்துக்குப் போய்ச் சேரப் போவதில்லை என்பதுதான் உண்மை. ஏற்கனவே உள்ள சாரதா சகாயத் திட்டம், சிரீராம் சாகர், கோனே, கோசி ஆகிய திட்டங்கள் ஆண்டுகள் பல வாகியும் அங்குலம் அங்குலமாகத்தான் நகருகிறது. அவ்வளவு ஏன், கிருஷ்ணா நதி நீர்த்திட்டம் எந்த கதியில் உள்ளது என்பதை சென்னை மக்கள் நன்கறிவர். இந்த லட்சணத்தில் நர்மதா திட்டம் நிறைவேறுவதற்குள் இன்றைய இளைய தலைமுறையினர் கிழவர்களாகி விடுவார்கள்.

எனவே மக்கள் நலனைப் புறக்கணித்துவிட்டு ஆளும் வர்க்கங்கள் - ஏகாதிபத்தியங்களின் குறுகிய நலனுக்கான இத்தகைய திட்டங்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கு நட்டஈடு கோரியும், குறிப்பாக வெளியேற்றப்படும் பழங்குடி மக்களுக்கு மறுவாழ்வு கோரியும் ஓட்டுப் பொறுக்கிகள் - அதிகாரிகளின் கூட்டுக் கொள்ளையையும் விரயத்தையும் எதிர்த்தும் நாம் போராட வேண்டும். அதேசமயம் மக்களின் கரங்களில் அதிகாரம் இல்லாமல் மக்கள் நலனுக்கான வளர்ச்சித் திட்டங்களை சாதிக்கவும் முடியாது என்பதை உழைக்கும் மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

திடீர் வெள்ளப் பெருக்கெடுத்து தனது போக்கை மாற்றிக் கொண்டு பல ஊர்களை நாசப்படுத்தி வந்தது, 'சீனாவின் துயரம்' என்றழைக்கப்பட்ட யாங்ஷி நதி. மாவோ தலைமையில் புரட்சியைச் சாதித்த சீன மக்கள் தமது இலவச உழைப்புத் திட்டத்தால் அதைக் கட்டுப்படுத்தி செல்வம் கொழிக்கும் ஆற்றுப்படுகையை உருவாக்கினார்கள். புல்பூண்டு கூட முளைக்காத சிங்கியாங் மலைப் பிரதேசத்தை சோலைவனமாக மாற்றினார்கள். இப்படி உலக அதிசயங்களை நிகழ்த்தக் கூடியது மக்கள் சக்தி. மக்கள் சக்தியை ஒன்று திரட்டி வெளிக்கொணர்வது புரட்சி. சரியான புரட்சிகர அனுபவங்களைப் பெற்று மக்கள் விழிப்புறும்போது ஏகாதிபத்தியங்களையும் அவர்களின் குறுகிய நலனுக்கான திட்டங்களையும் புரட்சி வெள்ளத்தில் தூக்கியெறிவார்கள்.

● குமார்.



படிப்பகம்

www.padippakam.com



கை வெட்டப்பட்ட கொத்தடிமை படாலி; நிலப்பிரபுவின் குரூரம்.

# நிலப்பிரபுக்கள் கொட்டம்!

கொத்தடிமை என்றால் வாழ்நாள் முழுக்க நிலப்பிரபுவுக்கு உழைத்து மடிவது மட்டும்தானா? நிலப்பிரபுக்களின் அதிகாரத்திற்கு கீழ்ப்படிய மறுக்கும் கொத்தடிமைகளின் உடல்அங்கங்களை துண்டிப்பது, கட்டி வைத்து மலத்தை தின்னவைப்பது, நிர்வாணப்படுத்துவது, அவர்களின் குடிசையைக் கொளுத்துவது, உயிரோடு எரிப்பது, கற்பழிப்பது என்று தண்டிக்கின்றனர். நிலப்பிரபுக்களின் இந்த குரூர அதிகாரத்திற்கு போலீசு, கோர்ட், அதிகாரவர்க்கம் இம்மூன்றும் சட்டபூர்வ முத்திரை குத்துகின்றன. 'அமைதி'யான கிராமப்புறங்களில் நிலப்பிரபுக்களின் அதிகார கோட்டைகளில் மறைக்கப்பட்ட சம்பவங்களில் சிதறிவந்த ஒன்றிரண்டு சம்பவங்கள் இவை....

● ○ ●

மத்தியப் பிரதேச மாநிலம், ரெய்சன் மாவட்டம்; மற்ற மாவட்டங்களைப் போலவே நிலப்பிரபுக்களின் கோட்டை! நரேந்திரசிங் கோராவ் என்ற நிலப்பிரபு இப்பகுதியில் பிரபலமானவன். அம்மாவட்ட காங்கிரசுக்கட்சியின் பொதுச் செயலாளர். மாநில நிலவளவங்கியின் முன்னாள் மாவட்டத் தலைவர்.

இவன் தன் வீட்டின் பண்ணை அடிமையான படாலி என்பவரை தூணில் கட்டி அவரது வலது முழங்கையை கோடாலியால் வெட்டி விட்டான்.

அவரை அப்படியே மாட்டுவண்டியில் தூக்கிப்போட்டு அருகில் உள்ள போலீசு நிலையத்தில் ஒப்படைத்தான். தன் மனைவியின் கையைப் பிடித்து இழுத்ததால் தற்காப்புக்காக தான் தாக்கியதாகப் புளுகினான். தற்செயலாக படாலி கையில் வெட்டுப்பட்டு விட்டதாக புகார் கொடுத்தான். படாலியும் போலீசு நிலையத்தில் அதை ஒத்துக் கொண்டதாக ஆதாரம் தயாரித்த போலீசு, ஒப்புக்கு நிலப்பிரபு கோராவை கைது செய்து இரண்டு மணிநேரத்தில் ஜாமீனில் விடுதலை செய்தது.

உண்மை விவரம் இதுதான். 1500 ரூபாய் கடனுக்காக கடந்த 5 ஆண்டுகாலமாக கோராவ்விடம் கொத்தடிமையாக இருக்கிறார் படாலி. ஒருநாளும் விடுப்பு எடுக்காத படாலி தன் திருமணத்திற்காக விடுமுறை கேட்டார். விடுமுறை கொடுக்க மறுத்ததால், அருகிலிருக்கும் தன் மாமன் வீட்டுக்கு சொல்லாமல் ஓடிவிட்டார்.

நிலப்பிரபு கோராவ் தன் அடியாட்களை அனுப்பி படாலியை நயவஞ்சகமாக அழைத்து வந்தான். பாக்கியிருக்கும் அவசர வேலையை செய்துவிட்டுப் போகும்படி அழைக்க, படாலியின் மாமனும் அப்பாவித்தனமாக, படாலியை நிலப்பிரபு வீட்டுக்கு அனுப்பி வைத்தார். அங்கு சென்றதும் "எனக்காக உழைக்காமல் ஓடியவனுக்கு கை எதற்கு?" என்று படாலியின் முழங்கையை கோடாலியால் துண்டித்தான், நிலப்பிரபு. ஆனால் அம்மாவட்ட போலீசு மற்றும் அதிகாரிகள் கும்பல், "நம்பியவருக்கு துரோகம் செய்துவிட்டான் படாலி. கோராவ்வின் கோபம் (கையை துண்டித்தது) இயல்பானதுதான்" என்று திமிராகப் பேசுகின்றனர்.

● ○ ●

மேற்கூறிய சம்பவம் நடந்த அதே மாதத்தில், கடந்த ஏப்ரல் 5ந்தேதி உத்திரபிரதேச மாநிலத்தில் இன்னொரு சம்பவம். பிரதமர் வி.பி.சிங் வெற்றி பெற்ற பதேபூர் தொகுதியில் இருக்கும் சேட்டா தரம்பூர். அக்கிராமத்தைச் சேர்ந்த தன்ராஜ் என்பவர் லூதியானா நகரில் தொழிலாளியாக வேலை பார்ப்பவர். தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த அவர் தன் தங்கை கல்யாணத்தில் கலந்து கொள்வதற்காக சொந்த கிராமம் வந்தார். கிராமத்தில் வசிக்கும் தன்ராஜின்



படிப்பகம்

www.padippakam.com

அண்ணன் கோதுமை அறுவடை வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

தாக்கூர் என்ற உயர்சாதியைச் சேர்ந்த இரண்டு நிலப்பிரபுக்களுக்கு அந்த நிலம் சொந்தமானது. அதில் அர்ஜுன்சிங் என்ற ஒரு நிலப்பிரபு, தன்ராஜிடம் கோதுமை தட்டைக் கொண்டுபோய் நகரத்தில் விற்றுவிட்டு வரும்படி சொன்னான். தன்ராஜ் தனக்கு உடம்பு சோர்வாய் இருப்பதாகவும் தன்னால் போகமுடியாது என்றும் கூறினார். வீட்டுக்கு சென்ற வழியில் இன்னொரு நிலப்பிரபுவை சந்தித்தார். அவன் தன் வீட்டில் லாரியிலிருந்து நிலக்கரி மூட்டைகளை இறக்கிபோட தன்ராஜை கூப்பிட்டான். தன்ராஜ் அந்த வேலையைச் செய்தார்.

இதைப் பார்த்த அர்ஜுன்சிங் வெறியேறி என்னுடைய வேலையை செய் என்று கத்த, தன்ராஜ் வேறு வழியில்லாமல் அவ்வேலையையும் ஒத்துக்கொண்டார். இருந்தாலும் அந்த நிலப்பிரபு, தன் வேலையை முதலில் செய்யாமல் அவமதித்த தன்ராஜை தண்டிக்க சதித் திட்டம் தீட்டினான். கோதுமை தட்டு விற்றதில் தன்ராஜ் 50 ரூபாய் கையாடல் செய்துவிட்டதாக கூறி நிலப்பிரபுவின் இரண்டு மகன்கள் அவரை இழுத்துச் சென்றனர். 50 ரூபாய்க்கு அவருடைய மனைவியை தங்களிடம் விடும்படி வக்கிரமாக மிரட்டினர்.

சினந்தெழுந்த தன்ராஜ் அவர்களைச் சாட வெறி கொண்டது நிலப்பிரபுத்துவ கும்பல். அவ்ரை வீட்டுக்கு இழுத்துச் சென்று உயிரோடு தீ வைத்து பாதி எரிந்த நிலையில் வெளியில் விரட்டிவிட்டனர். நெருப்புப் பந்தாக ஓடிவரும் தன்ராஜ் வெந்த உடலுடன் அருகில் இருந்த குட்டையில் விழுந்து புரண்டார். மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்ல, அங்கு இறந்து போனார். போலீசு பக்கத்தில் இருந்தும் அவர் இறந்தபோது மரணவாக்குமூலம் வாங்கவில்லை. குடிவெறியில் தன்ராஜ் தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டதாக இப்போது அறிக்கை தயாரித்துவிட்டது. ஊர்மக்கள் அடையாளம் காட்டிய பிறகும் கொலைகாரர்களைக் கைது செய்யவில்லை. அவர்களைக் காணவில்லை என்கிறது. போலீசு.

இவ்வளவுக்கும் காரணம் கொலைகாரர்கள் அனைவரும் தாக்கூர் என்ற உயர் சாதி நிலப்பிரபுக்கள்! (வி.பி.சிங்கும் இதே சாதிதான்).

● ○ ●

அதே உ.பி.மாநிலம் வி.பி.சிங்கின் பதேபூர் தொகுதியில் ஒரே மாதத்தில் இன்னொரு படுகொலை பட்டப்பகலில் நடந்தது. இநத முறை கொலை செய்யப்பட்டது 4 மாத கைக் குழந்தைக்குத் தாயான பிற்படுத்தப்பட்ட சாதிப்பெண். கொலை செய்தது அதே சாதியைச் சேர்ந்த துப்பாக்கியேந்திய கிரிமினல்கள். நிலப்பிரபுக்களின் அடியாட்கள்! நிலத்தகராறில் இந்த கிரிமினல்களுக்குப் பயந்து தலைமறைவாகிப் போன 'ராம் பிரகாஷ்என்பவரின் மனைவி, உறவினரின் திருமண நிகழ்ச்சிக்காக கைக்குழந்தையுடன் ஊருக்கு வந்தார்.

நேரம் பார்த்துக் காத்திருந்த கிரிமினல்கள் பட்டப்பகலில் அவரை கும்பலாக கற்பழித்துவிட்டு உயிரோடு எரித்துக் கொன்றனர். இவ்வளவுக்கும் ஊர்மக்கள் வாய்மூடி மௌனமாக இருந்ததற்குக் காரணம், அக்கிரிமினல் கும்பலுக்கு போலீசிடம் இருந்த செல்வாக்குதான்.

இதற்குமுன் மூன்று கற்பழிப்பு மற்றும் பல கொள்ளைகளில் ஈடுபட்ட அக்கும்பல் இன்றளவும் எந்த தண்டனையும் இல்லாமல் திரிகிறது. மே மாதம் 14ந் தேதி தம் தொகுதியில் நடந்த இக்கொலைக்கு துக்கம் விசாரிக்க உடனே போனார் வி.பி.சிங். ஆனால், அப்போதும் அக்கிரிமினல் கும்பல் கைது செய்யப்படவில்லை. அவர்களின் சொத்துக்களை முடக்கி வைத்து அவர்களைத் தேடிக் கொண்டிருப்பதாக புளுகுகிறது உ.பி.போலீசு.

● ○ ●

ஆட்சி மாறியது! அவலம் மாறவில்லை. கொத்தடிமைதனத்தை ஒழிக்க, சாதிவெறியர்களை தண்டிக்க பலநூறு சட்டங்கள் பாராளுமன்றத்தில் அரங்கேறிவிட்டது. இருந்தும் துயரம் தொடர்கிறது. நிலப்பிரபுக்களின் கொட்டம் நீடிக்கிறது. இது எதை நிரூபிக்கிறது? 40 ஆண்டுக்கு முன்பு கிடைத்த 'சுதந்திரம்' இன்னும் நாக்கு வழிக்கக்கூட பயன்படவில்லை என்பதைத்தான். மாறாக உழைக்கும் மக்கள் - விவசாயிகள், அதிகாரத்தை கீழிருந்து கைப்பற்றும் போது மட்டுமே நிலப்பிரபுத்துவத்தின் முதுகெலும்பு முறியும். கொடுமை இழைக்கும நிலப்பிரபுக்களை விவசாயிகளே தண்டிக்கும் அதிகாரம் பெறும்போது மட்டுமே வசந்தம் பிறக்கும்.

● குணசேகரன்



நிலப்பிரபுவுக்கு மனைவியை அனுப்ப மறுத்த தன்ராஜ் உயிரோடு கொளுத்தப்பட்ட கிராமம்.

ஊரின் நடுவே கற்பழித்து உயிருடன் எரிக்கப்பட்ட அபலை; அவரது நான்கு மாதக் குழந்தையிடம் முதலைக் கண்ணீர்; வி.பி.சிங்கின் தொகுதி!





படிப்பகம்

www.padippakam.com




● நமது நாட்டின் தேசிய விடுதலைக்காக உயிர்நீத்த பகத்சிங், அவரின் தோழர்களும், வாஞ்சிநாதன் போன்ற புரட்சியாளர்களின் தியாகத்தை புதிய ஜனநாயகம் எந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கிறது? அவர்கள் பயங்கரவாதிகளா? அவர்களின் செயல்கள் புரட்சிகரமற்றதா? அரசு பயங்கரவாதத்தை எதிர்த்து கடைசி வாழ்க்கை வரை வாழ்ந்த தோழர் தமிழரசனை எப்படிப் புரட்சிக்கு இழப்பை ஏற்படுத்திய நபர் என்று பார்ப்பது? தமிழரசனின் இயக்க வாழ்வில் அவர் 70 சதவிகிதம் சரியான வழிகளில் வாழ்ந்தார். 30 சதவிகிதம் தவறைக் கொண்டு அவரைப் புரட்சிவாதி அல்ல, அவரின் தியாகம் போற்றக்கூடியதல்ல என்று எவ்வாறு கணிக்க முடியும்? பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்பட்ட தேசங்களில் இந்நபர்களைப் போன்றவர்களைப் புரட்சியாளனாக அங்கீகரித்த வரலாறுகள் உள்ளன.

தமிழரசனின் நடவடிக்கையை விமர்சிக்கும் புதிய ஜனநாயகம் இதழ் ஆந்திராவில் மக்கள் யுத்தக்குழு நடத்தும் கடத்தல் ம்ற்றும் பல நடவடிக்கைக்கு எப்படி நியாயப்படுத்தி ஆதரிக்கிறது. மக்கள் யுத்தக் குழு செய்வது பயங்கரவாதச் செயல்கள் அல்லவா? தோழர் தமிழரசன் ஒரு இனவாதியாகச் சீரழிந்து போனார் என்றால் நமதுநாடு தேசிய இனங்களின் சிறைக்கூடாரமாக உள்ள இந்தியாவில், வடகிழக்கு மாநிலங்களில் நடக்கும் தேசிய இனங்களின் போராட்டத்தை எப்படி புதிய ஜனநாயகம் ஆதரிக்கிறது? அதே கோஷத்தை, வைத்த தமிழரசனை எப்படி இனவாதியாக சித்தரிக்கின்றீர்கள்?

— ஈ.இராஜேந்திரன், வடலூர்.

○ தோழர் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு நேரடியான பதில் கொடுப்பதற்கு முன்பு 'பயங்கரவாதச் செயல்கள்' பற்றிய மார்க்சிய - லெனினியக் கண்ணோட்ட்ம் என்னவென்று பார்ப்பது அவசியமாக உள்ளது.

''கோட்பாடு ரீதியில் பயங்கரவாதத்தை ஒருபொழுதும் நாம் நிராகரித்ததில்லை; நிராகரிக்கவும் முடியாது. பயங்கரவாதம் என்பது இராணுவ நடவடிக்கையின் ஒருவகையாகும். அது படைகளின் குறிப்பிட்ட நிலையையும், குறிப்பிட்ட சூழ்நிலைகளையும் பொறுத்து, போராட்டத்தின் குறிப்பிட்ட தருணத்தில் முற்றிலும் பொருத்தமாக இருப்பது மட்டுமின்றி இன்றியமையாததாகவும் கூட இருக்கலாம். ''தனிப்பட்ட வீரச் செயல்களின் முக்கியத்துவத்தை மறுக்கும் நோக்கம் நமக்குச் சிறிதும் இல்லை. ஆனால் பயங்கரவாதத்தை மிக அதிகமாகப் பயன்படுத்துவதை எதிர்த்தும், அதை முதன்மையான, அடிப்படையான போராட்ட முறையாகக் கருதுவதை எதிர்த்தும் கடுமையாக எச்சரிப்பது நம் .கடமை. மேற்சொன்ன கருத்து இப்போது மிகப் பலரை ஈர்த்திருக்கிறது. பயங்கரவாதம் என்பது இராணுவ நடவடிக்கையின் முறையான அம்சமாக ஒருபொழுதும் இருக்கமுடியாது. அதிகமாகச் சொல்லப்போனால், தீர்மானமான தாக்குதலின் வழிமுறைகளில் ஒன்றாக அது பயன்படலாம்.'' என்கிறார் லெனின் (எங்கிருந்து தொடங்குவது? பக்:11-12).

''இதை நாம் தொழிலாளர்களுக்குப் புரியவைக்க வேண்டும்: ஆமாம், உளவாளிகளையும், நம்மைத் தாக்குவதற்கான முகாந்திரத்தை உருவாக்கித்தரும் எதிரிகளின் கைகூலிகளையும், துரோகிகளையும் சில சமயஙகளில் கொல்வது முற்றிலும் தவிர்க்க முடியாதது; அதே சமயம் அதையே ஒரு கட்டமைப்பு முறையாக மாற்றுவது அதிகபட்சம் தவறாகப் புரிந்து கொள்வதும், விரும்பத்தகாததும் ஆகும். உளவாளிகளைக் கையும் களவுமாகப் பிடித்து அம்பலப்படுத்துவதன் மூலம் அவர்கள் தீங்கு விளைவிக்க முடியாதவாறு செய்யக்கூடிய ஒரு அமைப்பை உருவாக்கிட நாம் முயலவேண்டும். உளவாளிகள் அனைவரையும் ஒழித்துக் கட்டுவது சாத்தியமில்லை; ஆனால் அவர்களின் பதுங்குமிடங்களைத் தோண்டித் துரத்தவும், உழைக்கும் வர்க்க மக்களுக்கு போதனை தரவும் ஒரு அமைப்பை உருவாக்குவது சாத்தியம் - அவசியம்.

''ஆர்ப்பாட்டங்களின் போதும், சிறைகளில் இருந்து தப்பிக்கும் ஏற்பாடுகள் செய்வது, இன்ன பிறவற்றுக்காகவும் ராணுவப் பயிற்சி பெற்ற அல்லது குறிப்பாக உடல்பலமும் விரைதிறனுமுடைய தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தாக்குதல் படைக் குழுக்களும் கூட நமக்கு அவசியம்'' (லெனின், தொகுப்பு நூல்கள் தொகுதி 6 பக்:245).

பயங்கரவாதச் செயல்களைப் புரட்சியாளர்கள் மேற்கொள்வது பற்றிய வரையறுப்புகளை இவ்வாறு கூறும் லெனின், கட்சிக் காங்கிரசின் மூலம் பின்வரும் தீர்மானத்தையும் நிறைவேற்றச் செய்தார். ''பயங்கரவாதம் அதாவது தனிநபர் அரசியல் கொலைகள் ஆகிய கட்டமைப்பு ஒரு அரசியல் போராட்ட வழிமுறை என்பதை தற்சமயம் மிகவும் பொருத்தமற்றது என்று இதை இந்தக் காங்கிரசு தீர்மானகரமான முறையில் நிராகரிக்கிறது: ஏனெனில் அமைப்பு மற்றும் கிளர்ச்சி என்ற அவசரமான இன்றியமையாத அவசியமான பணிகளில் இருந்து மிகச் சிறந்த சக்திகளைப் பயங்கரவாதம் திசை திருப்பி விடுகிறது; மக்கள் பெருந்திரளின், புரட்சிகர வர்க்கங்களுடைய மக்கள் திரளுக்கும் புரட்சியாளர்களுக்கும் இடையிலான தொடர்பை பயங்கரவாதம் அழித்துவிடுகிறது; எதேச்சதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தின் நோக்கங்கள், வழிமுறைகள் பற்றி அடியோடு சிதைக்கப்பட்ட கருத்தை பொதுமக்கள் மத்தியிலும், புரட்சியாளர்கள் மத்தியிலுமே கூட பயங்கரவாதம் பரப்பி விடுகிறது.'' (மேற்படி நூல் பக்:474).

இவ்வாறு பாட்டாளி வர்க்கக் கட்சி காங்கிரசு பயங்கரவாதம், அதாவது தனிநபர் கொலைகள் ஆகிய கட்டமைப்பு ஒரு அரசியல் போராட்ட முறையாகாது என நிராகரித்தது; ஆனால் குட்டி முதலாளித்துவக் கட்சி அதைத் தனது திட்டத்தில் சேர்த்துக் கொண்டது பற்றிப் பின்வருமாறு லெனின் எழுதினார். ''சோசலிசப் புரட்சியாளர்களுக்கு எதிராக தீர்க்கமான, விடாப்பிடியானதொரு போரை சமூக ஜனநாயகவாதிகள் பிரகடனம் செய்ய வேண்டும். ஏனெனில் சோசலிசப் புரட்சியாளர்கள் தமது (கட்சித்) திட்டத்தில் பயங்கரவாதத்தைச் சேர்த்துக் கொண்டதன் மூலமும் அரசியல் போராட்டத்தின் ஒரு வழிமுறையாக தற்போதைய வடிவத்தில் பயங்கரவாதத்துக்கு வக்காலத்து வாங்கிச் செயல்படுத்துவதன் மூலமும் அவர்கள் இயக்கத்துக்கு மிகவும் பெரிய தீங்கு விளைவிக்கிறார்கள்; சோசலிசப் பணிக்கும் புரட்சிகர வர்க்கத்துக்கும் இடையேயுள்ள பிரிக்க முடியாத பிணைப்பைத் தகர்த்து விடுகிறார்கள். சோசலிசப் புரட்சியாளர்கள் நடைமுறைப்படுத்தும், வக்காலத்து வாங்கும் இன்றைய பயங்கரவாதம் மக்கள் திரள்கள் மத்தியிலோ, மக்கள் திரள்களுக்காகவோ, அல்லது மக்கள் திரள்களுடன் இணைந்தோ பணியாற்றுவதோடு எந்தவகையிலும் தொடர்புடையது அல்ல; பாட்டாளி களின் ஒரு புரட்சிக் கட்சியை அமைப்பாக்கும் கடினமான, ஆனால் எந்தவகையிலும் பூர்த்தி செய்யப்படாத பணியில் இருந்து நம்மிடம் மிகவும் சொற்ப அளவேயுள்ள அமைப்புச் சக்திகளைக் கட்சியினுடைய பயங்கரவாதச் செயல்களுக்கான அமைப்பு திசைதிருப்பி விடுகிறது; வரலாற்றின் அனுபவத்தினால் மொத்தமான கண்டனத்துக்குள்ளான ஒரு வழிமுறை, ஒரு தனித் தாக்குதல் தானே தவிர சோசலிசப் புரட்சியாளர்களின் பயங்கரவாதம் நடைமுறையில் வேறொன்றும் இல்லை; அவர்கள் எவ்வளவுதான் வாக்குறுதிகள் அளித்தாலும் சபதமேற்றாலும் மேற்கண்ட கேள்விக்கிடமற்ற உண்மையைப் பொய்ப்பிக்க முடியாது. நமது சோசலிசப் புரட்சியாளர்கள் முன்தள்ளும் பயங்கரவாதம் பற்றிப் பெருங்கூச்சல் போட்டு வக்காலத்து வாங்குவதனால் வெளிநாடுகளில் உள்ள சோசலிஸ்டுகள் கூட தர்ம சங்கடத்துக்கு உள்ளாகின்றனர். பயங்கரவாதம் 'மக்களை அவர்களது சித்தத்துக்கு எதிராகவும் கூட அரசியல் ரீதியில் சிந்திக்கும்படி நிர்பந்திக்கிறது'.'பல மாதங்களாகச் செய்யும் வாய்வழிப் பிரச்சாரத்தை விடக் கூடுதலான திறத்தோடு புரட்சியாளர்கள் குறித்தும் அவர்களுடைய நடவடிக்கையின் பொருள் (!?) குறித்தும் ஆயிரக்கணக்கான மக்களது கருத்துக்களை மாற்றிவிடும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது': அல்லது, 'ஊசலாட்டக்காரர்கள், ஆர்ப்பாட்டங்களின் தோல்வி, சோகமான முடிவு காரணமாக அதிர்ச்சியும் அதைரியமும் அடைந்தவர்களுக்கு புதியபலத்தை ஊட்டக்கூடிய சக்தி வாய்ந்ததாக இருக்கிறது' (ரெவலூசிய நாயா ரஷ்யா, எண்:7 பக்:4); பயங்கரவாதத்துக்கு வக்காலத்து வாங்குவது இதேபோல இன்னும் பல பாரிய தீங்கு விளைவிக்கக்கூடிய பிரமைகளை சாதாரணமாக ரஷ்யத் தொழிலாளி மக்கள் திரள்களிடையே விதைக்கிறது. இந்தத்

படிப்பகம்

www.padippakam.com

தீங்கான பிரமைகள் மிகச் சீக்கிரத்திலேயே விரக்தியைக் கொண்டு வந்து எதேச்சதிகாரத்துக்கு எதிரான தாக்குதலுக்கு மக்கள் திரள்களைத் தயாரிக்கும் பணியைப் பலவீனப்படுத்தத்தான் செய்யும்'' (லெனின்,தொகுப்பு நூல்கள்:தொகுதி 6,பக்:175)

பயங்கரவாதச் செயல்கள், கொரில்லா நடவடிக்கைகளில் இருந்து வேறானதென்று பின்வருமாறு அவற்றை விளக்குகிறார் லெனின்: ''கொரில்லா நடவடிக்கைகளைப் பழையபாணி பயங்கரவாதத்துக்கு இணையாக வைப்பது தவறென்று நாம் கருதுகிறோம். பயங்கரவாதம் என்பது தனிநபர்களுக்கு எதிரான பழிவாங்கும் செயல்களில் தங்கியிருக்கிறது. பயங்கரவாதம் என்பது அறிவுஜீவிகளுடைய குழுக்களின் ஒரு சதியாகும். பயங்கரவாதம் என்பது மக்கள் திரள்களுடைய உறுதிப்பாட்டை எந்த வகையிலும் பிரதிபலிப்பதில்லை. பயங்கரவாதம் என்பது மக்கள் திரள்களின் போரிடும் தலைவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு ஒருபோதும் பயன்படுவதில்லை.

ஆயுதந்தாங்கிய பேரெழுச்சியில் நம்பிக்கையற்றிருப்பது, அதற்கான நிலைமைகள் இல்லாமல் இருப்பது ஆகியவற்றின் நோய்க்குறியாகவும் அதோடு இணைந்ததாகவும் ஏற்படும் விளைவு

**பிர்க்க முடியாத தேவையை ஒட்டி புரட்சிகர 'பயங்கரவாதச் யல்களை மேற்கொள்வது சரியானதுதான்! தனிநபர் பயங்கர த்தை ஒரு அரசியல் போராட்ட வழிமுறையின் கட்டமைப் மேற்கொள்வது தவறானதுதான்!**

தான், பயங்கரவாதம். கொரில்லா நடவடிக்கைகளோ பழிவாங்கும் செயல்கள் அல்ல; இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளாகும். (லெனின்,தொகுப்பு நூல்கள்:தொகுதி 10 பக்:117)

மேற்கண்ட மார்க்சிய - லெனினிய நிலைப்பாட்டில் இருந்து தமிழரசனின் செயல்களைப் பரிசீலிக்கும் எவரும் என்ன முடிவுக்கு வரவேண்டும்? புரட்சியின் வளர்ச்சிப் போக்கில் ஒரு குறிப்பிட்ட தருணத்தில் இன்றியமையாதது, தவிர்க்க முடியாதது. இராணுவ நடவடிக்கையின் ஒருவகை, தீர்மானமான தாக்குதலின் வழிமுறைகளில் ஒன்று என்பதாக பயங்கரவாதச் செயல்களைத் தமிழரசன் மேற்கொள்ளவில்லை. இராணுவ ரீதியிலும் கூட ஒருமுறையான அம்சமாக பயங்கரவாதம் ஒருபொழுதும் இருக்கமுடியாது என்கிறார் லெனின். சுரண்டும் வர்க்கத்தினரின் அரசியல் பிரதிநிதிகளைக் கொலை செய்வதைத்தான் தனிநபர் அரசியல் கொலை, பயங்கரவாதம் என்றார் லெனின். ஆனால் சுரண்டும் வர்க்கத்தினரின் அரசியல் பிரதிநிதிகளைக் கூட அல்ல; சுரண்டும் வர்க்க நபர்களையே கொலை செய்வதோடு கோவில் சிலைகளையும் வங்கிகளையும் கொள்ளையிடுவது, சிலைகளையும் பாலங்களையும் தகர்ப்பது போன்றவற்றையும் இணைத்து - விரிவுபடுத்தி தனிநபர் பயங்கரவாதத்தை ஒரே அரசியல் போராட்ட வழிமுறை என்கிற கட்டமைப்பாக முன்வைத்து அமுல்படுத்தினார், தமிழரசன்.

'கூட்டக்குழு' என்கிற பெயரில் மக்கள்திரள் நடவடிக்கைகளையும் தனிநபர் கொலைகளையும் இணைப்பதாக தமிழரசன் பேசிவந்தாலும், தனிநபர் கொலைகளுக்கு முன்னோடியாகவும், நிராயுதபாணிகளாக - அமைப்பு ரீதியில் திரளாத மக்கள் மீது அரசு தாக்குதல் தொடுக்க வைப்பதற்கான ஆத்திரமூட்டும் நடவடிக்கையாகவும் தான் 'கூட்டுக்குழு'ப் பாதையை வகுத்தார். லெனின் வரையறுத்துச் சொன்னதைப் போலத்தான் தமிழரசனின் தனிநபர் பயங்கரவாதச் செயல்களினால் புரட்சிகர இயக்கம் பாதிக்கப்படுகிறது. அவற்றின் விளைவுகளை அதிகபட்சம் எதிர்கொள்ளும் அமைப்பினராக நாம் உள்ளோம் என்கிற நேரடி அனுபவத்தில் இருந்து இதைக் கூறுகிறோம்.

தானே உருவாக்கிக் கொண்ட பாமரத்தனமான கோட்பாடுகளையே மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனை என்று சாதித்து வந்த தமிழரசன் மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனையையும், அதன் கோட்பாடுகளை கற்பதையும் வன்மையாக எதிர்த்துப் போராடி வந்தார். இறுதியில் எல்லா விவகாரங்களுக்கும் இன ரீதியிலான அடிப்படையை உருவாக்கி அதையே தனது உலகக் கண்ணோட்டமாகக் கொண்டார். அரசு பயங்கரவாதத்தை எதிர்த்து கடைசிவரை வாழ்ந்தார் என்பது சரியல்ல. மக்கள் மீது அரசு பயங்கரவாதத்தை ஏவும் வகையில் அரசுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதற்கான செயல்களைச் செய்து வந்தார்; அரசு பயங்கரவாதம் வந்தால் மக்கள் அரசியல் அறிவு பெறுவர் என நம்பினார். எனவேதான் தமிழரசன் ஒரு புரட்சிவாதி அல்ல; அவரது 'தியாகம்' போற்றக்கூடியதல்ல; இனவாதியாக சீரழிந்து போனார் என்கிறோம்.

இன்னும் சிலர் இந்தக் கணிப்பை ஏற்க மறுக்கின்றனர். பொருளாதாரவாதத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் உள்ள பொதுவான அடிப்படைதான் இதற்குக் காரணமாகும். ''பொருளாதார வாதிகளும் பயங்கரவாதிகளும் தன்னியல்பின் வெவ்வேறு கோடிகளை வழிபடுகின்றனர்; புரட்சி இயக்கத்தையும் தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் ஒன்றிணைந்த முழுமையாகத் தொடர்புபடுத்துவதற்கு ஆற்றலோ, வாய்ப்போ இல்லாத அறிவுஜீவிகளின் வெஞ்சினத்தின் தன்னியல்பைப் பயங்கரவாதிகள் வழிபடுகின்றனர். இப்படித் தொடர்புபடுத்துவது சாத்தியம் என்ற நம்பிக்கை இழந்து விட்டவர்களுக்கு, தங்களுடைய வெஞ்சினத்துக்கும் புரட்சிசக்திக்கும் பயங்கரவாதம் தவிர வேறுபோக்கிடம் தேடிக்கொளவதுகடினமானதுதான்'' (லெனின், என்ன செய்ய வேண்டும் பக்:116.)

தமிழரசன் தமிழ்தேசிய இனவிடுதலை கோஷம் எழுப்புவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் அவர் மார்க்சிய - லெனினியவாதி என்கிற முறையிலன்றி பயங்கரவாதச் செயல்களும், இனவாத உலகக் கண்ணோட்டமும் இணைந்த குட்டி முதலாளித்துவ இனவாதி என்று வரையறுத்துச் சொல்கிறோம். இப்படிச் சொல்வதால் நமது நாடு தேசிய இனங்களின் சிறைக்கூடமாக இருப்பதையும் பிற தேசிய இனங்களின் போராட்டத்தை ஆதரிப்பதையும் நாம் மறுப்பதாகாது. அதேச்சமயம் குட்டி முதலாளித்துவ, முதலாளித்துவத் தலைமையிலான அந்தப் போராட்டங்களின் சமரச மற்றும் இனவாதப் போக்குகளையும் நாம் விமர்சிக்கத் தவறியதில்லை.

ஆந்திராவில் புரட்சியாளர்களைப் பிடித்து, விசாரணையின்றி அடைத்துவைத்து, சித்திரவதை செய்து, 'மோதல்' என்கிற பெயரில் படுகொலை செய்யப்படுகிறார்கள். இவற்றுக்கு எதிராக பணயக்கைதிகளாக சிலரைக் கடத்துவது போன்ற புரட்சிகர பயங்கரவாதச் செயல்கள் குறிப்பிட்ட தருணத்திற்கு தவிர்க்க முடியாதவை. இன்றியமையாதவை ஆகின்றன. அந்த அடிப்படையில்தான் ம.யு.குழுவின் அத்தகு நடவடிக்கைகள் சரியானவை என ஆதரிக்கிறோம், ஆனால் பஸ் - ரயில்கள், அரசு அலுவலகங்கள் - ரயில் நிலையங்களைக் கொளுத்துவது போன்ற பழிவாங்கும் தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ம.யு.குழு ஈடுபடுவதை எப்போதும் விமர்சித்தே வருகிறோம். இவை போன்ற பரபரப்பூட்டும் சாகசச் செயல்களையும், ஆட்களைக் கடத்துவது, அழித்தொழிப்பது போன்றவற்றையும் தமது அரசியல் போராட்ட வழிமுறை என்கிற ஒரு கட்டமைப்பாக வளர்த்துக் கொள்ளும் போக்கு ம.யு.குழுவிலும் அதிகரித்து வருகிறது. அதற்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம்.

நாட்டு விடுதலைக்காக உயிர்நீத்த தியாகிகள் என்று பகத்சிங், அவரின் தோழர்கள் மற்றும் வாஞ்சிநாதன், மதன்லால் டிங்கர் போன்றவர்களை நாம் மதித்தபோதும் அவர்கள் ஈடுபட்ட செயல்கள் தனிநபர் பயங்கரவாதச் செயல்களாகத்தான் கருதுகிறோம். இந்துமதவாதி என்கிற முறையில் காலனியாவாதிகளுக்கு எதிராக வாஞ்சிநாதனும், தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக மதன்லால் டிங்கரும் பயங்கரவாதச் செயல்களில் இறங்கி பழிவாங்கினர். ஆனால் பகத்சிங்கும், அவரது தோழர்களும் பின்னாளில் மார்க்சிய - லெனினியத்தைக் கற்று தேசிய, ஜனநாயக, சோசலிசப் புரட்சிக்கான ஒரு அரசியல் வழிமுறையாகப் பயங்கரவாதச் செயல்கள் இருக்க முடியாது என்று நிராகரித்துவிட்டனர். பாட்டாளி மக்கள் திரள்களின் புரட்சிப்பாதை போராட்டங்களே சரியானது என்று உணர்ந்து ஏற்றுக் கொண்டார்கள். எனவே இவர்களைக் கம்யூனிசப் புரட்சியாளர்களாக மதிக்கிறோம்.

● *ஒரு புரட்சிகர வழிமுறையில் அமைந்த போராட்டத்தை அரசு ஒடுக்கிவிட்டது என்பதற்காக அத்தகைய வழிமுறையையே கைவிட வேண்டுமா? இ.பொ.க. (மா-லெ), ஜே.வி.பி. ஆகியவற்றின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று நீங்கள் சொல்லும் அதே வழிமுறைகள் தானே அவற்றின் அதிவேக வளர்ச்சிக்கும் காரணமாகயிருந்தன? உண்மையில் அவற்றின் பின்னடைவுக்குக் காரணம் அந்த ('இடது தீவிரவாத') வழிமுறைகள் தானா?*

*இந்தியாவில் பெருகிவரும் தேசிய இனப்போராட்டங்களும் மற்றும் ஜே.வி.பி., எல்.டி.டி.ஈ. இவற்றின் வளர்ச்சியும் கூட 'நடவடிக்கை மட்டுமே மக்களைத் திரட்டும்' என்று நிரூபிக்கவில்லையா?*

**— சாருமதி, காளையார்கோவில்.**

○ தோழர் எழுப்பியுள்ள கேள்விகளுக்கும் மேற்கண்ட விளக்கமே தகுந்த பதிலளிக்கும் என்று நம்புகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

## விமர்சனமும் விளக்கமும்

# அம்பேத்கார் புரட்சியாளரா?

"அம்பேத்கார் நூற்றாண்டு விழா - பெருமை யாருக்கு?" - என்றொரு கட்டுரையைக் கடந்த 'புதிய ஜனநாயகம்' இதழில் வெளியிட்டிருந்தோம். அது கண்டு ஆத்திரமடைந்த பி.சொற்கோ அம்பேத்கார் என்பவர் பாரதக் குடியரசுக் கட்சி, பாடலூர் என்ற முத்திரை குத்திக் கொண்டு பகுஜன் சமாஜ் கட்சியுடன் இணைக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் கட்சி சார்பாக ஒரு கடிதம் எழுதியுள்ளார். அவரது 'விமர்சனங்க'ளுக்கு பதில்ளிப்பது அவசியமெனக் கருதி இங்கே தருகிறோம்.

பாடலூர்.
26.4.90.

*"அம்பேத்கார் நூற்றாண்டுவிழா பெருமை யாருக்கு?"*

*அன்புசால் 'புதிய ஜனநாயகம்' ஆசிரியர் S. மதியழகன் அவர்கட்கு! வணக்கம். தங்களின் ஏப்ரல் 16 - 15 மே'90 இதழில் கு(சு)மார் என்னும் நபர் எழுதிய பிதற்றல் கடிதம் கண்டேன். வரிவரியாகப் படித்து - கு(சு)மார் - அவர்களின் அறியாமையைக் கண்டு மகிழ்ந்தேன். ஏற்கனவே ஒரு "காந்தி" எழுதிய குப்பையை எழுதி வாங்கிக் கட்டினாய். தற்போது எங்களால் வாழும் - நீ - மீண்டும் உன் நச்சு கொடுக்கை தூக்கி விடுகின்றாய்...*

*1. இந்திய அரசியல் சட்டத்தை அம்பேத்கார் மட்டுமே எழுதவில்லை... (பாவம். அது உனக்குத் தெரியாது.) அந்தக் குழுவின் தலைமையாக - அறிவாளி என்கின்ற முறையில் இருந்தார். என் கையில் பேனா; ஆனால் நகர்த்தியவர் பலர் - என மிக வெளிப்படையாகக் கூறி, அந்தச் சட்டத்தை நானே எரிக்கும் முதல் ஆளாக இருப்பேன் - என்று கூறிய காலத்தின் கட்டாயம் - உனக்குத் தெரிய வாய்ப்பில்லை.*

*2. குடியரசுக் கட்சி 3.10.1957-ல் நிறுவப்பட்டது. அதை அம்பேத்கார் நிறுவினார் என்பது பொய். அதுவும் உனக்குத் தெரிய வாய்ப்பில்லை பாவம். அவர் 6.12.56-ல் இறந்துவிட்டார்... (ஆதாரங்கள்: "தீட்சபூமி" படிக்க.)*

*3. சலுகைகள் பெறவும், உதவி பெறவும், சமாதானம் பெறவும் இருந்த சீர்திருத்தவாதி என ஒரு "ஆளுமை" மிக்க புரட்சிவாதியை உன் உயர்சாதி வக்ர புத்தியால் ஏற்க மறுக்கின்றாய். உங்கள் மார்க்சும் லெனினும் செய்ய முடியாத - செய்யத் துணியாத சமுதாய புரட்சியை செய்ய வித்திடும் அடிப்படையை - மானிட உரிமைகளே மறுக்கப்படும் - மானிட மாமிசப் பிண்டங்களை விடுவிக்க தன்னையே அழித்துக் கொண்டார் என்பதால்தான் அவர் போற்றப் படுகின்றார்.*

*அரசியல் வாதிகளின் போலி நாடகத்தை நாங்களும் ஏற்கவில்லை. ஆனால் இங்குள்ள எந்த மார்க்சு - லெனினியவாதியும் செய்ய துணியாத காரியத்தை அவர் செய்ய புரட்சி - வித்திட்டார் என்பதை அவரின் நூல்களை - ஆய்வுகளை படித்து விமர்சனம் செய்! நுனிப்புல் மேய்ந்து கொண்டு வரட்டு மார்க்சு - லெனினிசியம் பேசுவதால் எங்களில் பலர் உன்னிடம் இருப்பதை இழக்கவே வழிவகுக்கும். அம்பேத்கார் புரட்சி வாதியல்ல! (உன் வழியில்) அவர் சீர்திருத்தவாதியும் அல்ல! (எம்வழியில்). இரண்டிற்கும் வரையறை எவன் தந்துள்ளான்... எது புரட்சி! வயிற்றுச் சோறு கேட்பது அல்ல! 'மானிடன்' என்னும் உரிமையோடு வாழும் சமுதாய நிலை தான் புரட்சி... அறிக...*

*பி.சொற்கோ அம்பேத்கார்.*

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அம்பேத்கார் நினைவுநாளை ஒட்டி அவரைப் பற்றிய மதிப்பீடு ஒன்றை புதிய ஜனநாயகத்தில் வெளியிட்டிருந்தோம். அதற்காக மிகவும் கீழ்த்தரமான முறையில் சில கடிதங்கள் வந்தன. அப்போது அவை குறித்து அதிர்ச்சியோ, ஆத்திரமோ அடையவில்லை. இந்தக் கோபாவேசத்தில் நூறில் ஒரு பங்காவது அன்றாட வாழ்வில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக இவர்கள் காட்டுவதில்லையே என்கிற வேதனை தான் எழுந்தது.



'மேல்சாதி'களிலே பிறந்தவர்களானாலும் தம்மைத் தாழ்த்திக் கொண்டு, காலனிகளிலே வாழ்ந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் எல்லா சாதிக் கொடுமைகளையும் அனுபவிக்கும் தோழர்களுக்கு, எந்தச் சாதியினரானாலும் ஒரே பாயில் படுத்து, ஒரே வட்டிலில் உண்டு கலப்புமணம் புரிந்து கூட்டுவாழ்வைப் பின்பற்றும் நமது அமைப்புக்கு எதிராக இப்படிச் சாதிக் களங்கம் கற்பிப்பதைக் கண்டித்து அப்போதே பல வாசகர்கள் எழுதினார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் யாரும் எமது அமைப்புகளைப் புறக்கணித்து ஒதுங்கி விடவில்லை. மாறாக சாதியக் கொடுமைகளுக்கு எதிராக எவ்வித தியாகத்தையும் எதிர்நோக்கிப் போராடுவதால் மேலும் ஆதரவு பெருகித்தான் வருகிறது. இப்போதும் திருவாளர் சொற்கோவின் கடிதம் - வசைபாடுதல் கண்டு நாம் ஆத்திரம் அடையவில்லை. நிதானத்தோடும், பொறுப்போடும் - ஆனால் தெளிவாகவே பதில் எழுத விழைகிறோம்.

அம்பேத்கார் இறந்து பத்து மாதங்களுக்குப் பிறகுதான் குடியரசுக் கட்சி துவங்கப்பட்டது என்கிறார், சொற்கோ. குடியரசுக் கட்சியின் துவக்கம் மற்றும் அம்பேத்காரின் பங்கு பற்றி வெவ்வேறு புத்தகங்களில் முரணான தகவல்கள் உள்ளன என்று அறிகிறோம். ஆனாலும் அரசியல் கட்சி நடத்துவதும், தேர்தல் கூட்டு வைத்துக் கொள்வதும் அம்பேத்காரின் நிலைப்பாடாக இருந்ததை யாரும் மறுக்க முடியாது. அந்த முயற்சிகளினால் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறிவிட முடியாது என்பதும் நிரூபிக்கப்பட்ட உண்மையாக உள்ளது.

தாழ்த்தப்பட்டவர்கள், தலித்துக்கள், அம்பேத்கார் என்கிற பெயர்களில் நாடு முழுவதும் இயங்கும் பலநூறு கட்சிகள், குழுக்கள், தனிநபர்கள் ஆகிய அனைவரும் வேறுபிற அரசியல் கட்சிகளும் கூட "அம்பேத்கார், இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய மாமேதை, அதன் தந்தை" என்று ஒரே குரலில் ஏற்றிப் போற்றி வருகின்றன. ஆளும் வர்க்கங்களால் மிகவும் புனிதமானதாக சித்தரிக்கப்படும் அந்த அரசியல் நிர்ணய சட்டத்தின் யோக்கியதை பற்றி, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான அந்த சாசனத்தின் மோசடிகளை நாம் அம்பலப்படுத்துகிறோம். மேலும் நியாயப்படுத்த முடியாத நிலையில் எந்த அரசியல் சாசனத்தை வகுத்ததற்காக அரசியல் சட்ட மேதை என்று புகழ்கிறார்களோ அதையே எதிர்த்தும், எரிப்பேன் என்றும் இன்ன பிறவாறும் அம்பேத்கார் புலம்பியதை எடுத்துக் காட்டுகிறார்கள். அப்புறம் ஏன்? எதற்காக அதை எழுதினார். அவர் எழுதவில்லை; பேனா பிடித்தார் என்பது ஆதிக்க வர்க்கத்தின் கைப்பாவையாக இருந்தார் என்பதை ஒப்புக் கொள்வதுதானே!

கம்யூனிச - சோசலிச அரசியல் அமைப்பை 'பூதம்' என்றும் 'காட்டுத்தீ' என்றும் வசைபாடி வெறுத்து, எதிர்த்தார் அம்பேத்கார். மேற்கத்திய முதலாளித்துவ ஏகாதிபத்திய ஜனநாயகம் உலகிலேயே உயர்ந்தது என்று ஏற்று இங்கே இறக்குமதி செய்தார். அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலேயே வெள்ளை இன, நிறவெறி ஆதிக்கத்தை ஒழிக்க முடியாத. அவற்றைக் கட்டிக்



படிப்பகம்

www.padippakam.com

காக்கும் முதலாளித்துவ ஜனநாயகம் நம்முடைய நாட்டில் மட்டும் ஜாதி, மத ஒடுக்குமுறையை ஒழித்துவிடும்; தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலை - சமநீதி அடைய வழிவகுக்கும் என்று நம்பினார் - இதுதான் அவரது அரசியல் மேதாவித்தனம்!

அம்பேத்காரை - ஒரு சமரச, சீர்திருத்தவாதி என்று கூறக்கூடாது; அவர் ஒரு சமுதாயப் புரட்சியாளர் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார்கள் அவரது அபிமானிகள். சீர்திருத்தவாதிக்கும், புரட்சியாளருக்கும் என்ன வேறுபாடு? முன்னேற்றத்துக்குத் தடையாகிவிட்ட, அநீதியான, நிலவும் சமுதாய அமைப்பை அடியோடு தகர்த்தெறிந்துவிட்டு, முற்போக்கான, நீதியான, புதிய சமுதாய அமைப்பை நிறுவுவதற்குப் போராடுபவரே புரட்சியாளர். அதற்கு மாறாக, அநீதியான, பழைய சமுதாய அமைப்பின் வரம்புக்குட்பட்டு அது நீடிக்கும் வகையிலே சில மாற்றங்களுக்காக நிற்பவர் சீர்திருத்தவாதி. ஆகவே, அம்பேத்கார் ஒரு சீர்திருத்தவாதி தான் என்பதற்கு அவரது வாழ்க்கையும், தொடர்ந்து நிலவும் சாதி - மத ஒடுக்குமுறை சமுதாய அமைப்புமே சாட்சியங்களாக உள்ளன.

சொல்லை மட்டுமல்ல, அவரது செயலையும் வைத்தே எவரையும் எடை போட வேண்டும். காந்தீயம், காங்கிரசு, பார்ப்பனீய இந்து மதத்தையும் சாதிக் கொடுமைகளையும் எதிர்த்து அம்பேத்கார் எழுதியவற்றைத்தான் அவரது அபிமானிகள் காட்டுகிறார்கள். ஆனால் அவரே அவரது எழுத்துக்களை மதித்து நடக்கவில்லை என்பதுதான் உண்மை. அவர் துவங்கிய தீண்டாமைப் போராட்டங்களை எல்லாம் மேல் சாதியினரோடு சமரசம் செய்து கொண்டு கைவிட்டார். எப்போதும் ஆட்சியில் இருப்பவர்களுடன் அனுசரித்து, சமரசம் செய்து கொள்ள வேண்டுமே தவிர, எதிர்த்தரப்பாக மாறவே கூடாது என்பதை அரசியல் கொள்கையாகக் கடைப்பிடித்தார். காலனிய ஆட்சியின் போது சைமன் கமிஷனுக்கு ஆதரவளித்தது; வட்ட மேசை மாநாடுகளில் கலந்து கொண்டது, 1942 ஆகஸ்டு 'எழுச்சி'க்கு எதிராக வைசிராயின் தொழிலாளர் அமைச்சரானது; ஆட்சி மாற்றம் உறுதியான பிறகு அரசியல் சாசன வரைவுக்குழு தலைவரானது, நேரு அரசில் சட்ட அமைச்சரானது— ஆகியவை அதற்கான சான்றுகள். இவ்வளவு தூரம் ஆட்சியாளர்களுக்கு உடந்தையாய் இருந்தும் அவர்கள் ஏமாற்றிவிட்டார்களே என்று இறுதியில் அம்பேத்கார் புலம்பினார்.

உழைக்கும் மக்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றவும் விடுதலை அடையவும் நடந்த மாபெரும் தெலிங்கானாப் புரட்சியை ஒடுக்க இராணுவத்தை ஏவி 5000 புரட்சியாளர்களை நேரு அரசு கொன்று குவித்த போது அதன் சட்ட மந்திரியாக வீற்றிருந்தார், அம்பேத்கார். குறிப்பாக தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டும் ஜமீன்தாரிமுறை ஒழிப்புக்கு எதிராக, ஜமீன்தார்கள் சார்பாக வழக்காடினார் அம்பேத்கார். இவை எல்லாம் அம்பேத்காரை ஒரு புரட்சியாளராகவா காட்டுகின்றன? ●

# நிலப்பிரபுக்களின் அட்டூழியம்

**முதல்வர் லல்லு பிரசாத்; மக்களிடம் வழக்க மான நாடகம்**



பீகாரில் அடிமட்டத்து ஊழியராக இருந்து அரியணை ஏறியுள்ளதாகப் பீற்றிக் கொள்ளும் லல்லுபிரசாத் யாதவ் ஆட்சிக்கு வந்த பிறகும் அடிமட்டத்து மக்களின் மீதான சாதிவெறியர்களின் தாக்குதல் ஒழிந்துவிடவில்லை.

கடந்த மார்ச் 19 அன்று மதுபானி மாவட்டத்திலுள்ள ஹார்லாகி என்னுமிடத்தில், வாக்குச் சாவடியைச் சூறையாடி வெற்றிபெற்ற காங்கிரசின் தேர்தல் மோடியை எதிர்த்து தாழ்த்தப்பட்ட மக்களும் 'இடது', வலது 'கம்யூனிஸ்ட்' கட்சியினரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

குண்டர்களும் போலீசும் அதிகாரிகளும் கூட்டு சேர்ந்து ஆர்ப்பாட்டத்தினர் மீது திட்டமிட்டே தாக்குதலை நடத்தி 5 பேரைக் கொன்றொழித்தனர். இத்தாக்குதலில் 20-க்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றனர்.

ஜெகனாபாத் மாவட்டத்தில் லக்வார் கிராமத்தில் மார்ச் 26 அன்று வலது 'கம்யூனிஸ்ட்' கட்சியைச் சேர்ந்த 5 ஊழியர்கள் சாதிவெறி நிலப்பிரபுக்களால் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டனர். இக்கிராமத்தின் தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகள் சூறையாடப்பட்டன. சாதிவெறி நிலப்பிரபுக்களுக்கு எதிராக வலது 'கம்யூனிஸ்ட்' கட்சியினர் தேர்தலில் போட்டியிட்டதே இத்தாக்குதலுக்குக் காரணம்.

குறிப்பாக, புதிதாக உருவாகியுள்ள "சூரிய ஒளி சேனை" என்ற ராஜபுத்திர நிலப்பிரபுக்களின் குண்டர்படை, மேற்கு பீகாரின் பாலமாவ் வட்டாரத்தில் கூலி உயர்வு கேட்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது பயங்கரவாதத்தை ஏவி அட்டூழியம் புரிந்து வருகிறது. காங்கிரசு, ஜனதாதளம், பாரதீய ஜனதா கட்சிகளின் அரசியல் பிரமுகர்கள் இச்சேனையின் புரவலர்களாக உள்ளனர்.

நக்சல்பாரி புரட்சியாளர்களின் தலைமையில் திரண்டுள்ள மஜ்கியோன், பிஷ்ராம்பூர், கார்வா, பாலமாவ் முதலான கிராமங்களில் இச்சேனை தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகிறது. புரட்சிகர அமைப்புகள் மட்டுமின்றி தாழ்த்தப்பட்டோருக்கான வேறு எந்த அமைப்போ, தன்னார்வக் குழுக்களோ செயல்பட்டால் கூட இச்சேனை மிருகத்தனமாக தாக்கி அழிக்கிறது. "பந்துவா முக்தி மோர்ச்சா" எனும் கொத்தடிமை மீட்பு இயக்கத்தின் தலைவராக உள்ள ஜனதாதள பிரமுகர் கிரிவார் பாண்டே என்பவரையே இச்சேனை அண்மையில் தாக்கியுள்ளது. இவ்வட்டாரத்தில் உள்ள கொத்தடிமைகளை விடுவிக்க முயன்றதே அவர் செய்த குற்றம்.

அண்மைக்காலமாக, தாழ்த்தப்பட்ட மக்கள் தமது பிழைப்புக்கு ஆதாரமான காட்டுப் பொருட்களைச் சேகரித்து விற்கக் கூட இந்த குண்டர்படை தடைவிதித்துள்ளது. மீறுவோர் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். உயிருக்கு அஞ்சி பிழைக்க வழிதேடி தாழ்த்தப்பட்ட மக்கள் கிராமத்தை விட்டே ஓடுகின்றனர். வறுமையும் வறட்சியும் பீடித்துள்ள இவ்வட்டாரத்தின் கிராமத் தலைவர்களாக உள்ள சாதிவெறியர்கள் அரசு ஒதுக்கிய நிவாரணத் தொகையை விழுங்கி ஏப்பம் விடுகின்றனர்.

தேர்தல் வரலாம்; ஆட்சிகள் மாறலாம்; ஆனால் பீகாரில் நிலவுவது சாதிவெறி நிலப்பிரபுக்களின் ஆட்சிதான். இவர்களது சட்ட விரோத பயங்கரவாத குண்டர்படையைத் தடை செய்ய வக்கற்ற அரசு, புரட்சியாளர்களின் தலைமையில் திரண்டு போராடும் தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்க துணை ராணுவப் படைகளைக் கொண்டு வந்து குவிக்கத் திட்டமிட்டுள்ளது. ஆனால் ஒடுக்கப்பட்ட மக்கள் குட்டக்குட்ட குனிந்து கொண்டே போக மாட்டார்கள் ●



படிப்பகம்

www.padippakam.com



# ஹோ-சி-மின்: ஏகாதிபத்திய எதிர்ப்புப் புயல்



குழந்தைகளின் அன்பு வெள்ளத்தில் தோழர் ஹோ-சி-மின்.

சின்னஞ்சிறு ஏழைநாடு மிகப் பெரிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தை வெற்றி கொள்ள முடியுமா? "ஏன் முடியாது? ஏகாதிபத்தியங்கள் சாராம்சத்தில் காகிதப் புலிகள்; சிறிய நாடு பெரிய ஏகாதிபத்தியத்தை வீழ்த்தி நிச்சயம் விடுதலையைச் சாதிக்க முடியும்" என்ற மாவோவின் கூற்றை '70 களில் நிரூபித்துக் காட்டியது வியட்நாம். பிரெஞ்சு ஏகாதிபத்தியம், அதைத் தொடர்ந்து ஜப்பானிய பாசிசம், பின்னர் வந்த அமெரிக்க ஆக்கிரமிப்பு அனைத்தையும் சுக்குநூறாக உடைத்தெறிந்து, இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஒடுக்கப்பட்ட மக்களின் உத்வேகமூட்டும் புரட்சிக் களமாகத் திகழ்ந்தது வீர வியட்நாம்.

உலகம் முழுவதுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிகர உணர்வுக்குப் புத்துயிர் ஊட்டி, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரின் நாயகனாக, வீரத்தின் விளைநிலமாக வியட்நாமை மாற்றிய அந்த மாவீரன் யார்?

மெலிந்த தேகம்; எளிமையான தோற்றம்; கூர்மையான கண்கள்... அந்த மாமனிதர்தான் ஹோ-சி-மின். சைகோன் அருகே மே 19 அன்று கிராமப் பள்ளி ஆசிரியரின் மகனாகப் பிறந்து, காலனியாதிக்கத் தளைகளை உடைத்தெறிந்த அந்த மாபெரும் புரட்சியாளரின் நூறாவது பிறந்த நாளை இன்று உலகெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் பெருமிதத்துடன் கொண்டாடுகின்றனர்.

தனது இளமைக் காலத்திலேயே ஹோ-சி-மின் புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினார். பிரெஞ்சுக் காலனியாதிக்கவாதிகளை எதிர்த்து அன்று வியட்நாமில் போராடிக் கொண்டிருந்த தேசபக்த - ஜனநாயக வாதிகளுக்கு தகவல் தொடர்பாளராகப் பணியாற்றிய போது அவருக்கு வயது பதினைந்து.

## பாதை தேடிப் பயணம்

பள்ளிப் படிப்பை முடித்து சிறிது காலம் கல்லூரியில் பயின்ற அவர், பின்னர் பள்ளியாசிரியராகப் பணியாற்றினார். வியட்நாடில் தேச விடுதலை இயக்கம் தெளிவான பாதையோ, கண்ணோட்டமோ இல்லாமல் தடுமாறிக்கொண்டிருந்த காலம் அது. எனவே புரட்சிகர இயக்கத்தைப் பற்றி ஆழ்ந்த ஞானம் பெறவும் அடிமைப்பட்டுக் கிடக்கும் வியட்நாமிய மக்களை விடுவிப்பதற்கான வழியைக் காணவும் அவர் வெளிநாடு செல்லத் தீர்மானித்தார்.

பிரெஞ்சு கப்பலில் பணியாளராகச் சேர்ந்து பிரான்சுக்கு வந்தடைந்த அவர், அங்குள்ள கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பு கொண்டு, காலனி நாட்டு மக்கள் சங்கத்தை நிறுவி 'லீபெரியா' (ஒடுக்கப்பட்டவர்கள்) என்ற பத்திரிக்கையை நடத்தினார்.

## கடின உழைப்பினூடே புரட்சிப் பணி

பின்னர் அவர் லண்டனுக்குத் திரும்பி அடுப்பு எரிப்பவராகவும், சாலைகளைக் கூட்டுபவராகவும், சமையல் உதவியாளராகவும் பணியாற்றினார். இக்கடுமையான வேலைகளினூடே அவர் புரட்சிகர சித்தாந்தத்தைக் கற்பதிலும், புரட்சிகர இயக்கங்களில் தீவிரமாகப் பங்கேற்பதிலும் கடுமையாக உழைத்தார்.

பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராகச் செயல்பட்ட அவர் கம்யூனிஸ்ட் அகிலத்தின் கீழை நாடுகள் பிரிவின் நிரந்தர உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1924 இல் மாஸ்கோவுக்குச் சென்றார். அக்டோபர் புரட்சியின் ஒளியில் காலனி நாடுகளின் விடுதலைக்கான பாதையை அவர் அங்கு கற்றறிந்தார். பின்னர் சீனாவுக்குச் சென்று தோழர் மாவோ தலைமையில் முன்னேறி வந்த புதிய ஜனநாயகப் புரட்சியின் செழுமையான அனுபவங்களைக் கிரகித்துக் கொண்டு 1930 ல் வியட்நாமிய கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவினார்.

## ஆகஸ்ட் புரட்சி

சீனாவில் தோழர் மாவோ தலைமையில் நடந்த ஹுனான் விவசாயிகளின் எழுச்சியின் தாக்கத்தையும், மகத்தான மக்கள் யுத்தப் பாதையின் சரியான தன்மையையும் கிரகித்துக் கொண்ட அவர் வியட்நாமில் விவசாயிகளின் ஆயுதமேந்திய எழுச்சிக்குத் திட்டமிட்டார். கம்யூனிஸ்டுகளோடு, நாட்டுப் பற்றும் ஜனநாயகப் பற்றுமிக்க சக்திகளை ஐக்கியப்படுத்தி "வியட்மின்" எனும் வியட்நாமிய விடுதலை முன்னணியை நிறுவினார்.

பிற நாடுகளின் புரட்சி இயக்கங்களில் பங்கேற்றதன் மூலம் அவர் பெற்ற செழுமையான அனுபவம், மார்க்சிய லெனினியத்தை வியட்நாமிய சூழலுக்கேற்ப பிரயோசிக்கும் அவரது ஆற்றல், விவசாயிகளை அணிதிரட்டி மக்கள் யுத்தப் பாதையில் தொடர்ந்து புரட்சி இயக்கத்தை முன்னெடுத்துச் சென்ற அவரது உறுதி ஆகியவற்றின் விளைவாக 1945ல் அவர் வழி நடத்திய விவசாயிகளின் எழுச்சி வெற்றிவாகை சூடியது. வரலாற்றில் "ஆகஸ்டுப் புரட்சி" என்றழைக்கப்படும் இந்த எழுச்சி வடவியட்நாமில் பிரெஞ்சு காலனியாதிக்கத்தின் முதுகெலும்பை முறித்தது. 1945ல் செப்டம்பர் 2ம் நாளன்று வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் சுதந்திரப் பிரகடனத்தை தோழர் ஹோ-சி-மின் வெளியிட்டார். 1946-ல் கூடிய வியட்நாம் மக்கள் சபையில் அவர் அரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

## தேசவிடுதலைப் போர்

தமது காலனி நாடு பறிபோன வெறியில் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் தென் வியட்நாமைத் தளமாக்கிக் கொண்டு வியட்நாம் மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்புப் போரில் இறங்கினர். இடையில் இரண்டாம் உலகப் போரின்போது மூர்க்கமாகக் கிளம்பி ஜப்பானிய ஏகாதிபத்தியமும் வியட்நாமை ஆக்கிரமித்தது.

ஜப்பான் பின்வாங்கிய அதே நேரத்தில் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் தொடர்ந்து போரில் ஈடுபட்டது. இறுதியில், ஜெனரல் ஜியாப் வழிநடத்திய வியட்நாமிய செஞ்சேனை தியன்-பியன்-ஃபூவில் பிரெஞ்சுப் படைகளை முறியடித்து மகத்தான வெற்றியைச் சாதித்தது.

## அமெரிக்க ஆக்கிரமிப்பு

இதைத் தொடர்ந்து, தென் வியட்நாமிலுள்ள ஏகாதிபத்திய ஆதிக்கத்தை வீழ்த்தி வியட்நாமை ஐக்கியப்படுத்தவும், பொதுத் தேர்தல் நடத்தி நாட்டை மறுநிர்மாணம் செய்யவும் ஜெனீவாவில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. இதை ஏற்க மறுத்து, அமெரிக்க அடிவருடியான நகு-தியன்-தியம் என்பவன் தனக்குத்தானே தென் வியட்நாமின் அதிபராக முடிசூட்டிக் கொண்டு எதிர்ப்புரட்சி சதியில் இறங்கினான். அவனை "வியட்நாமின் சர்ச்சில்" என்று அமெரிக்க அதிபர் ஜான்சன் உச்சி முகர்ந்தார். ஆனால் தென் வியட்நாமின் தலைநகர் சைகோனை அவன் அமெரிக்காவின் விபச்சார விடுதியாக்கினான். அமெரிக்க பொம்மை அரசுக்கு எதிராக வியட்நாம் முழுவதும் கிளர்ச்சிகளும் ஆர்ப்பாட்டங்களும் பெருகத் தொடங்கியதும் 1961ல் அமெரிக்கா நேரடியாக வியட்நாமை ஆக்கிரமித்தது.

## வீரத்தின் விளைநிலம்

அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து வியட்நாம் மக்கள் தொடுத்த வீரஞ்செறிந்த விடுதலைப் போர் உலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டது. அதன் ஏகாதிபத்தியத்திய எதிர்ப்புப் பேரலை தென் கிழக்காசியா எங்கும் சுழன்றடித்து மாணவர்-இளைஞர்களின் 'கலக'மாக வெடித்தது



படிப்பகம்

www.padippakam.com

விளைநிலங்களைப்பாழாக்கியும் கணக்கற்ற அட்டூழிங்களைச் செய்தது அமெரிக்க கொலைகாரப் படை. முதுகிலே துப்பாக்கி ஏந்தியபடியே வியட்நாமிய வீராங்கனைகள் விவசாய உற்பத்தியில் ஈடுபட்டனர். தாயின் வயிற்றிலிருந்த போதே போராடக் கற்றுக் கொண்ட குழந்தைகள் வீரப்புதல்வர்களாக வளர்ந்து கொரில்லா போராளிகளானார்கள். இந்த புரட்சி யுத்தத்தில் 60 லட்சம் வியட்நாமியர்கள் கொன்றொழிக்கப்பட்டனர். அதேசமயம் உலகில் இதுவரை சந்திக்காத மாபெரும் இழப்பை அமெரிக்கா எதிர்கொண்டது. ஏறத்தாழ 58 ஆயிரம் அமெரிக்கத் துருப்புக்கள் வியட்நாமிய யுத்தத்தில் பலியாகினர். அமெரிக்காவிலேயே ஆக்கிரமிப்புக்கு ஏதிரான ஆர்ப்பாட்டங்கள் பெருகி ஏகாதிபத்தியவாதிகள் முற்றாகத் தனிமைப்பட்டனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் படுதோல்வியைத் தொடர்ந்து 1973 ல் பாரீசில் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. இருப்பினும் தென் வியட்நாமிய கூலிப்படைகள் தொடர்ந்து போரை நடத்தின. 1975ல் அவை முறியடிக்கப்பட்டு அனைத்து வியட்நாமும் விடுதலை அடைந்தது. அதன் பிறகு தலைநகரான ஹனாய், ஹோ-சி-மின் நினைவாக ''ஹோ-சி-மின் நகர்'' என அழைக்கப்படுகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை முறியடித்து ஐக்கியப்பட்ட வியட்நாமின் விடுதலையைச் சாதிக்கும் வரை ஹோ-சி-மின் உயிரோடு இருக்கவில்லை. 1969-ம் ஆண்டில் அவர் இயற்கை எய்தினார். ஆனால் அவர் மூட்டிய ஏகாதிபத்திய எதிர்ப்புக் கனலை வியட்நாமிய மக்கள் பெருந்தீயாக மாற்றி ஏகாதிபத்தியத்தை சுட்டெரித்து விடுதலையைச் சாதித்தார்கள்.

### எளிய வாழ்வும் கம்யூனிசப் பண்பும்

வியட்நாமின் தந்தை என்று போற்றப்படும் தோழர் ஹோ-சி-மின் எளிய வாழ்வையும் கடின உழைப்பையும் இறுதிவரை மேற்கொண்டார். தனது வாழ்நாள் முழுவதும் சாதாரண ரப்பர் செருப்புக்களையே அவர் அணிந்தார். எந்தவொரு வேலைக்கும் அவர் பிறருடைய உதவியை எதிர்பார்த்ததே இல்லை.

இளந்தலைமுறையினர் மீது குறிப்பாக குழந்தைகள் மீது அவருக்கு கொள்ளைப்பிரியம். 1945-ல் சுதந்திரப் பிரகடனத்தை அவர் தயாரித்து முடித்ததும் அவர் வியட்நாமிய குழந்தைகளுக்கான நூலைத்தான் முதலில் எழுதினார். பெருமை, புகழ், தனிநபர் துதி முதலானவற்றில் அவர் என்றுமே நாட்டம் கொண்டவரல்ல. 1959ல் வியட்நாமிய செம்படையினர் அவர் பிறந்த கிராமத்தில் அவர் பெயரால் ஒரு அருங்காட்சியகம் நிறுவ முற்பட்டபோது, அதைத் தடுத்து குழந்தைகளுக்கான பள்ளிக்கூடம் கட்டுமாறு தோழர் ஹோ பணித்தார்.

நாட்டு விடுதலையின் மீது மாளாக் காதல் கொண்ட அவர் சிறந்தகவிஞருமாவார். குறிப்பாக, சீனாவில் சியாங்கை ஷேக் எதிர்ப்புப் புரட்சி அரசினால் அவர் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டபோது அவர் எழுதிய கவிதைகளும் சிறைக் குறிப்பும் மிகப் பிரபலமானவை.

### சித்தாந்த பலவீனம்

உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த தோழர் ஹோ-சி-மின், 60 களில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் எழுந்த சித்தாந்தப் போராட்டத்தின் போது அதில் ஊக்கமாகப் பங்கேற்காமல் ஒதுங்கியே இருந்தார். குருச்சேவின் திருத்தல் வாதத்தையோ பின்னர் சோசலிச ரஷியா சமூக ஏகாதிபத்தியமாக சீரழிந்ததையோ அவர் எதிர்த்து அம்பலப்படுத்தாமல், நடுநிலை வகித்தார். திரிபுவாதத்துக்கும் மார்க்சியத்துக்குமிடையே தெளிவான எல்லைக் கோட்டை வகுத்து வேறுபடுத்திப் பார்க்காமல் ''சகோதர கட்சிகளிடையே பிளவும் வேறுபாடுகளும் நீங்கி மீண்டும் ஒன்றுபடும் என நம்புகிறேன்'' என்றார். ரஷிய திரிபுவாத கும்பல் வியட்நாம்



சகதோழர்களுடன் ஹோசிமின்; ஏகாதிபத்திய எதிர்ப்பு போர்த்தந்திரம் வகுக்கிறார்

புரட்சிப் போருக்கு சீனா வழியாக ஆயுத உதவி செய்ய மறுத்தபோதும், சமாதான முயற்சி என்ற பெயரில் துரோக ஒப்பந்தத்தை திணிக்க முயன்றபோதும் இந்த சோசலிச கபட வேடதாரிகளை ஹோ-சி-மின் எதிர்க்கவோ அம்பலப்படுத்தவோ செய்யவில்லை.

சித்தாந்தத் துறையில் அவர் காட்டிய இந்த பலவீனத்தின் விளைவாக, விடுதலைக்குப் பின்னர் வியட்நாமிய கம்யூனிஸ்ட் கட்சி ரஷிய சமூக ஏகாதிபத்தியத்தின் அடிவருடியாகி, நாட்டை ரஷியாவுக்கு அடிமைப்படுத்தியது. தென் சீனப் பிராந்தியத்தில் ரஷியாவின் வேட்டை நாயாக வியட்நாம் சீரழிந்து, கம்பூச்சியாவையும் லாவோசையும் ஆக்கிரமித்தது. சீனாவுடன் எல்லைத் தகராறை செயற்கையாக உருவாக்கி அநீதியான யுத்தத்தில் இறங்கியது. சுயசார்பான பொருளாதாரத்தைக் கட்டியமைக்க மறுத்து ரஷிய தயவை நம்பியிருந்த வியட்நாம், இன்று உலக வங்கியிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இடர்ப்பாடும் துன்பதுயரமிக்கதாயினும் புரட்சிகர சித்தாந்தத் தெளிவுடன் உறுதியாக செயல்பட வேண்டியதன் அவசியத்தை, இன்றைய வியட்நாம் எதிர்மறை அனுபவமாக உலகப் பாட்டாளி வர்க்கத்துக்குப் போதிக்கின்றது.

தோழர் ஹோ-சி-மின் சித்தாந்தத் துறையில் நடுநிலையை மேற்கொண்ட போதிலும் அவர் உணர்வு பூர்வமாக திரிபுவாதத்தை ஏற்று அங்கீகரிக்கவில்லை. அதன் காரணமாக தேச விடுதலைப் போரைக் கைவிடவும் இல்லை. கடினமான தேச விடுதலைப் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால், ஊக்கமாக சித்தாந்தப் போராட்டத்தில் பங்கேற்க இயலாத நிலையில் அனைவரும் ஒன்றுபட வேண்டுமென பாமரத்தனமாக அவர் நம்பினார். அவரது ஒட்டுமொத்த புரட்சி வாழ்வைப் பார்க்கும் போது இக்குறை அற்பமானதுதான். எனினும் சித்தாந்த விவகாரங்களில் நடுநிலைமை வகிப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதை உலகப் பாட்டாளி வர்க்கம் மறந்து விட முடியாது.

### மாபெரும்.புரட்சியாளர்

தோழர் ஹோ-சி-மின்னிடம் சித்தாந்த பலவீனங்கள் இருந்த போதிலும் நமது சகாப்தத்தின் மாபெரும் கம்யூனிசப் புரட்சியாளர்களில் அவரும் ஒருவர். அவரைப் புறக்கணித்து விட்டு வியட்நாமை யாரும் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. எளிய வாழ்வும், கடின உழைப்பும், நாட்டுப்பற்றும், மக்களுடன் ஐக்கியமும் கொண்ட அவர் மிகச் சிறந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி. காலனி - அரைக் காலனி நாடுகளின் விடுதலைக்கான பாதை, நீண்ட கால மக்கள் யுத்தப் பாதையே என்பதை நிரூபித்துக் காட்டிய மார்க்சிய - லெனினியவாதி அவர்.

இந்திய புதிய ஜனநாயகப் புரட்சியில் ஈடுபட்டுள்ள நாம் அவரது மிகச் சிறந்த கம்யூனிசப் பண்புகளை நமதாக்கிக் கொண்டு உறுதியுடன் முன்னேறுவோம். தோழர் ஹோ-சி-மின் நினைவை நெஞ்சிலேந்தி விவசாயிகளின் விவசாயப் புரட்சியைச் சாதிக்க தொடர்ந்து போராடுவோம். தோழர் ஹோ-சி-மின் புகழ் நீடூழி வாழ்க! ஒழியட்டும் ஏகாதிபத்தியம்! ஓங்கட்டும் புரட்சி!

● மனோகரன்.



படிப்பகம்

www.padippakam.com

# கடின உழைப்பும் கறுப்பு வைரமும் கொள்ளை!



உலகிலேயே நிலக்கரி வளம் மிகுந்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஆனால் மற்ற நாடுகளை காட்டிலும் நிலக்கரியின் விலை இந்தியாவில்தான் அதிகம். நிலக்கரி தட்டுப்பாடும் இங்குதான் அதிகமாக நிலவு கிறது.

நிலக்கரியைச் சார்ந்து இயங்கும் எஃகு வார்ப்பட ஆலைகள், பீங்கான் - களிமண் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை கள், இன்னும் பல பெரிய - சிறிய ஆலை கள், அனல் மின் நிலையங்கள், ரயில்கள் அனைத்தும் நிலக்கரி தட்டுப்பாட்டினால் சிலசமயம் இயங்காமல் நின்று போகின்றன. நிலக்கரியையே எரிபொருளாக கொண்டு இயங்கும் சிறுதொழில்களோ நிரந்தரமாக இயங்கமுடியாமல் நசிவடைகின்றன.

மின்சாரத்திற்கும் நாம் கணிசமான அளவு அனல்மின் நிலையங்களைத்தான் சார்ந்து இயங்க வேண்டியுள்ளது. ஆனால் நிலக்கரி தட்டுப்பாட்டினால் அனல்மின் நிலையங்கள் இயங்காமல் நின்று போவதனால் மின்சாரத் தட்டுப்பாடும் உருவாகி அதனைச் சார்ந்திருக்கும் தொழில்களும் பாதிப்பிற்குள்ளாகின்றன. நிலக்கரி ரயில்கள் என்றில்லாமல் மின்சார ரயில்களின் போக்குவரத்தும் பாதிப்புக்குள்ளாகின்றன.

எண்ணூர், தூத்துக்குடி அனல்மின் நிலையங்கள் சில மாதங்களுக்கு முன்பு நிலக்கரி தட்டுப்பாட்டினால் இயங்காமல் நின்று போனதை நாம் அறிவோம். இதுதான் இந்தியாவில் அனேக அனல்மின் நிலையங்களின் நிலைமை.

நிலக்கரி தட்டுப்பாட்டை ஈடுகட்டுவதற்காக ஆஸ்திரேலியாவிலிருந்தும், நியூசிலாந்திலிருந்தும் இந்தியாவிற்கு நிலக்கரி இறக்குமதி செய்யப்படுகிறது. இதனால் மீண்டும் நிலக்கரி விலை ஏறுகிறது; அந்நிய கடன் அதிகரிக்கிறது (நிலக்கரி, இரும்பு, எஃகு முதலான அடிப்படை பொருட்களின் விலையேறினால் வலைப்பின்னல் போல் அனைத்துப் பொருட்களின் விலையும் ஏறும்). மொத்தத்தில் நமது நாட்டின் உற்பத்தி - இயக்கம் பாதிக்கப்படுகிறது. இதன் விளைவுகள் - சுமைகள் எல்லாம் உழைக்கும் மக்கள் தலையில்தான் விடிகிறது.

இவை ஏதோ இயற்கையாக அல்லது தற்செயலாக நடக்கிற விஷயமல்ல. செயற்கையாக திட்டமிட்டே நடத்தப்படுவது. நிலக்கரி சுரங்கங்களில் நடக்கும் மாஃபியாக்களின் கடத்தலினால் விளைவது; அரசு போலீசு அதிகாரிகள், ஓட்டுக் கட்சிகள், மாஃபியாக்களின் கூட்டுக் கொள்ளையினால் உருவாகிற பாதிப்பு.

சுரங்கங்களிலிருந்து நிலக்கரியை கடத்துவது, சட்ட விரோத சுரங்கங்களை நடத்துவது, அரசு கிடங்குகளை சூறையாடுவது என ராஜ்ஜியம் நடத்தும் மாஃபியா கும்பல்கள் பற்றிய செய்திகளை பீகார் தான்பாத் சுரங்கங்களில் இருந்துதான் கேட்டுக்கொண்டிருந்தோம். இன்று இது ஒரிசாவிலும் பரவியிருக்கிறது.

ஒரிசாவில் தால்ச்சர் என்னுமிடத்தில் 800 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் நிலக்கரி வயல்கள் பரந்து விரிந்துள்ளன. இதில் 'தென்கிழக்கு நிலக்கரி வயல்கள் நிறுவனம்' (SECL) எனும் அரசுத்துறை நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் 5 திறந்தவெளிச் சுரங்கங்களும், 3 நிலத்தடி சுரங்கங்களும் மட்டுமே இயக்கப்பட்டு செயல்படுகின்றன. இதுதவிர எண்ணற்ற சுரங்கங்கள் சட்ட விரோதமாக மாஃபியாக்களால் இயக்கப்படுகின்றன.

திறந்தவெளிச் சுரங்கங்களில் 5 அல்லது 6 அடி ஆழத்திற்கு வெட்டினாலே ஏராளமான நிலக்கரி கிடைக்கிறது. அனைத்தும் மாஃபியா குண்டர்களால் சூறையாடப்படுகிறது. இங்கிருந்து வருடத்திற்கு 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலக்கரி மாஃபியா கும்பலால் கடத்தப்படுகிறது. இவை அரசு அதிகாரிகளின் உடந்தையோடு பகிரங்கமாக நடந்து வருகிறது.

''குறைந்தது 10 சட்டவிரோத சுரங்கங்களாவது மாஃபியாக்களின் கையில் இருக்கிறது. கோபால் பிரசாத், குகும்பல் குமிதா, பாலுகாதியா, ஜாரதா, டாலிரிங்கா, கான்கீ, ராய்ஜ்ஹரன், நிசா, கோசலா முதலான இடங்களிலுள்ள பல நிலக்கரி சுரங்கங்கள் மாஃபியாக்களின் கடத்தல் தொழிலுக்கு கள

படிப்பகம்

www.padippakam.com

மாக உள்ளன. இங்கிருந்து கிடைக்கும் நிலக்கரி எவ்வித தடையும் இல்லாமல் அரசு அதிகாரிகள் உதவியோடு ஏராளமாகக் கடத்தப்படுகிறது. நாளொன்றுக்கு 60-லிருந்து 150 வரை கடத்தல் லாரிகள் தால்ச்சர் பகுதியை விட்டு வெளியேறுகின்றன'' என்கிறார் இப்பகுதியின் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அனிருதா ப்ரதன்.

அரசின் சுரங்கங்களில் இருந்து மாஃபியாக்கள் நிலக்கரி கடத்துவதற்கு பொய்க்கணக்கு எழுதி அதிகாரிகள் உதவி செய்து வருகிறார்கள். அரசிடம் நிலக்கரி கோரி மனுபோடும் பல தொழிற்சாலை - வார்ப்படச் சாலைகளுக்கு மாஃபியாக்கள்தான் அரசுக்குப் பதிலாக நிலக்கரியை சப்ளை செய்கிறார்கள். ஜகத்பூர் மற்றும் சில பகுதிகளிலுள்ள அரசு கிடங்குகளுக்கு நிலக்கரி சப்ளையாவதில்லை; இக்கிடங்குகளுக்கு மாஃபியாக்களின் கடத்தல் நிலக்கரிதான் சப்ளையாகிறது. ஒரிசாவில் பல தொழிற்சாலைகள் நிலக்கரிக்காக மாஃபியாக்களைத்தான் சார்ந்து இயங்க வேண்டியிருக்கின்றன.

அரசு அதிகாரிகளை ஊழல்படுத்தி நிலக்கரியை கடத்துவது - விற்பது என்பது மாஃபியாக்களின் ஒரு வழிமுறைதான். அதுதவிர நேரடியாக பல வழிகளிலும் முறைகளிலும் நிலக்கரியை கடத்துகிறார்கள் - விற்கிறார்கள்.

ஜகன்னாத் நிலக்கரி சுரங்கத்திலிருந்து தால்ச்சர் அனல் மின் நிலையத்திற்கும், இந்திய உர நிறுவனத்திற்கும் 'கன்வேயர் பெல்ட்'டுகள் மூலம் நிலக்கரி எடுத்துச் செல்லப்படுகிறது. வழியில் இந்நிலக்கரியை மாஃபியாக்கள் 'பெல்ட்'டுகளிலிருந்து தங்கள் லாரிகளுக்கு கடத்துகிறார்கள். நிலக்கரி சுரங்கங்களிலிருந்து ரயில் நிலையத்திற்கும், நிலக்கரி கிடங்குகளுக்கும் நிலக்கரி ஏற்றிச் செல்லும் அரசு லாரிகளை துப்பாக்கி முனையில் வழிமறித்து நிலக்கரியை கடத்துகின்றனர். ஓடும் ரயில்களிலிருந்தும் கடத்துகிறார்கள்.

நிலக்கரி கிடங்குகளிலிருந்தும், வயல்களில் உள்ள நிலக்கரி குவியலிலிருந்தும், துப்பாக்கி முனையில் காவலாளிகளை மிரட்டி அல்லது சுட்டுக் கொன்று நிலக்கரியை கடத்துகின்றனர். அதற்கும் மேலாக தேரா, தெற்கு பாலந்தா, பாரத்பூர் ஆகிய பகுதிகளிலுள்ள சுரங்கங்களில் கைத்தொழிலாளர்கள் நிலக்கரியை வெட்டியெடுத்து விற்பதை (கைத்தொழில் திட்டத்தின் மூலம்) மிரட்டி அல்லது கொன்று போட்டு இவர்களிடமிருந்தும் நிலக்கரியை அபகரித்துக் கொள்கிறது மாஃபியா கும்பல்.

தங்கள் தொழிலுக்கு குறுக்கே வருபவர்களை தங்களுக்கு உடந்தையாக இருக்க மறுப்பவர்களை, தங்களை எதிர்த்து குரல் கொடுப்பவர்களை சித்திரவதை செய்து கொல்வது இவர்களது வழக்கம். சில வாரங்களுக்கு முன் ஒரு படித்த இளைஞர் மாஃபியாக்களின் தங்கு தடையற்ற கடத்தலுக்கு எதிராக - கடத்திய லாரியை போலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கும்படி குரல் கொடுத்தார். மாஃபியாக்கள், அந்த கடத்தல் லாரியின் பின்னாலேயே இவரை நைலான் கயிறால் கட்டி இழுத்துப் போய் கொன்றிருக்கிறார்கள்.

தால்ச்சர் சுரங்கங்களில் இருந்து நிலக்கரியை பிற மாவட்டங்களுக்கோ - மாநிலங்களுக்கோ அருகிலுள்ள கட்டாக் நகரிலிருந்துதான் எடுத்துச் செல்ல முடியும். எந்த வாகனமும் தால்ச்சரிலிருந்து கட்டாக்கை அடைய வேண்டுமானால், 8 போலீஸ் நிலையத்தையும், பல சோதனைச் சாவடிகளையும் கடந்துதான் வரமுடியும். ஆனால், மாஃபியாக்களின் நிலக்கரி கடத்திவரும் லாரிகள் எவ்வித இடையூறுமின்றி கட்டாக் நகரை வந்தடைகின்றன.

போலீசார் கண்துடைப்பிற்காக அல்லது கேஸ் பிடிப்பதற்காக சில சமயம் கடத்தல் லாரிகளைப் பிடிப்பதுண்டு

10,000 ரூ. வரை அபராதம் வசூலித்து விட்டு லாரியை விட்டு விடுகிறார்கள் அல்லது மாஃபியாக்களின் கூலியாட்கள் மீது அவர்களாக தனிப்பட்ட முறையில் குற்றம் செய்ததாக (மாஃபியாக்களின் ஒப்புதலோடு) வழக்கு பதிவு செய்த பிறகு விட்டு விடுகிறார்கள். 29.8.89 14.12.89 தேதிகளில் ORD 7521 எண் கொண்ட கடத்தல் லாரியும், 8.10.89 4.12.89, 6.2.90- ஆகிய தேதிகளில் OAX 4125 எண் கொண்ட கடத்தல் லாரியும் பறிமுதல் செய்யப்பட்டதாக போலீஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. வேடிக்கை என்னவென்றால் இன்றும் அதே லாரிகள் நிலக்கரியை கடத்திச் சென்று கொண்டு இருக்கின்றன

ஒரிசாவின் கட்டாக் மற்றும் அங்குல் ஆகிய நகரங்களில்தான் மாஃபியாக்கள் முகாமிட்டு நட்சத்திர விடுதிகளில் வருடம் முழுவதும் அறை எடுத்து தங்கியிருக்கின்றனர். இங்கிருந்து கூலியாட்கள் - அடியாட்கள் மூலம் தமது தொழிலை நடத்தி வருகிறார்கள். அரசு அதிகாரிகள், போலீசு அதிகாரிகள், அரசியல்வாதிகள் அடிக்கடி இந்த விடுதிகளுக்கு வந்து மாஃபியாக்களை சந்திப்பதும், மது - மாது என பொழுதுபோக்குவதும் வழக்கமாக நடக்கிறது. இங்கு கோடிக்கணக்கில் பணம் புரளுவதையும், மாஃபியாக்களின் ஆட்கள் காய்கறி வாங்குவதுபோல் லாரி விற்பனையாளர்களிடம் லாரிகள் வாங்குவதையும் சாதாரணமாக பார்க்க முடியும்.

போதைப் பொருட்கள் - எலக்ட்ரானிக் பொருட்கள் - தங்கம் கடத்துவது (நகர்புற மாஃபியாக்கள்), சந்தனக்கட்டை - யானைத் தந்தம் கடத்துவது (காடு - மலைப்புற மாஃபியாக்கள்), நவீன ஆயுதங்களை - விமானங்களை - ராணுவ ரகசியங்களை கடத்துவது (சர்வதேச மாஃபியாக்கள்) என நாடெங்கும் வேர்விட்டிருக்கும் மாஃபியாக்கள், இதுபோன்ற கிராமபுறங்களில் - பீகார், ஒரிசா நிலக்கரி சுரங்கப் பகுதிகளிலும் பரவி தலையெடுத்து வருகிறார்கள்.

மாஃபியாக்கள் தங்கள் 'தொழில்' மூலம் கிடைக்கும் வருமானத்தில் இருந்து பல தனியார் கம்பெனிகளில் முதலீடு செய்திருக்கிறார்கள்; பங்கு மார்கெட்டில் பங்குகளை வாங்குகிறார்கள் - விற்கிறார்கள்; நட்சத்திர விடுதிகள் கட்டுகிறார்கள்; சினிமாக்களில் முதலீடு செய்கிறார்கள். தொழிலாளர் - விவசாயிகள் போராட்டங்களை ஒடுக்குவதற்காகவும் தாக்குவதற்காகவும் முதலாளிகளின் - பண்ணையார்களின் கைத்தடியாக இருந்தவர்கள் இன்று முதலாளிகளாக மாறிவிட்டார்கள் - மாறிவருகிறார்கள்.

■ பழநி

## பீகாரில் மாஃபியாக்களுக்கு எதிராக

பீகாரின் நிலக்கரிச் சுரங்க மாஃபியாக்களும் அவர்களின் பங்காளிகளான போலீசும் அதிகாரிகளும் இப்போது பீதியில் உறைந்து போயுள்ளனர். சோட்டா நாக்பூர், சந்தால் பர்கானா வட்டாரத்து பழங்குடி மக்கள் நக்சல்பாரி புரட்சியாளர்களின் தலைமையில் திரண்டு, சாலை மறியல் போராட்டம் நடத்துவதைக் கண்டு அவர்கள் அலறுகிறார்கள். மத்திய நிலக்கரிச் சுரங்க வயல் நிறுவனத்(CCL)திலிருந்து லாரி மூலமோ ரயில் மூலமோ நிலக்கரியை வெளியே கொண்டு செல்ல முடியவில்லை; இதனால் நாளொன்றுக்கு ஒருகோடி ரூபாய் நட்டமாகிறது என்று அவர்கள் ஒப்பாரி வைக்கிறார்கள்.

ஹசாரிபாக் மாவட்டத்தில் உள்ள டோபா, பிந்த்ரா சுரங்கரத் திட்டத்திற்காக பழங்குடி மக்களிடமிருந்த நிலங்கள் பலாத்காரமாகப் பிடுங்கப்பட்டன. வாக்களித்தபடி அவர்கள் அனைவருக்கும் இச்சுரங்கங்களில் அரசு வேலைவாய்ப்பளிக்கவில்லை. வேலை கிடைத்தவர்களுக்குக்கூட இப்போது நவீனமயமாக்கலின் விளைவாக வேலை பறிபோய் விட்டது. பிழைக்க வழியின்றிப் புறக்கணிக்கப்பட்ட அவர்கள் நவீனமயமாக்கலை எதிர்த்தும், மீண்டும் பழங்குடி மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கோரியும் நக்சல்பாரி புரட்சியாளர்களின் தலைமையிலான ஜனவாடி மஸ்தூர் சங்கத்தில் அணிதிரண்டு, சாலைமறியல் போரில் முன்னேறி வருகின்றார்கள்.


இப்பழங்குடி மக்களைக் கொத்தடிமைகளாக்கி, ஒட்டச் சுரண்டி சித்திரவதை செய்யும் நிலக்கரி சுரங்க மாஃபியாக்களுக்கு எதிராகவும் அவர்களின் கூட்டாளிகளான சுரங்க அதிகாரிகள் - போலீசு கும்பலுக்கு எதிராகவும் இவர்கள் போராடுகின்றனர். இதோடு, சாத்ரா பகுதியிலுள்ள காடுகளிலிருந்து மரங்களை வெட்டிக் கடத்தும் மாஃபியா கும்பலுக்கு எதிராகவும், விடாப்பிடியாக போராடி வருகிறார்கள். அண்மையில் மாஃபியா கும்பலின் கடத்தல் லாரிகளை நக்சல்பாரிகள் கைப்பற்றியதும் பீதியடைந்த அக்கும்பல் இந்த வட்டாரத்தை விட்டே ஓடிவிட்டது. புரட்சியாளர்களின் செல்வாக்கும், பழங்குடி மக்களின் புரட்சிப் போராட்டங்களும் பெருகத் தொடங்கியதும், ''அவர்கள் ஏறத்தாழ போட்டி அரசாங்கமே நடத்துகிறார்கள். இதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது'' என்று துணை ராணுவப் படைகளைக் கொண்டு அடக்கத் துடிக்கிறது அரசு.

பீகாரில் நிலப்பிரபுக்கள், காண்டிராக்டர்கள், காட்டிலாகா அதிகாரிகளின் சுரண்டல் - ஒடுக்குமுறைக்கு எதிராக பழங்குடி மக்களைத் திரட்டிப் போராடி அவர்கள் நம்பிக்கை நட்சத்திரமாக நக்சல்பாரிகள் உயர்ந்துள்ளார்கள்.



படிப்பகம்

www.padippakam.com




## புதுப் புனல் இந்த இதழில்

# ரஷ்யாவில் மோசடிகள் உண்டா



சோளக் கொல்லை பொம்மையிலும் கைவிட்டுத் துழாவும் அளவுக்கு மோசடிக்கும்பல் பெருத்துவிட்டது என்று விளக்கும் சித்திரம்!

... இப்படி ஒரு சிறப்புக் கட்டுரை வெளியிட்டிருந்தது. இந்தியாவிலுள்ள சோவியத் தூதரகச் செய்தித் துறை நடத்தும் தமிழ் மாதப் பத்திரிக்கையான புதுப்புனல் (மலர்:2, இதழ்:12, டிசம்பர் 1989). இது எங்களுக்கு அதிர்ச்சியோ, ஆச்சரியமோ அளிக்க வில்லை. ருசியாவில் இன்னமும் சுரண்டலும் சுரண்டும் வர்க்கமும் வர்க்கப் போராட்டங்களும் இருக்கின்றன. ருசியா இப்போது ஒரு சோசலிச நாடல்ல; முதலாளித்துவ நாடுதான் என்று நீண்டகாலமாகவே கூறிவருகிறோம். ஆனால் போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளின் தலைவர்கள் இந்த உண்மைகளை மறுத்து, மறைத்து தமது அணிகளை ஏமாற்றி வருகின்றனர். நாம் தரும் ஆதாரங்கள் முதலாளித்துவ ஏடுகள், உளவாளிகளின் அவதூறுகள் என்று புளுகி வருகிறார்கள்.

ஆனால் இதுபோன்ற ஆதாரங்கள் பலவும் ருசியா மற்றும் பிற முன்னாள் சோசலிச நாடுகளின் ஏடுகளிலேயே வருகின்றன. இன்னும் போதை மருந்து, குடி, விபச்சாரம், ஆபாசம், வேலையின்மை, விலையேற்றம், பற்றாக்குறை ஆகியவை அந்நாடுகளில் அதிகரித்து வருவதாகவும் எழுதுகின்றன. இதற்கு மாறாக 'பிரஸ்ட்டோரிகா' 'கிளாஸ் நாஸ்ட்' என்று முதலாளித்துவ தீர்வுகளையே முன்வைக்கிறது, கோர்பி கும்பல். போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளில் எஞ்சியுள்ள புரட்சிகர அணிகள் உண்மையறிந்து தலைமையின் மோசடிகளைப் புரிந்து கொள்வதற்காக இந்தக் கட்டுரையை இங்கே வெளியிடுகிறோம்.

### மோசடிகளுக்கு அளவே இல்லை

இரண்டாண்டுகளுக்கு முன்னர் சோவியத் பத்திரிஷககள் சோவியத் யூனியனில் திட்டமிட்டு இழைக்கப்படும் குற்றங்களைப் பற்றி எழுதத் தொடங்கின. அச்செய்திகளைக் காவல் துறையினர் வேண்டாவெறுப்பாக ஒப்புக் கொண்டனர்.

சோவியத் யூனியனில் புதிதாகத் தோன்றியுள்ள ஒரு வகைக் குற்றச் செயலான மோசடி பற்றி முன்னணி சோவியத் குற்றவியலாளர்கள் கலந்து கொண்ட ஒரு வட்டமேசைக் கூட்டம் பற்றிய தகவல்களை அண்மையில் **நியூ டைம்ஸ்** வார ஏடு பிரசுரித்தது.

சோவியத் யூனியனில் நடைபெறும் மோசடிகள் மேற்கத்திய நாடுகளில் நடைபெறுவவை வற்றைப் போன்றதல்ல: செல்வாக்கு மண்டலங்கள், குற்றம் புரிவதில் தனித் தேர்ச்சி, குற்றம் புரியும் கும்பல்கள், அதிகாரிகளுக்குக் கையூட்டுக் கொடுக்கும் முயற்சிகள் முதலியவை இங்கு உள்ளன.

படிப்பகம்

www.padippakam.com

1970ஆம் ஆண்டுகளின் மத்தியில் முதன் முதலில் சோவியத் யூனியனில் மோசடிகள் தோன்றின. ஆரம்பம் முதலே சித்திரவதை பயன்படுத்தப்பட்டது. ஆனால் தகவல் தொடர்பு சாதனங்களும் சட்டத்தை அமல் செய்யும் அமைப்புக்களும் மௌனம் சாதித்தன. திட்டமிட்டு புரியப்படும் குற்றங்களின் எண்ணிக்கை பெருகியது, ஆபத்தான அளவுக்குத் தேர்ச்சி பெற்றது. கள்ளச் சந்தைக்கும் கட்டளை-நிர்வாக அமைப்புக்கும் பிறந்த பூதமாக இருந்தது.

## மூல காரணங்கள்

1989ஆம் ஆண்டின் நாடாளுமன்றக் கூட்டத்தொடர்கள், பொருளாதாரத்தில் மார்க்கெட் உறவுகளை மீண்டும் ஏற்படுத்தும் பிரச்சினையிலேயே அதிகக் கவனம் செலுத்தின. 1970ஆம் ஆண்டுகளிலும் கூட மார்க்கெட் உறவுகள் இருக்கத்தான் செய்தன, ஆனால் சட்டவிரோதமாக இருந்தன. கட்டளைகள் மூலம் பொருளாதாரத்தை நிர்வகிக்கும் முறை, செல்வாதாரங்களையும் நிதிகளையும் கடுத்தமான மத்தியப்படுத்தப்பட்ட வினியோக முறையையும் ஆதாரமாகக் கொண்டிருந்தது. அவற்றைப் பெறுவதில் மற்றவர்களை முந்திவிட விரும்பியவர்கள் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டியிருந்தது. சோவியத் யூனியனில் மொத்த விற்பனைச் சந்தை இப்போதுதான் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் வெகுகாலமாகவே கள்ளச் சந்தை இருந்து வருகிறது. கள்ளச் சந்தைக்குத் துறை சார்ந்த தடைகளே இல்லை, அது சட்டத்தையும் தார்மிக நெறிகளையும் துச்சமெனக் கருதுகிறது. அரசுக்குச் சொந்தமான தொழில் துறை நிறுவனங்களின் நிர்வாகிகள் தமக்குக் கூடுதல் நிதிகளும் செல்வாதாரங்களும் கிடைப்பதற்காக அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து அதன் மூலம் சட்டத்தை மீறினர். மக்கள், சட்டங்கள், செல்வாக்கு முதலியவை விலை கொடுத்து வாங்கவும் விற்கவும் பட்டன. அதுவே குற்றம் சார்ந்த தார்மீக நெறிகளின் ஆரம்ப வேர்களாக அமைந்தன.

## லஞ்ச லாவண்யம்

தேக்கநிலை நிலவிய ஆண்டுகள் பொருளாதார உறவுகளையும் அவற்றில் ஈடுபட்டிருந்த சோவியத் மக்களையும் ஒழுக்கக்கேடர்களாக்கின. சோவியத் மக்களிடையே சமத்துவம் நிலவுகிறது என்ற கூற்று உண்மை நிலைக்குப் புறம்பானதாக இருந்தது: மக்களில் ஒரு சிறு பிரிவினர் மட்டுமே எல்லாச் சலுகைகளையும் பெற்றிருந்தனர், சிறந்த வீட்டு வசதியையும் பெற்றனர், கார்களையும், முதல் தரமான மரச்சாமான்களையும் உணவுப் பொருள்களையும் வாங்கினர், புகழ்பெற்ற வாசஸ்தலங்களுக்கான வவுச்சர்களைப் பெற்றனர். உயர்ந்த அரசாங்கப் பதவி அல்லது கட்சிப் பதவி அல்லது சரியான நேரத்தில் சரியான புள்ளிகளுடன் தொடர்புகள், கையூட்டு, சேவைகள் ஆகியவற்றின் மூலம் அவற்றைப் பெற முடிந்தது. பின்னால் கூறப்பட்டவர்களின் பாதை சட்ட விரோதமானது என்றோ அவமானகரமானது என்றோ கருதப்படவில்லை. ''எதை எப்படிச் செய்ய வேண்டும் என்பது அவனுக்குத் தெரியும்'' என்று மோசடிக்காரர்களைப் பற்றிப் பெருமையுடன் கூறப்பட்டது.

## செழிப்பான நிலம்

சீர்குலைந்திருந்த பொருளாதார உறவுகளும் தார்மிக நெறிகளும் திட்டமிட்டுக் குற்றம் புரிவதற்குரிய செழிப்பான நிலமாக இருந்தது. அதில் மோசடியும் ஒரு வகையாகும். குறைந்த முயற்சியில் அதிக லாபம் பெற மோசடிக்காரர்கள் விரும்புகின்றனர். ஆகவே இந்த மோசடிக்கு இலக்காகக் கூடியவர்கள் யார்? பெருமளவில் சட்ட விரோதமான வருவாயுள்ளவர்களும் குட்டு உடைந்து விடுமோ என்று கவலைப்படுபவர்களுமே அவர்கள். சட்ட விரோதமாகக் கோடீஸ்வரர்களாவோரின் எண்ணிக்கை பெருகி வருகிறது. அவர்கள் தமது பணத்தை இப்பொழுதெல்லாம் மூடி மறைப்பதில்லை, சாதாரணமாக விலை கொடுத்து வாங்க முடியாத பொருள்களை எல்லாம் அவர்கள் வைத்திருக்கின்றனர். இப்போதைய மோசடிக்காரர்களின் குறிக்கோளே அவைதான். மோசடிக்காரர்கள் ஒருபோதும் அதிகாரிகளிடம் புகார் கூறமாட்டார்கள், அவர்களுக்குப் பொது மக்களிடமிருந்தும் இரக்கம் கிட்டாது.

இந்த மோசடிகள் பெரிஸ்த்ரோய்க்கா காலத்தின் காட்சியுண்மை என்று பலர் கருதுவது தவறானதாகும். ஏனெனில் இக் காலம் சுயவேலை வாய்ப்புகளுக்கும் கூட்டுறவு நடவடிக்கைகளுக்கும் பரந்த வாய்ப்புகளைத் திறந்து விட்டுள்ளது. கூட்டுறவு அமைப்புகள், மோசடிகளுக்கு இலக்காகக் கூடிய வாய்ப்புக்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளன. கட்டளை-நிர்வாக அமைப்பின் மிச்ச சொச்சங்கள், போதுமான அளவுக்கு வளர்ச்சியடையாத மொத்த விற்பனை வர்த்தகக் கட்டமைப்பு ஆகியவை மூலப் பொருள்களையும் தொழில் நுட்பங்களையும் சட்ட விரோதமாகப் பெறும் மார்க்கங்களை நாடுமாறு கூட்டுறவாளர்களைத் தூண்டுகின்றன.

## இழுபறி

திட்டமிட்டுச் செய்யப்படும் குற்றங்களை எதிர்த்துப் போரிட சட்டத்தை அமல் செய்யும் ஏஜென்சிகள் இதுவரை தயாராக இல்லை என்று குற்றவியல் நிபுணரான சொக்ரியாகோவ் கருதுகிறார். காவல் துறையினருக்கு அனுபவம் போதவில்லை: குடிகாரர்களையும் உள்ளூர் குற்றவாளிகளையும் சமாளிப்பது என்பது கடினமானது, தொழில் முறைக் குற்றவாளிகளை எதிர்த்துப் போராடுவது என்பது மிகமிகக் கடினமானதாகும். மாஃபியாவும் மோசடிக்காரர்களும் பெற்றிருக்கும் தொழில் முறைப் பயிற்சியும் தளவாடங்களும் போலீசாருக்கு இல்லை. சட்ட அம்சம் மற்றுமொரு பிரச்சினையாகும். அண்மைக் காலம் வரை குற்றவியல் சட்டத்தில் மோசடிகளைப் பற்றிக் குறிப்பிடப்படக் கூட இல்லை. ஆகவே மோசடிக்காரர்கள் இதர சட்ட ஷரத்துக்களின்படிக் குறைந்த தண்டனை பெற்று வந்தனர் அல்லது விடுவிக்கப்பட்டு வந்தனர்.

''மோசடி பரவுவதனால் பணம் குவிகிறது. இப் பணம் குற்றவாளிக் கும்பல்களுக்கே செல்கிறது. ஏனெனில் சட்ட விரோதமாக ஈட்டப்பட்ட பணம் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்கவும் கொலைகாரர்களுக்குக் கூலி கொடுக்கவும் பயன்படுத்தப்பட முடியும். குற்றப் புலனாய்வுத் துறையினால் கண்டறியப்பட்டுள்ள திட்டமிட்டுக் குற்றம் புரியும் கும்பல்களில் ஐந்தில் ஒரு பகுதியினருக்கு அரசாங்கம் மற்றும் கட்சியின் உயர் பதவியிலுள்ளவர்களின், நீதிமன்றங்கள், புரொகுரேட்டரின் அலுவலகம், காவல்துறை முதலியவற்றின் ஆதரவு இருந்து வந்துள்ளது என்று ஆய்வுகள் காட்டுகின்றன.

''இடைக்காலப் புள்ளி விவரங்களின்படி மோசடிக்காரர்கள், கூட்டுறவு அமைப்புக்களின் லாபங்களில் 20-25 சதவிகிதத்தைப் பெற்றனர். இதர தொழில்கள் புரியும் இதர பிரிவினரும்கூட மாமூல் செலுத்துகின்றனர் என்பதை நாங்கள் அறிவோம்.

''புதிதாக உருவாக்கப்பட்டுள்ள குற்றத் தடுப்புப் பிரிவு மாஃபியாவுக்கு எதிரான முதல் அடியேயாகும். திட்டமிட்டுப் புரியப்படும் குற்றங்களை ஒழிப்பதற்காகப் பல இதர நடவடிக்கைகளையும் சோவியத் உள்துறை அமைச்சகத்தின் அதிகாரிகள் வகுத்து வருகின்றனர்.

தொகுப்பு: ஏ. புரோனின்

**போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளின் புரட்சிகரத் தோழர்களே! உங்கள் தலைவர்களின் புளுகுகளை மட்டும் நம்பாதீர். ருசிய ஏடுகளையும் படித்து உண்மையை அறியுங்கள்!**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர்: நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

www.padippakam.com

இதோ இந்த விளம்பரத்தில் வரும் கொழு கொழு சிறுவன் என்ன சொல்கிறான்! ''உங்கள் அப்பாவை விட என் அப்பா ரொம்ப நல்லவர்'' என்று மகிழ்ச்சியில் பொங்கி போகிறான்! அவன் அன்பு அப்பா பம்பாயில் உள்ள 'எஸ்ஸல் உலகம்' (Essel world) என்ற ஐந்து நட்சத்திர நவீன உல்லாச பூங்காவிற்கு அழைத்துச் செல்கிறார்! பூங்கா என்றால் நாம் செல்லும் ஆடு, மாடு காற்று வாங்கும் கார்ப்பரேஷன் பூங்கா அல்ல! இதோ அவனே சொல்கிறான் கேளுங்கள். ''நான் விரும்புகிற சவாரி எல்லாம் அங்கு உண்டு. அங்கு ஐஸ்கிரீம், சாக்லெட் எல்லாம் நிறைய சாப்பிடுவேன்! உன் அப்பா உன்னை திரும்பித் திரும்ப பழைய இடங்களுக்குதானே அழைத்துச் செல்கிறார்...!'' என்று அழகு காட்டுகிறான்.



இதோ இந்த சிறுமியை பாருங்கள்! இவள் 'கண்ணாமூச்சி' விளையாட்டுக்கு முகத்தை மூடிக்கொள்ளவில்லை. அதே பம்பாயில் இளம் விபச்சாரியாக இருக்கும் இவள், தன் முகம் தெரியாமல் இருக்க முகத்தை மூடிக்கொள்கிறாள்! உடலை விற்று பிழைப்பவள் தான். ஆனால் அவளுக்கும் மானம் இருக்கிறது! பல்லிளித்து 'போஸ்' கொடுக்க அவள் மேட்டுக்குடி பெற்றோர்களிடம் அன்பு மழையில் திளைப்பவள் அல்ல! இவள், சின்ன சின்ன ஆசைகளை தேக்கி வைத்து அடைய முடியாத நடுத்தர வர்க்கத்தில் பிறந்த பெண்ணாய் இருக்கலாம்! அல்லது சினிமா, டி.வி. சீரழிவு கலாச்சாரத்தால் பாதிக்கப்பட்டு உழைப்பாளி குடும்பத்திலிருந்து ஓடிவந்த பெண்ணாக இருக்கலாம்! எப்படியோ அதை அவள் கௌரவமாக நினைக்கவில்லை என்பது மட்டும் புரிகிறது.

குழந்தைகளும் தெய்வமும் ஒன்று என்று கூறிக்கொண்டே ஏழை குழந்தையை விபச்சாரியாகவும் மேட்டுக்குடி குழந்தைகளுக்கு அறிவையும் ஆற்றலையும் பெருக்கும் பொழுதுபோக்கு தருகிறது ஆளும் வர்க்கம். இதை இன்னும் எத்தனை நாள் தான் சகித்து வாழ்வது?

## இதுதான் இன்றைய இந்தியா




படிப்பகம்